தமிழ்நாடு அரசு

ஐந்தாம் வகுப்பு

தமிழ்

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2019
திருத்திய பதிப்பு - 2020

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விலை : ரூ

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

அழகிய தமிழில் அறிவுக்கருவூலம்; அடிப்படைத் திறன்களின் வளர்நிலைப் பெட்டகம்; உயர்தொடக்க நிலைக்கு உதவும் கற்றல் ஏணியாய் இப்பாடநூல்

கற்றல் நோக்கங்கள்
பாடப்பொருள் சார்ந்த குறிக்கோள்கள்

கற்பவை கற்றபின்
பாடப்பகுதிக்கு வலிமை சேர்க்கும் செயல்பாடுகள்

மதிப்பீடு
கற்றல் அடைவை அளவிடும் கருவி

சிந்தனை வினா
பாடப்பொருள்சார்ந்த விரிவான பார்வை

மொழியை ஆள்வோம்
மொழித்திறனை மேம்படுத்தும் செயல்பாடுகள்

மொழியோடு விளையாடு
ஆர்வமூட்டும் மொழி விளையாட்டுகள்

நிற்க அதற்குத் தக
கற்றுக்கொண்டதன் வெளிப்பாடு

செயல் திட்டம்
கற்ற கல்வியை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தும் செயல்கள்

பொருளடக்கம்

இயல்	பொருண்மை	தலைப்பு	பக்கம்
1	மொழி	தமிழின் இனிமை	1
		அறிவா? பண்பா? கவிதைப் பட்டிமன்றம்	4
		என்ன சத்தம்...	10
		மரபுச்சொற்கள்	13
2	கல்வி	மூதுரை	24
		கல்விச்செல்வமும் பொருட்செல்வமும்	27
		வறுமையிலும் நேர்மை	33
		பெயர்ச்சொல், வினைச்சொல்	36
3	இயற்கை	கடல்	45
		படம் இங்கே! பழமொழி எங்கே?	48
		தப்பிப் பிழைத்த மான்	53
		சொற்றொடர் அமைப்பு முறை	59
4	அறிவியல்/ தொழில்நுட்பம்	எதனாலே, எதனாலே?	68
		அறிவின் திறவுகோல்	71
		நானும் பறக்கப் போகிறேன்	76
		மூவிடப்பெயர்கள்	79
5	நாகரிகம்/பண்பாடு	திருக்குறள்	88
		தமிழர்களின் வீரக்கலைகள்	91
		கங்கை கொண்ட சோழபுரம்	98
		இணைப்புச்சொற்கள்	102
6	தொழில்/வணிகம்	உழவுப் பொங்கல்	110
		விதைத் திருவிழா	113
		நேர்மை நிறைந்த தீர்ப்பு	118
		அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி	122
7	நாடு/சமூகம்/ அரசு/நிருவாகம்	சிறுபஞ்சமூலம்	129
		வாரித் தந்த வள்ளல்	132
		தலைமைப் பண்பு	138
		இணைச்சொற்கள்	141
8	அறம்/தத்துவம்/ சிந்தனை	கல்வியே தெய்வம்	149
		நீதியை நிலைநாட்டிய சிலம்பு	152
		காணாமல் போன பணப்பை	156
		மயங்கொலிச்சொற்கள்	159
9	மனிதம்/ ஆளுமை	அறநெறிச்சாரம்	168
		புதுவை வளர்த்த தமிழ்	170
		நன்மையே நலம் தரும்	176
		மரபுத்தொடர்கள்	179
		அகரமுதலி	188

VUBA16

மின்னூல்

AFRMTP

மதிப்பீடு

B329_5_TAMIL_LANG

இணைய வளங்கள்

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்!

- உங்கள் திறன் பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியை பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியை திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தி பாடநூலில் உள்ள விரைவு குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.
- திரையில் தோன்றும் கேமராவை பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாட பகுதிகளை பயன்படுத்தலாம்.

QR GUIDE

குறிப்பு: இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஒரு QR code Scanner பயன்படுத்தவும்.

இயல்
ஒன்று

மொழி

கற்றல் நோக்கங்கள்

- செய்யுளைப் பிழையின்றிச் சரியான ஒலிப்புடன் படித்தல்.
- தன் கருத்தைக் கவிதை மூலம் வெளிப்படுத்த முயலுதல்.
- இரண்டு கருத்துகளை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பேசும் திறன் பெறுதல்
- மரபு என்பதன் பொருளை உணர்ந்து போற்றுதல்.
- மரபின் பல்வேறு வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

723KLE

பாடல்

தமிழின் இனிமை!

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

– புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

சொல்பொருள்

கனி – பழம்

நனி – மிகுதி

கழை – கரும்பு

நல்கிய– வழங்கிய

பாடல் பொருள்

கனியின் சுளையில் உள்ள சுவையும், முற்றிய கரும்புச் சாற்றின் சுவையும், மலரிலிருந்து எடுக்கப்பட்ட தேனின் சுவையும், காய்ச்சிய பாகின் சுவையும், சிறந்த பசு தந்த பாலின் சுவையும், தென்னை மரத்திலிருந்து பெறப்பட்ட குளிர்ந்த இளநீரின் சுவையும் இனிமையானவை. ஆனால், தமிழ் இத்தகைய சுவைகளையும்விட உயர்ந்தது. தமிழோ என் உயிர் போன்றது என்கிறார் பாரதிதாசன்.

ஆசிரியர் குறிப்பு

இப்பாடலைப் பாடியவர் பாரதிதாசன். புதுச்சேரியில் பிறந்த இவர், பாரதியாரின் மீது கொண்ட பற்றினால், கனக சுப்பு ரத்தினம் என்ற தம் இயற்பெயரைப் பாரதிதாசன் என மாற்றி அமைத்துக்கொண்டார். இவர் பாடிய இப்பாடல், பாரதிதாசன் கவிதைகள் என்னும் நூலின் முதல் தொகுப்பில், தமிழின் இனிமை என்னும் தலைப்பில் அமைந்துள்ளது.

கற்பவை கற்றபின்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக் காட்டுக.
- பாடலை உரிய ஓசையுடன் பாடுக.
- பாரதிதாசன் தமிழை உயிர் என்கிறார். உங்களுக்குத் தமிழ் எது போன்றது? கலந்துரையாடுக.
- மொழி தொடர்பான பாடல்கள் மற்றும் கவிதைகளைப் படித்து மகிழ்க.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. 'கழை' இச்சொல் உணர்த்தும் சரியான பொருள் _____________

அ) கரும்பு ஆ) கறும்பு

இ) கருப்பு ஈ) கறுப்பு

2. கனியிடை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) கனி + யிடை ஆ) கணி + யிடை

இ) கனி + இடை ஈ) கணி + இடை

3. பனி + மலர் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) பனிம்மலர் ஆ) பனிமலர்

இ) பன்மலர் ஈ) பணிமலர்

ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) கழையிடை – ---------- + ----------

ஆ) என்னுயிர் – ---------- + ----------

இ. பெட்டியிலுள்ள சொற்களைப் பொருத்தி மகிழ்க.

கரும்பு	
வெல்லம்	
பசு	
தென்னை	

1. பால் – ______ 2. சாறு – ______

3. இளநீர் – ______ 4. பாகு – ______

ஈ. இப்பாடலில்வரும்ஒரேஓசையுடையசொற்களைஎடுத்துஎழுதுக ___________

உ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக

_________ _________

ஊ. பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக._______________

எ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?

2. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?

ஏ. சிந்தனை வினா

பாரதிதாசன் சிலவற்றை இனியன என்று கூறுகிறார்.
உனக்கு எவையெல்லாம் இனிமையானவை? ஏன்?

கவிதைப் பட்டிமன்றத்துக்கான அறிமுகம்

பேசுதல் என்பது அடிப்படைத்திறன் எனில், பேச்சாற்றல் என்பது உயர்நிலைத் திறன். பேசுதலின் வளர்நிலையே பேச்சாற்றல். அத்தகைய பேச்சாற்றல் திறனை வளர்க்கும் பாடங்களுள் ஒன்று, இக்கவிதைப் பட்டிமன்றம்.

பலர் நிறைந்த அவையினிலே தாம் இயற்றிய கவிதையை வெளியிட்டபோது, பாரதியாருக்கு 11 வயதுதான். ஆதலால், கவி பாடும் திறமையை இளமையிலேயே வளர்த்துக்கொள்வது சாலச் சிறந்தது. இங்கு உரைநடைப் பாடமாக அமைந்துள்ள இப்பகுதி, இலக்கியத்தின் ஒரு வடிவமான கவிதை நடையில் அமைந்துள்ளமை, புதுமையின் நுழைவாயில். கவிதைக்குரிய சொல்லாடல், உவமைச்சிறப்பு, மோனை, எதுகை போன்ற நயங்கள் மேலும் பாடப்பகுதியைச் சிறப்புடையதாக்குகின்றன. மாணவர்கள், குரல் ஏற்றஇறக்கத்தோடும் தங்குதடையின்றியும் வாய்விட்டுப் படிக்கும்போதுதான் இக்கவிதைப் பட்டிமன்றப் பேச்சு, ஆற்றல் வாய்ந்த பேச்சுக்கலையாக மிளிரும். அதற்கான வாய்ப்பை ஆசிரியர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

இடம் : பள்ளிவளாகம் காலம் : பிற்பகல் 3. 00 மணி

உறுப்பினர்கள் : நடுவராகச் சிறப்பு விருந்தினர், ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் இன்சுவை, அருளப்பன், மதியொளி, சலீமா.

அறிவா? பண்பா?

நடுவர் : செந்தமிழே ! நறுந்தேனே !
செகம் போற்றும் செம்மொழியே !
முத்தமிழ் சொல்லெடுத்து
நற்றமிழ்ப் பட்டி மண்டபத்தின்
நடுவராக நான் வந்துள்ளேன்.
வணக்கம்
தித்திக்கும் தேன்தமிழில்
எத்திக்கும் புகழ்பரப்பும்
வித்தகக் கவிதையால்,
பெரிதும் தேவை அறிவா? பண்பா?
எனக் கவிதை வாசிக்க வருகின்றனர்
பாராட்டுக்குரிய நால்வர்,
தனித்துவமிக்க இன்சுவை,
சொல்லழகி சலீமா
அருமையான அருளப்பன்
ஒப்பற்ற மதியொளி......
முதல் கவிதை முத்தாய்ப் பாட
இனிதே அழைக்கின்றேன் இன்சுவையை......

இன்சுவை : புவி காக்கும் தமிழ்த் தாய்க்கும்
கவியரங்கத் தலைமைக்கும்
ஆன்றோருக்கும் சான்றோருக்கும்
அறிவுதான் முன்னேற்றத்தின்
ஆணிவேர் என்றே
அடித்துக் கூற வந்துள்ளேன்
'அக்னி' தந்த அப்துல்கலாம்
அசத்தியதும் அறிவாலே! அறிவாலே!
அறிவின் துணை கொண்டே
ஆயிரம் கண்டுபிடிப்பால் தாமஸ்
ஆல்வா எடிசனும் வாழ்கின்றார் அறிவாலே!
அறிவுமிகு மனிதனாக
அகிலத்தில் உயர்ந்து நின்றால்
அத்தனையும் நம் கையில்
என்று கூறி விடை பெறுகின்றேன்........

நடுவர் : இன்சுவையின் கவிதை
அறிவாயுதம்.......
அடுத்து, ஒளிரும் கவிதையுடன்
மதியொளி கவிபாட வருகின்றார்

மதியொளி : அகிலமெல்லாம் தமிழே மணக்கும்!
பண்புதான் வெற்றிப்படி என்றே
பறை சாற்ற வந்துள்ளேன்.
நற்பண்பு தூக்கிவிடும்
நம்மை உயரத்திலே
நற்பண்பு புகுந்து விட்டால்
நாவினிலே இனிமை வரும்
பண்பாலே சிறந்தவர் தாம்
பலருண்டு நம்மிடையே
புத்தரோடு வள்ளுவரும்
போதித்ததும் நற்பண்பே.....
நன்னெறியால் நிலைத்து
நிற்போம் உலகினிலே....

நடுவர் : மிளிர்கின்ற தமிழ்க் கவிதை
மதியொளியின் அரும் கவிதை....
அறிவாற்றல் பயன் பேச
அருளப்பன் வருகின்றார்
செறிவாற்றல் கவிதையொன்றைச்
செப்பிடவே வருகின்றார்.

அருளப்பன் : அறிவாற்றல் உள்ளவன்தான்
ஆளுகின்றான் அண்டத்தை
வெறும் பண்பை வைத்துக்கொண்டு
பெரும் பந்தல் போடலாமோ?
கூறும் பண்பில் நம்
வயிறும் நிறைந்திடுமோ?
நல்லவன் இருந்தால்
நாடென்ன முன்னேறுமோ?
வல்லவன் வகுத்ததன்றோ
வளமான இவ்வுலகு.....
தூண் போன்ற அறிவேதான்
வான் முகத்தைத் தொட்டிடுமே!.......

நடுவர் : பண்பின் பெருஞ்சிறப்பைப்
பொழிந்திடவே வருகின்றார்
சொல்லழகி சலீமா......

சலீமா : பண்பிலான் பெற்ற செல்வம்
பயனில்லை உலகோர்க்கே
பண்பேதான் அன்பை நல்கும்
பன்மடங்கு உயர்வைத் தரும்
உண்மை சொன்னேன் யாவர்க்கும்
அன்பின் மிகுதியால் அதியமான்
உயிர் காக்கும் நெல்லிக்கனியை
உவந்தளித்தான் ஔவைக்கு
அத்தனையும் எளியோர்க்கு
அன்னை தெரசா பெற்றுத் தந்தார்
குணமென்னும் நற்பண்பே
குன்றிலிட்ட விளக்கன்றோ......

நடுவர் : எல்லோரும் சிறப்பாக
நல்லோரே போற்றும் வண்ணம்
நற்கவிதை வாசித்தார்கள்......
என்னுடைய தீர்ப்பிற்கு
இசைந்தே தான் வருகின்றேன்.....
கண்ணுக்கு இருவிழி
கல்வியின் நேர்விழி
அறிவும் பண்பும்
சமமாக வைத்தேதான்
உறு புகழ் பெறுவோமே......
பொறி ஐந்தும் பண்பாகப்
பார் முழுவதும் அறிவாக
வலம் வருவோம் நாமே
உளம் நிறை வாழ்த்தோடு
நலம் இரண்டும் தானென்று
நல்ல தீர்ப்பு கூறி
நானும் விடைபெறுகின்றேன்.....
நன்றி வணக்கம்!

கற்பவை கற்றபின்

- அறிவு, பண்பு – இவற்றில் எது சிறந்தது என நீ கருதுகிறாய்?
- 'அறிவுதான் முன்னேற்றத்தின் ஆணிவேர்' – இது பற்றி உன் கருத்து என்ன?
- நாட்டின் [ஊரின், வீட்டின்] வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பவர்கள் நல்லவர்களா? வல்லவர்களா? வகுப்பறையில் சொற்போர் நிகழ்த்துக.

படித்து அறிக

இலக்கிய மன்றத் தொடக்க விழா

நிகழ்ச்சி நிரல்

- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை : க.காவியா, ஐந்தாம் வகுப்பு
- தலைமை உரை : தலைமையாசிரியர்
  ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி,
  அரியலூர்.
- சிறப்பு உரை : சிறப்பு விருந்தினர்
  முனைவர். இரா. அன்பழகன்
  மாவட்ட இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை.
- நன்றி உரை : செ. முத்து நிலவன், நான்காம் வகுப்பு
- நாட்டுப் பண்

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. நற்றமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) நல் + தமிழ் ஆ) நற் + றமிழ்
இ) நன்மை + தமிழ் ஈ) நல்ல + தமிழ்

2. 'உலகம்' என்னும் பொருளைக் குறிக்காத சொல் ....

அ) வானம் ஆ) அண்டம் இ) செகம் ஈ) அகிலம்

3. அறிவு + ஆயுதம் என்பதை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) அறவாயுதம் ஆ) அறிவாயுதம்
இ) அறிவு ஆயுதம் ஈ) அறிவாய்தம்

4 புகழ் இச்சொல்லின் எதிர்ச்சொல் ....

அ) இகழ் ஆ) மகிழ் இ) திகழ் ஈ) சிமிழ்

5 வெளிச்சம் – இச்சொல்லைக் குறிக்காத சொல் ....

அ) ஒளி ஆ) தெளிவு இ) விளக்கு ஈ) இருள்

ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) செந்தமிழ் – --------- + -----------

ஆ) கவியரங்கம் – --------- + ----------

இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1 அறிவால் உயர்ந்தவர்களாக இன்சுவை யார் யாரைக் குறிப்பிடுகிறார்?

2 பண்பால் சிறந்தவர்களாக மதியொளி எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?

3 உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார், யாருக்குக் கொடுத்தார்?

4 நடுவர் கூறிய தீர்ப்பை உன் சொந்த நடையில் கூறுக.

5 ஐம்பொறிகளுள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற நான்கையும் எழுதுக.
கண், -------------, -------------, -------------, -----------.

6 தமிழைச் சிறப்பிக்கும் பெயர்களைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.

ஈ. சிந்தனை வினாக்கள்

1 கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் எது சிறந்தது என நீ கருதுகிறாய்? ஏன்?

2 "வெறும் பண்பை வைத்துக்கொண்டு பெரும் பந்தல் போடலாமா?"
இத்தொடருக்கான பொருளை உம் சொந்தநடையில் வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.

என்ன சத்தம்...

அன்று ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கு விடுமுறை என்பதால் செழியன் தன் பாட்டியுடன் ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றான்.

ஆடுகள் காட்டின் ஓரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. செழியன் ஒரு மரத்தடியில் அமர்ந்து காட்டின் அழகை இரசித்துக் கொண்டிருந்தான். அந்த மரத்தின் மேலிருந்த குரங்குகள் அலப்பும் ஓசை அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அதனால், அவன் வேறு ஒரு மரத்தடிக்குச் சென்று அமர்ந்தான். அங்கிருந்த மரங்களில் அணில்கள் ஓடிப் பிடித்து விளையாடின. அம்மரத்திலிருந்த குயில் ஒன்று குக்கூ குக்கூ ..... எனக் கூவியது. குயிலின் ஓசை செழியனின் செவிக்கு இனிமையாக இருந்தது. அப்படியே படுத்துச் சிறிது நேரம் ஓய்வெடுத்தான். திடீரென ஆடுகள் மே.....மே......எனக் கத்தும் சத்தம் கேட்கவே, செழியன் பதற்றத்துடன் எழுந்து என்னவென்று கவனித்தான். அருகில் பச்சைப் புதரருகே நரி ஒன்று ஆடுகளைக் கொன்று தின்ன, நேரம் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். உடனே ஒரு குச்சியை வளைத்து வில்லாக்கி நரியை நோக்கி அம்பை எய்தான். அம்பு பட்டுக் காயமடைந்த நரி ஊளையிட்டுக் கொண்டே ஓடி விட்டது.

செழியன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு பாட்டியுடன் வீட்டிற்குக் கிளம்பினான். தூரத்தில் எங்கோ சிங்கம் முழங்கும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் காடே பரபரப்பாகி விட்டது. பறவைகள் இறக்கைகளைப் படபடவென அடித்துக் கொண்டு இங்குமங்கும் பறந்தன. யானை பிளிறியது; ஆந்தை அலறியது; கீரிப்பிள்ளையும் செடிகளின் மறைவிலிருந்து ஓடியது; மயில் அகவியது; பாம்பும் தன் புற்றிலிருந்து வெளியே வந்து சீறியது; குதிரை கனைத்தது. இவற்றை எல்லாம் கேட்ட செழியனுக்குப் பயத்தால் நாக்கு வறண்டது. தான் வைத்திருந்த தண்ணீரைக் குடித்தான். பாட்டியுடன் வீட்டிற்குச் செல்லும் வழியில் கம்பங்கொல்லையில் வண்டுகள் முரலும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. ஊருக்கு அருகே



வந்த பிறகுதான் செழியனுக்குப் பயம் சற்றுக் குறைந்தது. செழியன் தன்னுடைய வீட்டிற்குள் நுழைந்ததுமே அவனைக் கண்ட மகிழ்ச்சியில் தொழுவத்திலிருந்த பசு கத்தியது. செழியன் ஆடுகளை ஆட்டுப்பட்டியில் அடைத்துவிட்டுத் தன் அம்மாவிடம் சென்று, காட்டில் தான் கண்ட நரியைப் பற்றியும் சிங்கம், யானை இவற்றின் சத்தத்தைப் பற்றியும் மிகுந்த பரபரப்போடு கூறினான். அம்மா செழியனின் துணிவைப் பாராட்டினார்.

வாழைத் தோட்டத்திலிருந்த தண்ணீர்த் தொட்டியில் செழியன் குளித்துவிட்டு வந்தான். அம்மா கொடுத்த முறுக்கைத் தின்றான். அப்போது தங்கை பூவிழி பால் பருகிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, செழியனையும், பூவிழியையும், பாட்டியையும் சாப்பிட வாருங்கள் என்று அம்மா அழைத்தார். அம்மாவின் குரலைக் கேட்டதும் இருவரும் சென்று கொடுத்த உணவை உண்டனர்.



பின்னர், தூங்கப் போகும் முன் பாட்டி கதை கூறினார். இருவரும் கதையை ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். எலியும் எலிக் குஞ்சும் கீச் ....கீச் ..... என்று சத்தமிட்டன.

எலியின் இந்த சத்தம், பாட்டியின் கதைக்குப் பின்னணி

சேர்ப்பதுபோல் இருந்தது.நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து பார்த்தான். அங்கே பூனை ஒன்று சீறுவதைக் கண்டு நாய் குரைத்த காரணம் அறிந்தான். இரண்டையும் அருகிலிருந்த தென்னந் தோப்பின் பக்கம் விரட்டிவிட்டு வீட்டிற்கு வந்து படுத்துக் கொண்டான். பாட்டியும், தங்கையும் முன்பே தூங்கிவிட்டனர்.

கொய்யாத் தோப்பிலிருந்த மரத்தின் மேலிருந்து கொக்கரக்கோ ...... கொக்கரக்கோ ......என சேவல் ஒன்று கூவும் ஓசையைக் கேட்டுக் கண் விழித்தான் செழியன்.

கா.....கா...... எனக் காகமும் தன் பங்குக்குக் கரைந்தது.

செழியன் உற்சாகமாகத் துள்ளியெழுந்து அன்றைய நாளின் கடமைகளை மகிழ்ச்சியாகச் செய்ய ஆரம்பித்தான். தன் அனுபவங்களைத் தன் நண்பர்களோடு பகிரப் போகும் ஆவலுடன் பள்ளிக்குக் கிளம்பிச் சென்றான்.

பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் ஒலிப்பு முறைகளையும் இவ்வாறு கூற வேண்டுமென முன்னோர் கூறிய மரபினைத் தொன்று தொட்டுப் பின்பற்றி வருகிறோம்.

கற்பவை கற்றபின்

- 'என்ன சத்தம்' என்ற பகுதியைச் சரியான உச்சரிப்புடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பப் படித்துக் காட்டுக.
- செழியனின் செயல்கள்பற்றி உங்களுடைய கருத்து என்ன? குழுவில் பகிர்ந்து கொள்க.
- ஞாயிறு விடுமுறையில் நீங்கள் என்ன செய்தீர்கள்? வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.
- உமக்குத் தெரிந்த கதை ஒன்றை வகுப்பறையில் கூறுக.
- இப்பாடப்பகுதிக்கு ஏற்ற தலைப்பினைக் குழுவில் கலந்துரையாடித் தெரிவு செய்க.

மதிப்பீடு

வினாக்களுக்கு விடையளிக்க.

1. செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?
2. செழியன் செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.

சிந்தனை வினா.

1. நம்மைப்போல் விலங்குகளுக்கும் பேசும் திறன் கிடைத்தால் எப்படி இருக்கும்? காட்டில் வாழும் விலங்குகள் பேசுவதுபோல் ஓர் உரையாடல் எழுதிக்காட்டுக.
2. நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய், பூனை போன்ற விலங்குகள் ஏதேனும் ஆபத்து நேர்வதற்கு முன்பு ஏன் ஒலியெழுப்புகிறது என எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

கற்கண்டு

மரபுச்சொற்கள்

நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு.

ஒலி மரபுச் சொற்கள்

குரங்கு அலப்பும்	புலி உறுமும்
குயில் கூவும்	யானை பிளிறும்
ஆடு கத்தும்	ஆந்தை அலறும்
சிங்கம் கர்ச்சிக்கும், முழங்கும்	மயில் அகவும்
நாய் குரைக்கும்	பாம்பு சீறும்

விலங்குகளின் இளமைப்பெயர் மரபுச் சொற்கள்

ஆட்டுக் குட்டி	யானைக் கன்று
கோழிக் குஞ்சு	சிங்கக் குருளை
குதிரைக் குட்டி	புலிப் பறழ்
குரங்குக் குட்டி	கீரிப் பிள்ளை
மான் கன்று	அணிற்பிள்ளை

வினைமரபுச் சொற்கள்

அம்பு எய்தார்	சோறு உண்டான்
ஆடை நெய்தார்	கூடை முடைந்தார்
பூ பறித்தாள்	சுவர் எழுப்பினார்
மாத்திரை விழுங்கினான்	முறுக்கு தின்றாள்
நீர் குடித்தான்	பால் பருகினான்

தாவரங்களின் உறுப்புப்பெயர் மரபுச் சொற்கள்

மா, பலா, வாழை	இலை
ஈச்சம், தென்னை, பனை	ஓலை
கம்பு, கேழ்வரகு, சோளம்	தட்டை
நெல், புல், தினை	தாள்
அவரை, கத்தரி, முருங்கை, வெள்ளரி	பிஞ்சு

பூச்சிகள், பறவைகள், விலங்குகள் – இருப்பிட மரபுச் சொற்கள்

கரையான் புற்று	ஆட்டுப் பட்டி
மாட்டுத் தொழுவம்	குதிரைக் கொட்டில்
கோழிப் பண்ணை	குருவிக் கூடு
சிலந்தி வலை	எலி வளை
நண்டு வளை	யானைக்கூடம்

கற்பவை கற்றபின்

- மரபு பற்றி நீ அறிந்து கொண்டதை உனது சொந்த நடையில் கூறு.
- நாம் ஏன் மரபினைப் பின்பற்ற வேண்டும்? பின்பற்றவில்லையெனில் மொழி என்னவாகும்? வகுப்பறையில் கலந்துரையாடுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை சொல்லியவாறே நாமும் சொல்வது ___________

   அ) பழைமை ஆ) புதுமை இ) மரபு ஈ) சிறப்பு

2. யானை ___________

   அ) கத்தும் ஆ) பிளிறும் இ) கூவும் ஈ) அலறும்

3 'ஆந்தை அலறும்' – என்பது ___________

அ) ஒலிமரபு ஆ) வினைமரபு

இ) இளமைப் பெயர் மரபு ஈ) இருப்பிடப் பெயர் மரபு

4 புலியின் இளமைப் பெயர் ___________

அ) புலிப்பறழ் ஆ) புலிக்குட்டி

இ) புலிக்கன்று ஈ) புலிப்பிள்ளை

5 'பூப்பறித்தாள்' என்பது ___________

அ) வினைமரபு ஆ) பெயர் மரபு

இ) ஒலி மரபு ஈ) இளமைப் பெயர் மரபு

ஆ. ஒலி மரபுகளைப் பொருத்துக.

1.	சிங்கம்	–	கூவும்
2.	அணில்	–	அலப்பும்
3.	மயில்	–	முழங்கும்
4.	குயில்	–	கீச்சிடும்
5.	குரங்கு	–	அகவும்

இ. உயிரினங்களின் படங்களுக்கு உரிய ஒலிமரபை வட்டமிடுக.

1 மயில் – கூவும், அகவும், பிளிறும், கத்தும்

2 கிளி – அலப்பும், பேசும், கூவும், கீச்சிடும்

3 குரங்கு – அகவும், கீச்சிடும், சீறும், அலப்பும்

4 ஆடு – பேசும், கத்தும், பிளிறும், கூவும்

5 குயில் – அலப்பும், பிளிறும், அகவும், கூவும்

6 யானை – கத்தும், கர்ச்சிக்கும், உறுமும், பிளிறும்

ஈ. வினை மரபுகளைப் பொருத்துக.

1	நீர்	பறித்தாள்
2	முறுக்கு	எய்தான்
3	உணவு	குடித்தான்
4	அம்பு	தின்றான்
5	பூ	உண்டான்

உ. ஒலிமரபுச் சொற்களை எழுதுக

1 ____________________

2 ____________________

3 ____________________

4 ____________________

5 ____________________

6 ____________________

ஊ. வினாக்களுக்கு விடையளிக்க

1. மரபு என்றால் என்ன?
2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன?
3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- எளிய, இனிய ஓசைநயம் மிக்க தமிழ்ப்பாடல்களைக் கேட்டு மகிழ்க.
- தொலைக்காட்சி, வானொலி, பள்ளி விழாக்கள், ஊர்த்திருவிழா போன்றவற்றில் நிகழும் பட்டிமன்றம், கவியரங்கம் ஆகியவற்றைக் கேட்டு மகிழ்க.

ஆ. பேசுதல்

- உமக்குப் படித்த தலைப்புகளில் வகுப்பறைப் பட்டிமன்றத்தில் பங்கேற்றுப் பேசுக.
- உமக்குப் பிடித்த பறவைகளுள் ஏதேனும் ஒன்றுபற்றி ஐந்து மணித்துளி பேசுக.

இ. படித்தல்

- இனிய, எளிய தமிழ்ப்பாடல்களைப் படித்து மகிழ்க.
- சிறுவர் இதழ்களில் இடம்பெற்றுள்ள விலங்கைப் பற்றிய கதைகளுள் ஏதேனும் ஒன்றைப் படித்துக்காட்டுக.

ஈ. எழுதுதல்

1 சொல்லக்கேட்டு எழுதுக.

குளிரிள நீர்	யானை பிளிறும்	பனிமலர்
நற்பண்பு	திருவள்ளுவர்	பறைசாற்றுதல்
ஞாயிற்றுக்கிழமை	இறக்கைகள்	சீறியது
கொக்கரக்கோ		

2 சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. நல்லறிவு – ____
2. தென்னைமரம் – ____
3. கவியரங்கம் – ____
4. நன்றி – ____

3 கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.

மேரி ஆடினாள்	ஈ பறந்தது	புலி உறுமியது
பாட்டி தும்மினார்	குழந்தை சிரித்தது	பூனை தூங்கியது

1. குழந்தை என்ன செய்தது? ________________________________
2. மேரி என்ன செய்தாள்? ________________________________
3. பாட்டி என்ன செய்தார்? ________________________________
4. எது பறந்தது? ________________________________
5. தூங்கியது எது? ________________________________
6. புலி என்ன செய்தது? ________________________________

4. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். நம் தாய்மொழியாம் தமிழ் காலத்தால் முந்தையது மட்டுமன்று; உலகின் முதன்மொழியும் ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழ்மொழிக்கே உண்டு. தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியது, நம் தமிழ்ப்பண்பாடு. உலகமே வியந்து பார்க்கும் வளமான சொற்கள் உடையது நம் அன்னைத் தமிழ்மொழி.

1. தமிழ் என்னும் சொல்லின் பொருள் யாது?
2. உறவினர் என்னும் பொருள் தரும் சொல்லை பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.
3. தமிழ்மொழியில் என்னென்ன இலக்கணப் பிரிவுகள் உள்ளன?
4. தமிழ்ப் பண்பாடு உலகுக்கு உணர்த்திய உயரிய தத்துவம் யாது?
5. பிரித்து எழுதுக. தமிழிலக்கணம் – ------------ + ------------.

5 எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் மாற்றி எழுதுக.

எ.கா.

1. **ஹேண்ட்ரைட்டிங் காம்பிடிசன்ல எனக்குப் ஃபர்ஸ்ட் பிரைஸ் கிடைத்தது.**

   கையெழுத்துப் போட்டியில் எனக்கு முதற்பரிசு கிடைத்தது.

2. **ஃபஸ்ட் பீரியட் தமிழ் கிளாஸ் நடந்தது**

   ____

3. **நான் ட்ராயிங் நோட்டில் உள்ள பிச்சர்க்கு கலர் கொடுத்தேன்**

   ____

6. பொருத்தமான சொற்களால் பாடலை நிறைவு செய்க.

(உண்மை, பயிற்சி, பொறுமை, கல்லாமை, ஊக்கம், கல்வி, பொறாமை, முயற்சி)

_________ உடையவன் மாணவன்	_________ அற்றவன் மாணவன்
__________ கற்பவன் மாணவன்	________ தவிர்ப்பவன் மாணவன்
__________ பெறுபவன் மாணவன்	_________ செய்பவன் மாணவன்
__________ பேசுபவன் மாணவன்	________ கொள்பவன் மாணவன்

மொழியோடு விளையாடு

1. பாரதிதாசனின் பாடலில் வரும் வருணனைச்சொற்களை எடுத்து எழுதுக

பனிமலர்

_______ _______

_______ _______

____

P281M8

2. கீழ்வரும் குறுக்கெழுத்து புதிரில் உள்ள வினாக்களுக்குச் சிந்தித்துச் சரியான விடையைக் கண்டுபிடி.

	3 நா	1 க				2 பா		
			2 த					
			3 இ					3 பா
2 பா	1 இ						1 தொ	

கீழிருந்து மேல்

1. தமிழ் மொழியின் முதல் இலக்கண நூல் ______________________
2. பாரதிதாசன் இவர் மேல் பற்று வைத்திருந்தார் __________________
3. புதுவையில் தோன்றிய புதுமைப் பாவலர் ______________________

மேலிருந்து கீழ்

1. பாரதிதாசனின் தந்தையின் பெயர் __________________
2. பாரதியார் எழுதிய பாடலில் ஒன்று __________________
3. முத்தமிழ் என்பது இயல், இசை ____________________

இடமிருந்து வலம்

1. உடலுக்கு குளிர்ச்சி தருவது ______________________
2. உலகின் முதன் மொழி மூத்த மொழி _________________
3. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பொருள் _______________

3. குறிப்புகளைக் கொண்டு விடைகளைக் கண்டுபிடி.

1. உருண்டோடும் பெரிய தேரைக் காப்பது அதன் சிறிய ________ ஆகும்.

	ச்		ணி

2. இரும்பை இழுக்கும் சக்தி கொண்டது .

கா			ம்

3. அம்மா – வேறு சொல்.

	ன்	

4. ஆத்திசூடி எழுதிய பெண்பாற் புலவர்.

ஔ			ர்

5. எதிர்ச் சொல் தருக. மேடு

	ள்		

6. காகம் தனக்குக் கிடைத்த உணவைப் பிற காகங்களோடு _________ உண்ணும்.

	கி		ந்	

7. உன் விடைகளின் மூன்றாவது எழுத்துகளை வரிசைப்படுத்தினால், எதிர்காலத்தில் நீ யாராக இருப்பாய் எனத் தெரியும். _________

(காந்தம், அன்னை, பள்ளம், அச்சாணி, பகிர்ந்து, ஔவையார்)

4. சொல்லிலிருந்து புதிய சொற்கள் உருவாக்குக.

எ.கா.

காஞ்சிபுரம் – கா, காஞ்சி, புரம், காசி, காரம், சிரம்

1. புதுக்கவிதை   2. நெல்லிக்கனி   3. கற்குவியல்

5. சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.

அகிலா	படித்தாள்	நான்	பாடம்	வீட்டிற்கு
சென்றாள்	படித்தேன்	சென்றேன்	வந்தாள்	பள்ளிக்கு

1. ______________ ______________ ______________
2. ______________ ______________ ______________
3. ______________ ______________ ______________
4. ______________ ______________ ______________
5. ______________ ______________ ______________

நிற்க அதற்குத் தக

- நான் பிறமொழிக் கலப்பின்றிப் பேசுவேன்
- தாய்மொழியைப் போற்றுவேன்

அறிந்து கொள்வோம்

எழுத்துகளை எளிதாக அடையாளம் காண உதவும் பெயர்கள்

ண – 'டண்ணகரம்'

ந – 'தந்நகரம்'

ன – 'றன்னகரம்'

ர – இடையின 'ரகரம்'

ற – வல்லின 'றகரம்'

ல – மேல்நோக்கு 'லகரம்'

ள – பொது 'ளகரம்'

ழ – சிறப்பு 'ழகரம்'

செயல் திட்டம்



- மொழி சார்ந்த எளிய பாடல்களைச் சேகரித்து எழுதி வருக.
- பாடலின் ஒவ்வொரு வரிக்கும் ஏற்ற படங்களைச் சேகரித்து ஒட்டி அதற்குரிய வரிகளையும் எழுதி வரவும்.
- உனக்குப் பிடித்த கதை ஒன்றினை எழுதி அதில் இடம்பெற்றுள்ள மரபுச்சொற்களை அடிக்கோடிடுக. வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.
- இலக்கிய மன்ற விழாவில் சிறப்புப் பட்டிமன்றம் நிகழ்த்துவதற்கான நிகழ்ச்சி நிரல் தயார் செய்க.
- 'உலகம்' என்னும் பொருள் தரும் சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.
- உங்கள் ஊரிலுள்ள (அ), பள்ளியிலுள்ள நூலகத்தில் இருந்து பாவேந்தர் பாரதிதாசனின் புத்தகங்களைத் தேடிப் படித்து உனக்குப் பிடித்த செய்திகளை எழுதி வருக.
- பாரதிதாசனின் படைப்புகளுள் எவையேனும் ஐந்து புத்தகங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.

வ. எண்	புத்தகங்களின் பெயர்	குறிப்பு

விடுப்பு விண்ணப்பம்

அனுப்புநர்

இ. செந்நிலவு,
ஐந்தாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
ஈரோடு.

பெறுநர்

வகுப்பு ஆசிரியர்,
ஐந்தாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஈரோடு.

அம்மா / ஐயா,

வணக்கம். நாளை என் அத்தையின் திருமணத்திற்குச் செல்வதால் [14.07.2019] ஒரு நாள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள
இ.செந்நிலவு

நாள் : 14.07.2019
இடம் : ஈரோடு

இயல் இரண்டு

கல்வி

கற்றல் நோக்கங்கள்

- கல்வியின் அவசியத்தை உணர்வர்
- கற்றவர்களின் குணம் மேம்பட்டு நிற்கும் என்பதை உணர்வர்
- பொறுமையால் எதனையும் சாதிக்க முடியும் என்பதை உணர்வர்
- பெயர்ச்சொல் வினைச்சொல் வேறுபாடு அறிவர்
- மொழித்திறன் பெறுவர்

செய்யுள்

மூதுரை

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

– ஔவையார்

சொல்பொருள்

அடக்கம்	–	பணிவு	அறிவிலர்	–	அறிவு இல்லாதவர்
கடக்க	–	வெல்ல	கருதவும்	–	நினைக்கவும்
மடைத்தலை	–	நீர் பாயும் வழி	உறுமீன்	–	பெரிய மீன்

பாடல் பொருள்

மடையில் பாய்கின்ற நீரில் ஓடுகின்ற சிறுமீன்கள் ஓடிக் கொண்டிருக்க, கொக்கானது தனக்கு இரையாகக் கூடிய பெரிய மீன்கள் வரும் வரை அசைவின்றிக் காத்திருக்கும். அதுபோலத் தமக்குரிய காலம் வரும்வரை சிலர் அடங்கியிருப்பார்கள். அவர்களை அறிவில்லாதவர் என எண்ணி வெல்ல நினைக்க வேண்டா.

ஆசிரியர் குறிப்பு

இந்நூலை இயற்றியவர் ஔவையார். இவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலிய பிற நீதிநூல்களையும் இயற்றியுள்ளார். முதுமையான அறிவுரைகளைக் கொண்டது, மூதுரை. இந்நூலுக்கு வாக்குண்டாம் என மற்றொரு பெயரும் வழங்கப்படுகிறது. இந்நூலில் நீதிக்கருத்துகள் எளிமையான நடையில் கூறப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்து மகிழ்க.
- கல்வியின் சிறப்பை உணர்த்தும் வேறு பாடல்களை அறிந்து வந்து பாடுக.
- மூதுரைப் பாடலுடன் தொடர்புடைய திருக்குறள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பொருளை ஆசிரியரிடம் கேட்டு அறிந்துகொள்க.

  கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
  குத்தொக்க சீர்த்த இடத்து

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. **என்றெண்ணி** என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ....

அ) என் +றெண்ணி ஆ) என்று +எண்ணி

இ) என்றெ + எண்ணி ஈ) என்று + றெண்ணி

2 **மடை + தலை** என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) மடைதலை ஆ) மடைத்தலை
இ) மடத்தலை ஈ) மடதலை

3 **வரும் + அளவும்** என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

அ) வருமளவும் ஆ) வருஅளவும்
இ) வரும்மளவும் ஈ) வரும்அளவும்

4 **அறிவிலர்** என்பதன் எதிர்ச்சொல் ....

அ) அறிவில்லாதவர் ஆ) படிக்காதவர்
இ) அறியாதார் ஈ) அறிவுடையவர்

5 **எண்ணுதல்** – இச்சொல்லுக்குரிய பொருள்..

அ) வாடுதல் ஆ) வருந்துதல்
இ) நனைத்தல் ஈ) நினைத்தல்

ஆ. இப்பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

___________ , ___________

___________ , ___________

இ. 'மடைத்தலை' இச்சொல்லில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.

___________ , ___________ , ___________ , ___________

ஈ. பொருத்துக.

1.	உறுமீன்	–	நீர் பாயும் வழி
2.	கருதவும்	–	பணிவு
3.	அறிவிலர்	–	நினைக்கவும்
4.	மடைத்தலை	–	பெரிய மீன்
5.	அடக்கம்	–	அறிவு இல்லாதவர்

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?

2. யாரை அறிவில்லாதவராக எண்ணக் கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?

ஊ. சிந்தனை வினா

அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது. ஏன்? கலந்துரையாடுக.

கல்விச்செல்வமும் பொருட்செல்வமும்

உரைநடை



மலர்விழியும் தமிழரசியும் தோழிகள். இருவரும் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியில் வந்ததும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிப் பேசிக் கொண்டு வருகிறார்கள். அப்போது மலர்விழி தன் தோழியிடம் தொலைக்காட்சியில் நேற்று கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் என்ற தலைப்பில் நடந்த பட்டிமன்றத்தை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது மின்சாரம் போய்விட்டது அதனால், நடுவரின் தீர்ப்பை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை எனக்கு வருத்தமாக இருந்தது என்று கூறினாள்.

தமிழரசி: வருத்தப்படாதே மலர்விழி, இந்தப் பட்டிமன்றம் பார்த்தவர்களிடம் முடிவைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மலர்விழி: சரி தமிழரசி. வா, போய்க் கொண்டே பேசலாம்.

தமிழரசி: கல்விச் செல்வமா? பொருட் செல்வமா? எது சிறந்தது என நீ நினைக்கிறாய்?

மலர்விழி: நான் கல்விச் செல்வம்தான் சிறந்தது என்று கூறுவேன்.

தமிழரசி: அதெப்படி? அவ்வளவு திட்டவட்டமாகக் கூறுகிறாய்?

மலர்விழி: கல்வி கற்காதவன் "களர்நிலத்திற்கு ஒப்பாவான் " என்று பாரதிதாசனாரும் "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று திருவள்ளுவரும் கூறியிருக்கிறார்கள்.

தமிழரசி: கல்வியின் சிறப்பைக் கூறிய திருவள்ளுவர்கூடப் "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்றே கூறியிருக்கிறார். பொருட்செல்வம் இல்லை என்றால் நமது தேவைகளைக்கூட நிறைவேற்றிக் கொள்ள இயலாது. கல்வி கற்பதற்குக்கூட பணம் வேண்டும் அல்லவா!

மலர்விழி: "பணம் பத்தும் செய்யும்" என்பது எனக்குத் தெரியும். வாழ்க்கையை நடத்துவதற்குப் பணம் தேவைதான். பணம் படைத்தவருக்குச் சொந்த ஊரில் தான் மதிப்பு. "கல்வி கற்றவர் சென்ற இடமெல்லாம் சிறப்பு" பெறுவர்.

தமிழரசி: கல்வி கற்றவர், செல்வம் படைத்தவர்களின் தயவில்தாம் வாழ வேண்டியுள்ளது.

மலர்விழி: பொருட் செல்வம் நிலையில்லாதது, கல்விச் செல்வமே 'இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தருவது' என்றும் அழியாதது. பொருட்செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையக் கூடியது. கள்வர்களால் கவர்ந்து செல்லக் கூடியது.

தமிழரசி: 'பணமில்லாதவன் பிணம்', 'பணமென்றால் பிணம்கூட வாயைத்திறக்கும்' என்ற பழமொழிகளை எல்லாம் நாம் அறிந்ததுதானே! கற்றவரால் என்ன செய்ய முடியும்?

மலர்விழி: இன்றைய கல்வி வளர்ச்சிதான் எல்லா முன்னேற்றத்திற்கும் காரணம். அதனால்தான் இன்று நாம் எல்லாரும் வசதியாக வாழ முடிகின்றது.

தமிழரசி: புதுமைகளைக் கண்டறிய கற்றவர்களுக்குப் பணமும் தேவைப்படும் அல்லவா?

மலர்விழி: ஆம், அதற்காகப் பணம்தான் உயிர்நாடி என்று கூறுவது தவறு. கல்விதான் அறிவை வளர்க்கிறது. நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து நல்வழியில் தன் வாழ்வை அமைத்துக் கொள்ள வழி செய்கிறது.

தமிழரசி: 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' வறுமைதான் சமூகத் தீமைகளுக்கும் காரணமாகின்றது.

மலர்விழி: வறுமையிலும் செம்மையாக வாழ்பவன் கற்றறிந்தவன்; கல்லாதவன் அறியாமையால் தவறு செய்கிறான்.

தமிழரசி: அறியாமை உள்ளவன் பணக்காரனாகவே இருந்தாலும் அமைதியான வாழ்வுக்குக் கல்வி அவசியம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். வசதியான வாழ்விற்குப் பொருட்செல்வம் அவசியம் என்பதை நீ ஒப்புக்கொள்கிறாயா?

(விவாதம் நீண்டு கொண்டிருக்கிறது.)
மறுநாள் இருவரும் தமிழாசிரியரைச் சந்தித்து விவாதத்தைக் கூறுகிறார்கள்

தமிழாசிரியர்: மக்களிடம் அறியாமை இருளை நீக்கி, அறிவு ஒளிபெறச் செய்வது கல்வி. கல்வியறிவை நாம் இளமையிலேயே பெறுவதுதான் சிறந்த வழி. 'இளமையில் கல்வி, சிலையில் எழுத்து' என்னும் முதுமொழியை நாம் மறந்துவிடக்கூடாது.

மலர்விழி: ஐயா, கல்வியின் சிறப்பைப் புரிந்துகொண்டோம். ஆயினும், கல்வியோடு பொருளும் இருக்கவேண்டுமா?

தமிழாசிரியர்: ஆம். கல்வியும் பொருளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் எனலாம். பொருளுடையவரால் ஆகாதது ஒன்றுமில்லை. பொருளுடைமை, வெற்றி தரும்; பெருமை தரும்; அழகு தரும். அவை மட்டுமா? உயர்கல்வி பெறும் வாய்ப்பையும் தரும். 'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்' என்று வள்ளுவர் கூறியதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, அடிப்படை வாழ்க்கைத் தேவைகளுக்குப் பொருள் கட்டாயம் தேவை. ஆனால், நம்மை மேன்மைப்படுத்துவது கல்விதான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

தமிழரசியும் மலர்விழியும்: உண்மைதான் ஐயா, கல்வியால் அறிவுத்தெளிவு உண்டாகும். பொருளால் நம் வாழ்வு வளம் பெறும் என்பதைப் புரிந்து கொண்டோம்.

கற்பவை கற்றபின்

- கல்விச் செல்வமா? பொருட்செல்வமா? எது அவசியம் என்று நீ நினைக்கிறாய்? ஏன்?
- பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை – இது பற்றி உன் கருத்து என்ன?
- கல்வியால் சிறந்தவர்கள், பொருளால் சிறந்தவர்கள் – யாரால் நம் நாடு முன்னேற்றம் அடையும்? வகுப்பறையில் விவாதம் செய்க.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. **இம்மை** என்ற சொல் குறிக்கும் பொருள் ....
   அ) இப்பிறப்பு ஆ) மறுபிறப்பு இ) பிறப்பு ஈ) முற்பிறப்பு

2. **காரணமாகின்றது** என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ....
   அ) காரண + மாகின்றது ஆ) காரண + ஆகின்றது
   இ) காரணம் + மாகின்றது ஈ) காரணம் + ஆகின்றது

3. **வறுமை** இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ....
   அ) செழுமை ஆ) இன்மை
   இ) செம்மை ஈ) ஏழைமை

4. **பொருள் + செல்வம்** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....
   அ) பொருள்செல்வம் ஆ) பொருள்ச்செல்வம்
   இ) பொருட்செல்வம் ஈ) பொருட்ச்செல்வம்

5. **பொருள் + இல்லார்க்கு** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....
   அ) பொருளில்லார்க்கு ஆ) பொருள்ளில்லார்க்கு
   இ) பொருலில்லார்க்கு ஈ) பொருள்இல்லார்க்கு

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக

1. பழைமை + மொழி = ______________
2. நன்மை + வழி = ______________

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

1. பணமென்றால் = _______ + ______
2. தொலைக்காட்சி = _______ + ______

ஈ. தொடரை முழுமை ஆக்குக (பத்தும், வளம், கல்வி)

1. பசி வந்திடப் ___________ பறந்து போகும்.
2. கேடில் விழுச்செல்வம் ___________
3. பொருளால் நம் வாழ்வு ___________ பெறும்.

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. களர்நிலத்துக்கு ஒப்பாவர் – யார்?
2. கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது எது?
3. 'கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம்' என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை உம் சொந்தநடையில் எழுதுக.
4. பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக

ஊ. சிந்தனை வினாக்கள்

1. கல்விச் செல்வம் அல்லது பொருட்செல்வம் இரண்டில் ஒன்றுதான் உனக்கு வழங்கப்படும் எனில், நீ எதைத் தெரிவு செய்வாய்? ஏன்?
2. 'நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி' – இதைப் பற்றி உன் சொந்த நடையில் பேசு.

கூடையிலுள்ள சொற்களுக்கு உரிய எதிர்ச் சொற்களைத் தொட்டியிலிருந்து கண்டறிந்து எழுதுக

வறுமையிலும் நேர்மை

ஓர் ஊரில் தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யாததால், அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த பணக்காரர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்று, தங்களின் குழந்தைகளுக்கு உதவி செய்யுமாறு வேண்டினர்.

இளகிய உள்ளம் கொண்ட அவர், இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டா. ஆளுக்கொரு கொழுக்கட்டை கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து கொழுக்கட்டையை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள் என்றார். மாளிகைக்குத் திரும்பிய அவர், தம் வேலைக்காரர்களை அழைத்தார். இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள்ளுங்கள். ஆளுக்கொரு கொழுக்கட்டை கிடைக்க வேண்டும். நாளையிலிருந்து கொழுக்கட்டைகளைக் கூடையில் சரியான எண்ணிக்கையில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே இருக்க வேண்டும் என்றார்.

அதுபோலவே வேலைக்காரர்கள் செய்தனர். அங்கே காத்திருந்த சிறுவர் சிறுமியர் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். வேலைக்காரர்கள் கூடையினை அவர்கள் முன் வைத்தனர்.

சிறு சிறு கதைகளை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படித்தல்



கொழுக்கட்டையை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால் ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லாரும் எடுத்துச் சென்றது போக மீதி இருந்த சிறிய கொழுக்கட்டையை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள். எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் பணக்காரர்.

ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய கொழுக்கட்டையை எடுத்துக் கொண்டு புறப்பட்ட அந்தச் சிறுமி, தன் வீட்டிற்கு வந்தாள். அந்தக் கொழுக்கட்டையைச் சாப்பிடுவதற்காக இரண்டாகப் பிட்டாள். அப்போது அதன் உள்ளிருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது. அந்தத் தங்கக் காசைத் தன் தாயிடம் காட்டி, "அம்மா! இது கொழுக்கட்டைக்குள் இருந்தது; இது என்ன என்று பாருங்கள்" என்றாள் அச்சிறுமி. அதற்கு அவர், "இது தங்கக் காசு" என்று இளவேனிலிடம் கூறிவிட்டு, இது எப்படி கொழுக்கட்டைக்குள் வந்திருக்கும் என்று யோசித்தவாறே, "இந்தக் கொழுக்கட்டையை யார் கொடுத்தார்களோ அவர்களிடமே சென்று கொடுத்துவிடு" என்றார்.

அந்தத் தங்கக்காசை எடுத்துக் கொண்டு பணக்காரரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி. "ஐயா! நான் எடுத்துச் சென்ற கொழுக்கட்டைக்குள் இந்தத் தங்கக் காசு இருந்தது, பெற்றுக் கொள்ளுங்கள்" என்றாள்.

"மகளே உன் பெயர் என்ன?" எனக் கேட்டார் பணக்காரர். தன் பெயர் இளவேனில் எனக் கூறினாள் அந்தச் சிறுமி.

"மகளே, உன் நேர்மைக்கும் பொறுமைக்கும் நல்ல பண்புகளுக்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக்காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்" என்றார் பணக்காரர்.

"நன்றி, ஐயா!" எனக் கூறிவிட்டு, துள்ளிக் குதித்தபடி ஓடிவந்த அவள், நடந்ததைத் தன் தாயிடம் சொன்னாள். அதனைக் கேட்டு அந்தத் தாயும் மகிழ்ச்சியடைந்தாள்.

நீதி : 'நேர்மை நன்மை தரும்'

கற்பவை கற்றபின்

- நாம் என்னென்ன நற்பண்புகளைப் பெற்றிருக்கவேண்டும்? பட்டியலிடுக.
- நேர்மையானவர் என்று நீ யாரை நினைக்கிறாய்? அவரைப்பற்றி ஐந்து மணித்துளி பேசுக.

மதிப்பீடு

வினாக்களுக்கு விடையளிக்க.

1. பசியால் வாடிய ஊர்மக்களுக்குப் பணக்காரர் எவ்வாறு உதவினார்?

2. சிறுமியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?

சிந்தனை வினா

'வறுமையிலும் நேர்மை' என்னும் கதையில், சிறுமியின் இடத்தில் நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?

கற்கண்டு

பெயர்ச்சொல், வினைச்சொல்.

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

எடுத்துக்காட்டு சாந்தி, வகுப்பறை, சித்திரை, கண், கதிரவன், சந்திரன்.

ஒரு செயலைக் (வினையை) குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

எடுத்துக்காட்டு ஓடினான், விழுந்தது, எழுதினான்.

கீழுள்ள தொடர்களைக் கவனியுங்கள்.

1. இராமன் பாடம் படித்தான்.

   இத்தொடரில் ,

   இராமன், பாடம் – பெயர்ச்சொற்கள்
   படித்தான்– வினைச்சொல்

2. மாடு புல் மேய்ந்தது.

   இத்தொடரில் ,

   மாடு, புல் – பெயர்ச்சொற்கள்
   மேய்ந்தது – வினைச்சொல்

ஒன்றன் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல்
ஒரு செயலைக் குறிப்பது வினைச்சொல்

கற்பவை கற்றபின்

- ஒரு சொல்லைப் படித்தவுடன் அது பெயர்ச்சொல்லா, வினைச்சொல்லா எனப் பகுத்து அடையாளம் காண்க.
- நாம் பேசும் தொடரில் எது பெயர்ச்சொல், வினைச்சொல் எனக் கூறுக.
- பத்தியைப் படித்து அதில் உள்ள பெயர்ச்சொல், வினைச்சொற்களை அடிக்கோடிட்டு அடையாளம் கண்டு கூறுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என வகைப்படுத்துக.

(பாடினாள், வருணன், எழுதினான், வரைந்தாள், இசைவாணி, உண்டான், கண்ணன், சம்சுதீன், ஜெனிபர், கட்டினார், ஓடியது, முயல்)

வ. எண்	பெயர்ச் சொல்	வினைச்சொல்
1	வருணன்	உண்டான்
2		
3		
4		
5		

ஆ. பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொல், வினைச்சொல்லை எடுத்து எழுதுக.

1. மயில் தோகையை விரித்து ஆடியது
2. வாணி கட்டுரை எழுதினாள்
3. இளம்பிறை உணவு சமைத்தாள்
4. ஆதிரை மரக்கன்றை நட்டாள்
5. கொத்தனார் வீடு கட்டினார்

பெயர்ச்சொற்கள்	வினைச்சொற்கள்
1. ___________	1. _______________
2. ___________	2. _______________
3. ___________	3. _______________
4. ___________	4. _______________
5. ___________	5. _______________

இ. கதையில் வரும் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் பட்டியலிடுக.

காட்டில் புலி ஒன்று மானை வேட்டையாடத் துரத்தியது. மான் தன்னுயிரைக் காத்துக் கொள்ள வேகமாக ஓடியது. மானைத் துரத்திச் செல்லும்போது, வேடன் விரித்திருந்த வலையில் புலி சிக்கிக் கொண்டது. வேடன் வலையில் சிக்கிய புலியைக் கூண்டில் அடைக்க முயன்றான். அப்பொழுது புலி வேடனைப் பார்த்து, என்னைக் கூண்டில் அடைக்காதே விட்டுவிடு. நான் ஓடிப் போய்விடுகிறேன் என்று கெஞ்சியது. அதற்கு வேடன். 'அதெல்லாம் முடியாது' என்று கூறினான்.

உனக்கு இரக்கமே இல்லையா? என்னை ஏன் துன்புறுத்துகிறாய்? எனக் கேட்டது புலி. அதற்கு வேடன் நீ ஏன் மானை துரத்தினாய்? உனக்கு ஒரு நீதி. எனக்கு ஒரு நீதியா? எனக் கேட்டான். புலி அமைதியாய் இருந்தது.

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- இலக்கிய நிகழ்வுகள் மற்றும் விழாக்களில் இடம்பெறும் சிறப்புப் பேச்சுகளைக் கேட்டு மகிழ்க.
- காலை வழிபாட்டுக் கூட்டத்தில் ஆசிரியர் உரையைக் கேட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.

ஆ. பேசுதல்

- நமது கல்வி உயர்வுக்காகப் பாடுபட்ட தலைவர்கள் பற்றி அறிந்து வந்து பேசுக.
- 'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்ற தலைப்பில் உம் சொந்த நடையில் பேசுக.

இ. படித்தல்

- செய்யுளைப் பொருள் விளங்கப் படித்துக்காட்டுக.
- புத்தகப் பூங்கொத்து நூலிலிருந்து நற்பண்பை வளர்க்கும் ஏதேனும் ஒரு கதையைப் படித்துக்காட்டுக.

ஈ. எழுதுதல்

1 சொல்லக்கேட்டு எழுதுக.

1. களர்நிலம்	6. உயிர்நாடி
2. கற்றவர்	7. தொலைக்காட்சி
3. மறுமை	8. அறிவுத்தெளிவு
4. தமிழாசிரியர்	9. வளம் பெறும்
5. நல்வழி	10. வளர்ச்சி

2 சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. முன்னேற்றம் _______________________
2. புதுமை _______________________
3. வாழ்க்கை _______________________
4. தொலைக்காட்சி _______________________

3. கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்தித் தொடர்களாக எழுதுக.

எ.கா: செழித்தால் நாடு காடு செழிக்கும்

காடு செழித்தால் நாடு செழிக்கும்

1 கண்கள் நாட்டின் பெண்கள்.

2 முதுகெலும்பு நாட்டின் விவசாயமே

3 தரும் உழைப்பே உயர்வு

4 போன்றது பொன் காலம்

5 துளி வெள்ளம் பெரு சிறு

4. **கவிதையை நிறைவு செய்க.**

எல்லாம் தரும் கல்வி – வாழ்வில்
ஏற்றம் தரும் கல்வி
கற்றார் நிலை உயர்த்தும் – அறிவில்
ஏற்றம் தரும் கல்வி.

___________ ___________ ___________
___________ ___________ ___________

5. **குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை எழுதுக. பொருத்தமான தலைப்பைத் தருக.**

நான்கு வணிகர்கள் – பஞ்சு விற்றல் – எலித்தொல்லையால் பூனை வாங்குதல் – பூனையின் ஒவ்வொரு காலையும் ஒருவர் பாதுகாத்தல் – தண்டை – கொலுசு அணிவித்தல் – பூனையின் காலில் புண் ஏற்படுதல் – அந்தக் காலுக்குரிய வணிகன், புண் ஏற்பட்ட காலில் எண்ணெய் தோய்ந்த துணியைச் சுற்றிவைத்தல் – பூனை அடுப்பின் அருகில் செல்லல் – எண்ணெய் தோய்ந்த துணியில் தீப்பற்றுதல் – பூனை பஞ்சு மூட்டைகளின் மீது ஓடுதல் – மூட்டையில் தீப்பற்றுதல் – மற்ற மூவரும் வழக்கு தொடுத்தல் – நீதிபதி தீர்ப்பு வழங்கல் – அடிபட்ட காலால் பூனை எப்படி ஓடும் எனக் கேட்டல் – மற்ற மூன்று கால்களின் துணையின்றி ஓட இயலாது எனக் கூறல் – மற்ற மூவரும் நட்டஈடு கொடுக்கவேண்டும் என வலியுறுத்தல்..

மொழியோடு விளையாடு

முதலில் இருந்து படித்தாலும் முடிவில் இருந்து படித்தாலும் பொருள் மாறாமல் உள்ள சொற்றொடர்களைப் படித்து மகிழ்க.

எ.கா: தேரு வருதே மோரு வருமோ
மோரு வருமோ தேரு வருதே

மாலை உருவாக்கு



எ.கா: மாறுமா கைரேகை மாறுமா

மோரு தாரு மோ

வா கற்க வா

மாடு சாடு மா

சேர அரசே

தோடு ஆடுதோ

மேக ராகமே

மேள தாளமே

நாபிறழ், நாநெகிழ் பயிற்சி விளையாடலாமா?

நாபிறழ், நாநெகிழ் பயிற்சி சொற்றொடர்கள் எழுதப்பட்ட அட்டைகளை வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பத் தயார் செய்து கொள்ள வேண்டும், ஒவ்வொன்றின் பின்புறத்தில் 1, 2, 3 என வரிசையாக எண்கள் எழுதி வகுப்பறையின் மையத்தில் வைக்கவேண்டும். மாணவர்களுக்கும் அவ்வாறே எண்கள் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர் ஓர் எண்ணைக் கூற அந்த எண்ணுக்குரிய மாணவர் எழுந்து வந்து அதே எண் எழுதப்பட்ட அட்டையை எடுக்க வேண்டும், அதில் உள்ள தொடரைப் பிழையின்றி விரைவாக வாசிக்க வேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

மீன்பிடிப்போம் வாருங்கள்

கொக்குக்கு ஏற்ற மீன்களைப் பிடித்து கூடையில் போடுக (ஒரு பொருள் பல சொல்)



1. நெருப்பு – ________ ________ ________ ________
2. கதிரவன் – ________ ________ ________ ________
3. சந்திரன் – ________ ________ ________ ________

சொல் ஏணி அமைப்போம்

சொல்லின் இறுதியில் முடியும் எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு அமையும் மற்றொரு சொல்லை எழுதிச் சொல்லேணி அமைக்க.



வருணிப்போம்

படத்தைப் பார்த்து வருணனைச் சொல்லுடன் படத்தில் காணும் உயிரினங்களின் பெயரை எழுதுக.

எ.கா: வண்ண வண்ண மலர்கள்

தாவி ஓடும் முயல்

1 ....

2 ....

3 ....

4 ....

5 ....

பயணத்தில் ஒரு நாள்

படங்களுக்குரிய சொற்களை எழுதிப் பத்தியை முழுமையாக்குக

அப்துல் பக்கத்து ஊரில் இருக்கும் வீட்டிற்குத் தன் அம்மாவுடன் சென்றான். இருந்து பயணச் சீட்டுகளை அம்மா பெற்றுக் கொண்டார். அப்துல் ஓரத்தில் அமர்ந்து கொண்டு வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டே வந்தான். பேருந்து வேகமாகச் சென்றது. எல்லாம் ஒவ்வொன்றாகப் பின்னோக்கி ஓடுவதுபோல் இருந்ததைக் கண்டு வியப்படைந்து தன் அம்மாவையும் பார்க்கச் சொன்னான். வெளியே தூரத்தில் தெரிந்த காட்சி குளிர்ச்சியைத் தந்தது. மலையிலிருந்து துள்ளலோடு விழுந்து பாய்கின்ற யின் வேகம் அப்துலின் உள்ளத்தையும் துள்ளிக் குதிக்கச் செய்தது. பச்சைப் பசேலென இருந்த செடிகளும் பார்ப்பதற்குப் பட்டுக் கம்பளம் விரித்தாற் போன்று மிகவும் அழகாக இருந்தன. வயலின் நடுவே நிறுத்தப்பட்டிருந்தது, பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. சற்றுத் தூரம் சென்றதும் அதிகமாகப் புகையை வெளியேற்றும் யைக் கண்டான். அதைப் பற்றித் தன் அம்மாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அருகில் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தது. அப்துல் இதைப் பார்த்துக் கொண்டு வரும்போது யாரோ ஒருவர், தாம் செல்லும் பேருந்தை விரைவாகத் தம் யில் முந்திச் செல்வதைக் கண்டு பதற்றமடைந்தான். தன் அம்மாவிடம் அதுபற்றிக் கேட்ட போது, அவ்வாறு வண்டியை முந்திச் செல்வது தவறு என்று கூறினார். தாங்கள் இறங்க வேண்டிய ஊர் வந்ததும் பேருந்திலிருந்து இறங்கி மகிழ்ச்சியோடு பாட்டி குச் சென்றான்.

நிற்க அதற்குத் தக

- நன்கு படித்து உயர் பதவி பெறுவேன். என்னால் முடியும்.
- கற்ற கல்வியின் துணைகொண்டு என் திறமைக்கேற்ற வேலையைச் செய்து உழைத்து முன்னேறுவேன்.

செயல் திட்டம்

1. பள்ளியில் உள்ள புத்தகப்பூங்கொத்து நூல்களில் கல்வி தொடர்பான கருத்துகள் நான்கைத் தொகுத்து வருக.



2. செய்தித்தாள்களில் வெளிவரும் கல்வி தொடர்பான செய்திகளைச் சேகரித்து வருக.

3. "பொறுமை" என்ற குணத்தை விளக்கும் மூன்று கதைகளின் தொகுப்பு தயார் செய்க

விண்ணப்பம் எழுதுதல்

குடிநீர்வேண்டி விண்ணப்பம்

அனுப்புநர்

ஆ. இளம்பரிதி,
த/பெ. ஆறுமுகம்,
க.எண்: 24, கிழக்குத் தெரு,
மாமண்டூர்,
சின்னசேலம் ஒன்றியம்.

பெறுநர்

ஊராட்சி மன்றத் தலைவர்,
ஊராட்சி மன்ற அலுவலகம்,
மாமண்டூர்,
சின்னசேலம் ஒன்றியம்.

ஐயா,

வணக்கம். எங்கள் தெருவில் உள்ள குடிநீர்க் குழாய் உடைந்துள்ளதால் கடந்த இரண்டு நாள்களாகக் குடிநீர் தெருவில் வீணாகிக் கொண்டிருக்கிறது. இதனால்,தண்ணீர் இன்றி எங்கள் தெருவில் வசிப்போர் துன்பப்படுகின்றனர். எனவே, உடைந்துபோன குடிநீர்க் குழாயைச் சரிசெய்து தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

நாள் : 29.07.2019 — இப்படிக்கு
இடம் : மாமண்டூர் — தங்கள் உண்மையுள்ள

ஆ. இளம்பரிதி.

இயல் மூன்று

இயற்கை

கற்றல் நோக்கங்கள்

- இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வைப் பெறுவர்.
- பழமொழிகள் உணர்த்தும் ஆழமான பொருளை அறிந்து பயன்படுத்துவர்
- புதிர்கள், விடுகதைகள் உருவாக்கும் திறன் பெறுவர்
- எழுவாய், செயப்படு பொருள், பயனிலை அறிந்துகொள்வர்

பாடல்

SV62U7

கடல்

எல்லை அறியாய் பெருங்கடலே – நீதான்
இரவும் உறங்காயோ? கடலே
அல்லும் பகலும் அலைகடலே – உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே

பொங்கு திரைகளோ? கடலே – அவை
புரவி நிரைதாமோ? கடலே
எங்கும் உனதொலியோ? கடலே! – அன்றி
இடியின் முழக்கமோ? கடலே!

மலையை வயிற்றடக்கம் கடலே! – எண்ணில்
மகர மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! – சிப்பி
விளையாடற் குதவும் கடலே!

மழைக்கு மூலமும் நீ கடலே! – அதை
வாங்கி வைப்பதும் நீ, கடலே!
வழுத்து மகிமையெலாம் கடலே! – எவர்
மதித்து முடிக்கவலார் கடலே!

– கவிமணி தேசிக விநாயகம்

சொல் பொருள்

அலுப்பு	–	களைப்பு	புரவி	–	குதிரை
மகரம்	–	மீன்	திரைகள்	–	அலைகள்
மகிமை	–	பெருமை			

பாடல் பொருள்

எல்லையின்றிப் பரந்து விரிந்திருக்கும் பெருங்கடலே! நீ இரவும் பகலும் உறங்காது எப்போதும் அலைகளை வீசி ஒலித்துக் கொண்டே இருக்கிறாய். உனக்கு ஓய்வு என்பதே இல்லை. பொங்கி வருகின்ற உன் அலைகள், பார்ப்பதற்குக் குதிரைகள் அணிவகுத்து வருவதைப்போல் காட்சியளிக்கின்றன. எங்கும் ஒலிக்கின்ற உன் ஒலி, அலையோசையால் எழுந்ததா அல்லது இடியோசையால் எழுந்ததா என்று எங்களுக்கு ஐயம் எழுகிறது. உன்னுள் உயர்ந்த மலையும் அடங்கிக் கிடக்கிறது. எண்ணில்லாத மீன் வளங்களையும் விலை மதிப்புடைய முத்துகளையும் கொண்டுள்ள நீ, சிப்பிகள் விளையாடுவதற்கும் உதவுகிறாய். இப்பூமியில் மழை பெய்வதற்குக் காரணமாகவும் இருக்கிறாய். அந்த மழைநீரைச் சேமித்து வைக்கும் பெரிய கலனாகவும் விளங்குகிறாய். ஆகவே, உன் பெருமைகளை எல்லாம் எடுத்துரைக்க வல்லவர்கள் இங்கு எவரும் இலர்.

ஆசிரியர் குறிப்பு

இப்பாடலைப் பாடியவர், கவிமணி தேசிக விநாயகம். இவர், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர். இவர், இனிமையும் எளிமையும் மிக்க பாடல்களை எழுதியமையால், கவிமணி என்று போற்றப்பெற்றார். நம் பாடப்பகுதியிலுள்ள பாடல், குழந்தைப்பாடல்கள் என்னும் தலைப்பில் முதற்பாடலாக அமைந்துள்ளது.

கற்பவை கற்றபின்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக் காட்டுக.
- கடலைப் பற்றி இப்பாடல் மூலம் நீ அறிந்த செய்திகளை உன் சொந்த நடையில் கூறுக.
- கடலைப் பற்றி நீ அறிந்த பாடல்களை வகுப்பறையில் பாடி மகிழ்க.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக!

1. பெருமை + கடல் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) பெருமைகடல் ஆ) பெருங்கடல்

இ) பெரியகடல் ஈ) பெருமைக்கடல்

2. கருங்கடலே என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) கருமை + கடலே ஆ) கருங் + கடலே

இ) கரும் + கடலே ஈ) கரு + கடலே

3. 'திரை' என்ற சொல்லின் பொருள் ________________

அ) மலை ஆ) அலை

இ) வலை ஈ) சிலை

4. மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது ______________

அ) வானம் ஆ) பூமி

இ) கடல் ஈ) நெருப்பு

ஆ. இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

எ.கா. எல்லை – அல்லும்

__________ __________ __________ __________

இ. முதலெழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

எ.கா. அல்லும் – அலுப்பும்

__________ __________ __________ __________

ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?
2. பாடலின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.

உ. சிந்தனை வினா

எல்லையறியாய் பெருங்கடல் என்று கூறக் காரணம் என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக.

பழையனூர் மாந்தோப்பில் கிளி ஒன்று இருந்தது. அதன் பெயர் செல்லம்மா. அந்த ஊரில் அதை அவ்வாறுதான் பெயர் சொல்லி அழைப்பார்கள். மாங்காய் காய்க்கும் பருவத்தில் தோப்பிற்கு வரும் சிறுவர்களிடம் ஒரு படத்தை மரப் பொந்திலிருந்து எடுத்துக் காட்டும். அந்தப் படம் உணர்த்தும் பழமொழியைச் சிறுவர்கள் கூறிவிட்டால் அவர்களுக்கு ஒரு மாங்காய் பறித்துப் போடும். அதனால், அதைப் 'பழமொழிக் கிளி' என்றும் ஆசையாக அழைப்பார்கள்.

மரத்தில் மாங்காய்கள் காய்த்துத் தொங்குவதைக் கண்டு, சிறுவர்கள் ஒவ்வொருவரும் தோப்புக்கு வரத் தொடங்கினர்.

பழமொழிகள் என்பவை, நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகள். பழங்காலம் முதற்கொண்டே பழமொழிகள் வழக்கிலிருந்து வருகின்றன. பழமொழி நானூறு என்னும் பெயரிலேயே நீதிநூல் ஒன்றும் உள்ளது.

சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும்

செல்லம்மா, நான் பிரபு வந்திருக்கிறேன்.

ஓ! பிரபுவா ! நன்றாக இருக்கிறாயா?

நான் நன்றாக இருக்கிறேன். உன்னைப் பார்த்துவிட்டு மாங்காய் பறித்துச் செல்லலாம் என வந்தேன்.

மிக்க மகிழ்ச்சி! நான் காட்டும் படத்திற்குரிய பழமொழியைக் கூறினால் நானே உனக்கு மாங்காய் பறித்துத் தருகிறேன் என்று கூறியவாறு கிளி ஒரு படத்தை எடுத்துக்காட்டியது

இந்தப் படம் உணர்த்தும் பழமொழி என்ன?

யானை வரும் பின்னே! மணியோசை வரும் முன்னே!

சரியாகக் கூறினாய். இதோ, உனக்கு மாங்காய் பறித்துத் தருகிறேன்.

ஐ.......! ரொம்ப நன்றி செல்லம்மா.

எப்படி இருக்கிறாய் செல்லம்மா?

யார் வந்திருப்பது?

வின்சென்ட் வந்திருக்கிறேன் செல்லம்மா. எனக்கும் மாங்காய் வேண்டும்.

இந்தப் படம் உணர்த்தும் பழமொழி என்ன என்று சொல். மாங்காய் தருகிறேன்.

இக்கரைக்கு அக்கரை பச்சை

நன்று, சீக்கிரமாக விடை கண்டுபிடித்து

விட்டாயே! இதோ உனக்கு மாங்காய்!

எனக்கு மாங்காய் கிடைத்துவிட்டது.

நன்றி செல்லம்மா!

கனிமொழி ஏன் அமைதியாக நிற்கிறாய்?

உனக்கு மாங்காய் வேண்டாமா?

வேண்டும் செல்லம்மா!

இந்தப்படம் உணர்த்தும் பழமொழி என்னவென்று சொல் பார்க்கலாம்.

சூறைக்காற்று வீசுது.

இல்லையே கனிமொழி இன்னும் கொஞ்சம் யோசி.

ஆங்..... ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்.

அழகாகக் கூறினாய் இதோ மாங்காய் வாங்கிக் கொள்.

உண்மையாகவே நான் அழகாகக் கூறினேனா? நன்றி செல்லம்மா!

என் நண்பன் முகமது வந்திருக்கிறான் செல்லம்மா!

அப்படியா, இதிலுள்ள பழமொழி என்ன என்று கூறச்சொல், மாங்காய் தருகிறேன்.

எனக்குத் தெரியும் கூறுகிறேன் ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.

மிகவும் அருமை! நான் உனக்கு மாம்பழமே தேடிப் பறித்துத் தருகிறேன்.

நன்றி செல்லம்மா!

செல்லம்மா! எனக்கு?

தேனிசையா? இதில் என்ன பழமொழி இருக்கு சொல்லேன். உடனே பறித்துத் தருகிறேன்.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

கண்ணிமைக்கும் நேரத்தில் கூறிவிட்டாயே! இதோ மாங்காய் வாங்கிக்கொள்.

மாங்காய் சாப்பிட மிகவும் பிடிக்கும் எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது செல்லம்மா, நன்றி!

பழமொழிக்கிளி! எனக்கு மாங்காய் இல்லையா?

யாரு என் செல்லப் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது? கதிரவனா? இதன் பழமொழியைக் கூறு தருகிறேன்.

அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்

மிக்க மகிழ்ச்சி! இதோ உனக்கு மாங்காய், பெற்றுக்கொள்.

ரொம்ப நன்றி பழமொழிக் கிளி!

சிறுவர்கள் அனைவரும் செல்லம்மா! நாங்கள் இன்னும் நிறைய பழமொழி களைத் தெரிந்து கொண்டு மீண்டும் நாளைக்கு வருகிறோம், எனக் கூறிவிட்டு மிகவும் மகிழ்ச்சியாக வீட்டிற்குச் சென்றனர்.

கற்பவை கற்றபின்

- உன் பெற்றோர் அல்லது தாத்தா, பாட்டி பேசும்போது பயன்படுத்தும் பழமொழிகளைத் தொகுத்து வருக. அவைபற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.
- பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பழமொழிகளையும், அவற்றின் பொருள்களையும் உம் சொந்த நடையில் கூறுக.
- பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள புதிர்களையும் அவற்றிற்கான விடைகளையும் உம் சொந்த நடையில் கூறுக.
- பள்ளி நூலகத்தில் உள்ள 'பழமொழிக்கதைகள்' புத்தகத்தைப்படித்து பழமொழிக்கான விளக்கத்தை வகுப்பறையில் கதையுடன் பகிர்ந்து கொள்க.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. மரப்பொந்து இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ) மரம் + பொந்து ஆ) மர + பொந்து
இ) மரப் + பொந்து ஈ) மரப்பு + பொந்து

2. அக்கரை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ) அக் + கரை ஆ) அந்த + கரை
இ) அ + கரை ஈ) அ + அரை

3. சூறை + காற்று இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________

அ) சூறைகாற்று ஆ) சூற்காற்று
இ) சூறக்காற்று ஈ) சூறைக்காற்று

4. கண் + இமைக்கும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கண்ணிமைக்கும் ஆ) கண்இமைக்கும்
இ) கண்மைக்கும் ஈ) கண்ணமைக்கும்

5 நானூறு இதனைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) நான்கு + நூறு
ஆ) நா + நூறு
இ) நான்கு + னூறு
ஈ) நான் + நூறு

ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) மணியோசை – ---------- + ----------

ஆ) தேனிசை – ---------- + ----------

இ. பொருத்தமான சொல்லைக் கொண்டு பழமொழியை நிறைவு செய்க:

புத்தி,	அடி,	காலை,	பயிர்,	வளையாதது

1. யானைக்கும் __________________ சறுக்கும்
2. விளையும் __________________ முளையிலே தெரியும்
3. ஐந்தில் __________________ ஐம்பதில் வளையாது
4. ஆத்திரக்காரனுக்குப் __________________ மட்டு
5. ஆழம் தெரியாமல் __________________ விடாதே

ஈ. சொல்லை இடம் மாற்றிப் பழமொழியைக் கண்டுபிடிக்க.

1. உழுவதை அகல விட உழு ஆழ ____________________________________
2. வளையாதது வளையாது ஐம்பதில் ஐந்தில்____________________________
3. மிஞ்சினால் அளவுக்கு நஞ்சு அமிழ்தமும்_____________________________
4. குற்றம் சுற்றம் பார்க்கின் இல்லை ____________________________________
5. கற்பவர் கரையில கல்வி நாள்சில _________________________

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பழமொழி என்பது யாது?
2. கிளி, யாருக்கு மாம்பழம் தருவதாகக் கூறியது?
3. கிளியைப் 'பழமொழிக் கிளி' என அழைக்கக் காரணம் என்ன?
4. இப்பாடத்தில் நீ அறிந்து கொண்ட பழமொழிகளைப் பட்டியலிடு.

ஊ. சிந்தனை வினா

கிளியைப்போல், நீ பழமொழி கூறுவதாய் இருந்தால் என்ன பழமொழிக்கு எப்படிப் படம் வரைந்து விளக்குவாய்? வகுப்பறையில் செயல்படுத்து.

தப்பிப் பிழைத்த மான்

கா... கா....

காகம் கரைந்து தன் நண்பனான மானைத் தேடியபடி அழைத்தது

இதோ வந்துவிட்டேன் என்று கூறியபடி துள்ளிக் குதித்து ஓடி வந்தது மான்.

காகம் : நண்பா ! நலமாக இருக்கிறாயா?

மான் : ஏதோ இருக்கிறேன் நண்பா ....

காகம் : குரலில் உற்சாகமில்லையே..... ஏன் சோர்வாகப் பேசுகிறாய்?

மான் : எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது.

காகம் : என்னோடு வா. உனக்குப் புல் உள்ள இடங்களை காட்டுகிறேன். அங்கு நீ வயிறாரப் புல்லை மேயலாம்.

மான் : நீ என்மேல் மிகவும் அன்பாக இருக்கிறாய். தினமும் எனக்காக அலைந்து திரிந்து புல்லுள்ள இடங்களைக் கண்டறிந்து வந்து என்னிடம் கூறுகிறாய். நன்றி நண்பா......

காகம் : நன்றியெல்லாம் கூறத் தேவையில்லை எனக்குச் சோர்வான நேரத்தில் உன்மீது அமர்ந்து பயணம் செய்கிறேன். நாமிருவரும் நெடுநாள் நண்பர்கள். ஒருவருக்கொருவர் உதவியாய் இருப்பது இது ஒன்றும் புதிதல்லவே......

மான் : சரி நண்பா ! பேசிக் கொண்டே நெடுந்தூரம் வந்துவிட்டோம். இங்கேயே இன்றைய உணவை உண்டுவிட்டு இருப்பிடம் செல்வோம்.

காகமும் மானும் நல்ல நண்பர்களாக நெடுநாள்கள் இணைந்திருப்பதை நரி ஒன்று கவனித்தது. தன் மனத்திற்குள், கொழு கொழுவென இருக்கும் இந்த மானை நாம் எப்படியாவது கொன்று தின்றுவிட வேண்டும். அதற்கு, எப்பொழுதும் இணைந்தே இருக்கும் இவர்கள் இருவரையும் தனித்தனியே பிரிக்கவேண்டும். அப்போதுதான், மானை இரையாக்க முடியும் என எண்ணியது.

நரி : என்ன தோழர்களே...... எப்பொழுதும் இணைந்தே இருக்கிறீர்கள்....... என்னையும் உங்கள் நண்பனாக ஏற்றுக் கொள்வீர்களா?

மான் : அதற்கென்ன ...... இன்று முதல் நீயும் எங்கள் நண்பனாக எங்களோடு சேர்ந்திருக்கலாம்.

நரி : நன்றி !

காகம் : சரி நேரமாகி விட்டது. இருப்பிடம் செல்லலாம்.

நரி, தன் இருப்பிடம் நோக்கிச் சென்று விடுகிறது

காகம் : நண்பா, யாரையும் சீக்கிரமாக நம்பிவிடாதே! அது நமக்குத் தான் ஆபத்து.

மான் : அப்படியெல்லாம் எந்த ஆபத்தும் வந்துவிடாது. நரியைப் பார்த்தால் நல்லவனாக நல்ல குணமாகத்தான் தெரிகிறது.

காகம் : கண்ணால் காண்பதும் பொய்.

காதால் கேட்பதும் பொய்.

தீர விசாரிப்பதே மெய்.

மான் : ஐயா ! கருத்து கந்தசாமி ! பேசியது போதும்.

வீட்டிற்குச் செல். நானும் என், இருப்பிடம் செல்கிறேன். மீண்டும் நாளை சந்திப்போம்.

அடுத்த நாள் காலை நரி மானை சந்திக்கிறது.

நரி : நண்பனே ! நலமா?

மான் : அடடே ! நரியா? என்ன இவ்வளவு காலையில் என்னைத் தேடி வந்திருக்கிறாய்?

நரி : நண்பனைப் பார்க்க நேரம் காலம் ஏது? உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

மான் : ஏன் எனக்கு என்ன? என்னைப் பார்த்து ஏன் பரிதாபப்படுகிறாய்?

நரி : உடல் மெலிந்து காணப்படுகிறாயே.... சரியான உணவு கிடைக்காததால் கொழு கொழுவென இருக்க வேண்டிய நீ பஞ்சத்தில் அடிபட்டாற்போல் இருக்கிறாய்......

மான் : விலங்குகளுக்குமே இதே உணவுப் பற்றாக்குறைதான். வானம் பொய்த்ததால் வனமெல்லாம் பாலைவனமாக மாறி வருகிறதே.

நரி : பிற விலங்குகளைப் பற்றி நமக்கென்ன கவலை?

எனக்குத் தெரிந்த இடம் ஒன்று இருக்கிறது. அங்கே உனக்கு நல்ல மேய்ச்சல் நிலம் உண்டு. என்னோடு வா. உனக்கு மட்டும் அந்த இடத்தைக் காட்டுகிறேன்.

மான் : நமது நண்பன் காகமும் வரட்டும்.......

நரி : காகத்தை மற்றொரு நாள் அங்கே அழைத்துச் செல்லலாம். இன்று நீ மட்டும் என்னோடு வா.

மான் : சரி, இவ்வளவு வலியுறுத்திச் சொல்கிறாய். வருகிறேன்.

நரி, மானை விவசாயி ஒருவனின் விளைச்சல் நிலத்தில் கொண்டு விடுகிறது. மான் பயிரை நன்கு மேய்ந்து பசியாறிய பிறகு இருப்பிடத்திற்குத் திரும்புகிறது. இச்செயல் காகத்திற்குத் தெரியாமலேயே தொடர்ந்து நீடிக்கிறது.

விவசாயி தன் விளைச்சலைப் பாழாக்கும் விலங்கைப் பிடிக்க முடிவு செய்கிறான். .

அடுத்த நாள் வழக்கம் போல் மான் நரியோடு அந்த வயலுக்குச் சென்று பயிரை மேய்கிறது. அந்த நேரத்தில் விவசாயி வருவதைப் பார்த்தவுடன், தப்பிக்க நினைத்த மான், வேகமாக ஓடும்போது அருகிலிருந்த கம்பிவேலியில் எதிர்பாராமல் சிக்கிக் கொள்கிறது.

இதையறிந்த நரி, எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாய்ப்பு வந்துவிட்டதை நினைத்து மகிழ்ந்தது. மானை அப்படியே தவிக்க விட்டுவிட்டு ஓடிப்போய் அருகிலுள்ள கரும்பு வயலில் மறைந்து கொண்டு நடக்க இருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தது.

காகம் : நண்பா.... நண்பா.... எங்கே இருக்கிறாய்?

காகம் தேடி வருகிறது

என் ஆருயிர் நண்பா ! இங்கேயா இருக்கிறாய்? ஆ! வேலியில் மாட்டிக்கொண்டாயே கத்துவதற்குக்கூட முடியாத நிலையில் இப்படி கம்பிவேலியில் சிக்கிக் கொண்டாயே......

சரி, சரி நீ தப்பித்துக் கொள்ள ஒரு யோசனை சொல்கிறேன். விவசாயி அருகில் வரும்வரை நீ இறந்ததுபோல் அசையாமல் இரு விவசாயி உன்னை வேலியிலிருந்து விடுவித்தவுடன், நான் மரத்திலிருந்து கா கா கா என்று குரல் கொடுக்கிறேன், உடனே தப்பித்து விடு.



விவசாயி : ஓ..... மானா? நீ தான் இத்தனை நாளாக என் பயிரை நாசப் படுத்தினாயா? இன்று வேலியில் மாட்டிக்கொண்டாய் என்று கூறியவாறே மானைப் பிடிக்க வருகிறான். ஓ.. இறந்துவிட்டதுபோல் இருக்கிறதே! சரி, வேலியிலிருந்து மானை விடுவித்து வீட்டிற்கு எடுத்துச் செல்வோம் என்று சொல்லிக்கொண்டே வேலியிலிருந்து மானை விடுவிக்கிறான்.

அப்போது,. காகம் கரைகிறது, அதுவரை இறந்தவாறு நடித்துக்கொண்டிருந்த மான் கண்ணிமைக்கும் நேரத்தில் உயிர் பிழைத்தால் போதும் எனத் துள்ளிப் பாய்ந்து வேகமாக ஓடியது.

விவசாயி : அடடே.......மான் என்னை ஏமாற்றிவிட்டதே!

தன் நீண்ட தடியை எடுத்து, ஓடும் மானை நோக்கி வேகமாக வீசுகிறான். அந்தத் தடி பதுங்கியிருந்த நரியின்மேல் பட்டு, நரி மயங்கிக் கீழே விழுகிறது. விவசாயி ஏமாந்து போகிறான்.

சிறிது நேரத்திற்குப் பின் மயக்கம் தெளிந்து எழுந்த நரியிடம்,

காகம் : நரியே ! உன் வஞ்சக எண்ணம் உனக்கே கேடாக முடிந்தது. நம்பினவர்களுக்கு என்றும் துரோகம் செய்யாதே !

நரி : வெட்கித் தலைகுனிந்தவாறே மன்னித்துவிடு நண்பா! இனிமேல் இப்படி நடந்து கொள்ளமாட்டேன்.

காகம் : தன்னைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும். நண்பர்களோடு உண்மை அன்புடன் பழக வேண்டும்.

நீதி : 'ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்'

கற்பவை கற்றபின்

- ஆபத்தில் உதவுபவர்களே உண்மையான நண்பர்கள் என்னும் தலைப்பில் பேசுக.
- தீயோருடன் கொள்ளும் நட்பு, தீமையையே தரும் என்பதற்கு வேறொரு கதையைக் கூறுக.

மதிப்பீடு

வினாக்களுக்கு விடையளிக்க.

1. நரி, காகத்திடமிருந்து ஏன் மானைப் பிரிக்க எண்ணியது?
2. நரியை நண்பனாக ஏற்றுக்கொண்ட மானிடம் காகம் கூறியதென்ன?
3. நரி, மானை எங்கு அழைத்துச் சென்றது?
4. வேலியில் மாட்டிக்கொண்ட மானைக் காகம் எவ்வாறு காப்பாற்றியது?
5. 'தப்பிப் பிழைத்த மான்' கதையிலிருந்து நீங்கள் அறிந்துகொண்ட நீதி யாது?

சிந்தனை வினா

நமக்கு நண்பர்களாக இருப்பவர்களிடம் என்னென்ன நற்குணங்கள் இருக்கவேண்டும்? பட்டியலிடுக.

கற்கண்டு

சொற்றொடர் அமைப்பு முறை

எழுவாய்

ஒரு தொடரில், யார், எது, எவை, யாவர் என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் (எழுவாய் எப்போதும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும்)

எடுத்துக்காட்டு : **தென்றல்** நடனம் ஆடினாள்

செயப்படுபொருள்

ஒரு தொடரில் யாரை, எதனை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள்

எடுத்துக்காட்டு : தென்றல் **நடனம்** ஆடினாள்

பயனிலை

ஒரு தொடரில் அமைந்துள்ள வினைமுற்றையே பயனிலை என்கிறோம்.

எடுத்துக்காட்டு : தென்றல் நடனம் **ஆடினாள்**
ஆடினாள் – என்பது வினைமுற்று

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் ஒரு தொடரில் இடம் பெற்றிருக்கும்.
- எழுவாயோ, செயப்படுபொருளோ இல்லாமலும் தொடர் அமையும்.

  எ.கா. நடனம் ஆடினாள் – இத்தொடரில் எழுவாய் இல்லை.
- தென்றல் ஆடினாள் – இத்தொடரில் செயப்படுபொருள் இல்லை
- ஒரு தொடர் எழுவாய் அல்லது செயப்படுபொருள் இல்லாமல் அமையலாம். ஆனால், பயனிலை கட்டாயம் இடம்பெற்றிருக்கும்.

கற்பவை கற்றபின்

- தொடரின் அமைப்பு முறையை அறிந்து கூறுக.
- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் தொடரில் சில இடங்களில் வருவதையும், அவை வராமல் தொடர் அமைவதையும் குறித்துக் கலந்துரையாடுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. எழுவாய் எப்போதும் __________ லாகவே இருக்கும்.

அ) வினைச்சொல் ஆ) இடைச்சொல்
இ) பெயர்ச்சொல் ஈ) உரிச்சொல்

2. பாடல் பாடினாள் – இத்தொடரில் __________ இல்லை.

அ) எழுவாய் ஆ) பயனிலை
இ) செயப்படுபொருள் ஈ) சொல்

3. அமுதன் ஓடினான் – இத்தொடரில் __________ உண்டு

அ) பயனிலை ஆ) செயப்படுபொருள்
இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

ஆ. எழுவாய், செயப்படுபொருள், பயனிலைகளை எடுத்து எழுதுக.

1. மாதவி சித்திரம் தீட்டினாள்
2. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
3. அன்பழகன் மிதிவண்டி ஓட்டினான்
4. கிளி பழம் தின்றது.

வ.எண்	எழுவாய் (யார், எது, எவை, யாவர்)	செயப்படுபொருள் (யாரை, எதனை, எவற்றை)	பயனிலை (முடிந்த செயல்)
1.			
2.			
3.			
4.			

இ. எழுவாய், பயனிலை மட்டும் உள்ள தொடர்கள் மூன்று எழுதுக.

1. __________ 2. __________ 3. __________

ஈ) பயனிலை, செயப்படுபொருள் மட்டும் உள்ள தொடர்கள் மூன்று எழுதுக.

1. __________
2. __________
3. __________

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- இயற்கை சார்ந்த பாடல்களை வகுப்பறையில் பாடச் செய்து கேட்டு அதுபோலப் பாடி மகிழ்க.
- புதிர்களைத் தொகுத்து வந்து வகுப்பறையில் கூறுக. நண்பன் கூறிய புதிருக்குச் சரியான விடை கூறி மகிழ்க.
- இயற்கையைக் காக்க வேண்டியதன் அவசியம் பற்றிய உரைகளைக் கேட்டு வந்து வகுப்பறையில் பகிர்க.

ஆ. பேசுதல்

- இயற்கை சார்ந்த பாடல்களைப் பாடி மகிழ்க.
- பழமொழிக் கதைகளை உம் சொந்த நடையில் கூறுக.
- நீ சென்று வந்த சுற்றுலா (அ) ஊர் பற்றி வருணித்துப் பேசுக.
- மழை எவ்வாறு பெய்கிறது? அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.
- தென்னை, வாழை, பனை, வேம்பு, முருங்கை ஆகிய மரங்கள் பேசுவது போல நடித்து "நானே அதிகம் பலன் தருவேன்" என ஒவ்வொருவரும் வகுப்பில் பேசிக்காட்டுக.

இ. படித்தல்

- பழமொழிகளைப் படித்துத் தொகுப்பு தயார் செய்க.
- சிறந்த புதிர்களைப் படித்துச் சேகரித்துத் தொகுப்பு தயார் செய்க.
- புத்தகப் பூங்கொத்துப் பகுதியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழமொழி, புதிர்களைத் தொகுத்து வருக.

ஈ. எழுதுதல்

1. சொல்லக் கேட்டு எழுதுக.

1. மாங்காய் பறித்துத் தருகிறேன்
2. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
3. பழமொழி ஒன்று சொல்
4. கண்ணிமைக்கும் நேரம்

2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அமைதியாக __________	2. தருகிறேன் __________
3. சிறுவர்கள் __________	4. முழக்கம் __________
5. தங்கம் __________	6. விளைவு__________

3. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

என் உடல் ஏழு நிறங்களால் ஆனது ஊதா கருநீலம் நீலம் பச்சை மஞ்சள் இளஞ்சிவப்பு சிவப்பு என்ற வரிசையில் நிறங்கள் அமைந்திருக்கும் எனது பெயரின் முன்பகுதி என் இருப்பிடம் பின்பகுதி என் வடிவம் என் பெயரைக் கண்டுபிடித்துவிட்டாயா

4. பொருத்தமான சொற்களால் நிரப்புக.

(உறுதியாக, சொத்தையாக, பல்வலி, பல்துலக்க)

மருத்துவர் : விமலா உன் உடம்புக்கு என்ன?

விமலா : எனக்கு __________ ஐயா,

மருத்துவர் : எங்கே வாயைத் திற, பல்லெல்லாம் __________ இருக்கிறதே.

விமலா : அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ஐயா?

மருத்துவர் : இனிப்புகளை அதிகமாகச் சாப்பிடக்கூடாது. தினமும் இருமுறை காலையிலும், இரவிலும் __________ வேண்டும். அப்பொழுதுதான் பற்கள் __________ இருக்கும்.

விமலா : நீங்கள் சொன்னதை நான் பின்பற்றுகிறேன் ஐயா.

5. கதையை நிறைவு செய்க.

ஒரு நாள் அந்த நாட்டின் அரசர் குதிரையின் மேல் வலம் வந்து கொண்டிருந்தார். வயதான மனிதர் ஒருவர், தம்முடைய தள்ளாத வயதிலும் சாலையின் ஓரங்களில் குழிகளைத் தோண்டி, விதைகளையும் செடிகளையும் நட்டுத் தண்ணீர் ஊற்றியதைப் பார்த்தார். அரசர் அந்த வயதானவர் செய்யும் செயல்களைத் தொடர்ந்து பார்வையிட்டு வந்தார். ஒரு நாள் ....

....

6. இணைத்துக் கூறுவோம்

- தொடர்புடைய பல சொற்றொடர்களைத் தனித்தனி அட்டைகளில் எழுதிக் கொள்ளுங்கள்.

  எ.கா. மழையில் நனைந்தேன்.
  சட்டை ஈரமானது.

- அனைவரும் வட்டமாக அமர்ந்து கொள்ளுங்கள்
- ஒவ்வொருவரும் ஓர் அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள்
- ஒருவர் எழுந்து கையிலுள்ள அட்டையில் எழுதியுள்ளதைப் படியுங்கள்.
- அதனோடு தொடர்புடைய சொற்றொடர் எழுதியுள்ள அட்டையை வைத்துள்ளவர் உடனே எழுந்து படிக்க வேண்டும்.
- மற்றவர்கள் இரண்டு சொற்றொடர்களையும் இணைத்துக் கூற வேண்டும்.

மழையில் நனைந்ததால் சட்டை ஈரமானது.

6. விளம்பரத்தைப் படித்துப் புரிந்துகொண்டு விடையளிக்க.

பேசும் கிளி! தீ வளையத்திற்குள் பாயும் புலி! பார் விளையாட்டில் பறக்கும் தேவதைகள்! கூண்டுக்குள் உருண்டோடும் குல்லா மனிதர்! வெள்ளைப் புறாக்களின் எல்லையில்லா ஆட்டம்! கோமாளிக் குள்ளர்களின் கும்மாள விளையாட்டு! குதிரையேறும் கொஞ்சும் மழலைகள்!

வாருங்கள்! வண்ணவொளியில் காணுங்கள்!

விளம்பரம் படி ! விடையைக் கொடு

1. சர்க்கஸ் நடைபெறும் இடம் எது?

2. விளையாடுபவர்கள் யார்?

3. குதிரையேறுபவர்கள் யார்?

4. சர்க்கஸ் நடைபெறும் அரங்கத்தின் பெயர் என்ன?

5. சர்க்கஸின் பெயர் என்ன?

9. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

ஒரு நாள் மாலை முத்துவின் வீட்டிற்கு அவனுடைய நண்பர்களான கென்னடியும் அன்வரும் விளையாட வந்தனர். பிறந்து சில நாள்களே ஆன நான்கு நாய்க் குட்டிகளைத் தோட்டத்தில் கண்டனர். நாய்க் குட்டிகளைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டு செல்ல விரும்பினர். இருவரும் ஆளுக்கொரு நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டனர். முத்து அவர்களிடம், "நண்பர்களே, பால் குடிக்கும் இந்தக் குட்டிகளைத் தாயிடமிருந்து பிரிக்க வேண்டா. நம்மை நம் பெற்றோரிடமிருந்து யாராவது பிரித்தால் நாம் எவ்வளவு துன்பப்படுவோம், சிந்தித்துப் பாருங்கள்" என்று கூறினான்.

நண்பர்கள் அமைதியாக நாய்க்குட்டிகளைக் கீழே இறக்கி விட்டனர். நாய்க் குட்டிகள் மகிழ்ச்சியாகத் தம் தாயோடு விளையாடுவதை நண்பர்கள் மூவரும் பார்த்து மகிழ்ந்தனர்.

விடை தருக

1. முத்துவின் தோட்டத்தில் எத்தனை நாய்க்குட்டிகள் இருந்தன?
2. நண்பர்கள் இருவரும் முத்துவின் வீட்டிற்கு எதற்காக வந்தனர்?
3. கென்னடியும் அன்வரும் என்ன செய்ய விரும்பினர்?
4. நண்பர்களுக்கு முத்துவின் அறிவுரை என்ன?
5. நண்பர்கள் நாய்க்குட்டிகளை எடுத்துச் சென்றனரா? ஏன்?

மொழியோடு விளையாடு

1. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எழுதுக.

1. Seashore	6. Nature
2. Morning	7. Pearl
3. Field	8. Farmer
4. Mango tree	9. Project
5. Cyclone	10. Circus

2. கலங்கரை விளக்கம் – இச்சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.

எ. கா

1. கலம்__________
2. __________
3. __________
4. __________

3. **கண்டுபிடித்து எழுதுக.**

1. மணம் மிக்க மலர் __________
2. சிலந்திக்கு எத்தனை கால்கள்? __________
3. பந்தை அடிக்க உதவுவது __________
4. பசுவின் உணவு __________
5. மீன் பிடிக்க உதவும் __________
6. ஒரு தின்பண்டம் __________

க	டு	டை	ன்	த	பு
லி	எ	ட்	டு	பா	ல்
கா	சு	ம	சொ	ட்	தை
வ	ட	ம்	ல்	வ	சி
ல்	ர்	த	லை	லி	டை
ம்	ப	ப்	அ	கு	கை

4. **ஒரு கதையின் முதல் தொடர் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு தொடர் கூறிக்கதையை நிறைவு செய்க.**

கதைத் தொடர் : 1

அன்று காட்டு அரசன் சிங்கத்திற்குப் பிறந்த நாள்

கதைத் தொடர் : 2

இன்சுவை பள்ளி செல்லும் வழியில் பணப்பை ஒன்றைக் கண்டெடுத்தாள்.

கதைத் தொடர் : 3

கவியரசன் நாய், பூனை போன்ற விலங்குகளைத் துன்புறுத்தி அதில் மகிழ்ச்சியடைவான்.

கதைத் தொடர் : 4

நரி ஒன்று கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்த மான்களைக் கண்டது.

5. கடல் வளங்களைக் கண்டுபிடிப்போம்

ப	மீ	மு	ல்	லை
வ	ன்	த்	பா	சி
ள	வ	து	ஆ	ப்
ம்	லை	சு	மை	பி
ச	ங்	கு	அ	லை

1. சிப்பி__________ 2. ___________ 3. ___________
4. ___________ 5. ___________ 6. ___________

6. சரியான சொற்களை எடுத்துப் பொருத்துக

1. வீட்டுக்கு ஒரு .... வளர்ப்போம். — மறம் / மரம்
2. உயிர் கொடுப்பான் .... — தோழன் / தோலன்
3. நேர்மை எப்போதும் .... தரும். — நண்மை / நன்மை
4. கொடுத்து .... இன்பம். — மகிழ்வது / மகிள்வது
5. .... இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும். — குழந்தை / குலந்தை

7. பின்வரும் சொற்களைக் கொண்டு சொற்றொடர் உருவாக்கலாமா!

எ. கா: மழை – மரம் வளர்ப்போம்,மழை பெறுவோம்

மலை – உயர்ந்து நிற்பது மலை

கரி – ____________________

கறி – ____________________

தவளை – ____________________

தவலை – ____________________

வழி –

வலி –

அரை –

அறை –

மனம் –

மணம் –

அறிந்து கொள்வோம்

கடலைக் குறிக்கும் வேறு பெயர்கள்

1. புணரி
2. ஆழி
3. சாகரம்
4. சமுத்திரம்
5. பௌவம்
6. வேலை
7. முந்நீர்
8. நீராழி
9. பெருநீர்

நிற்க அதற்குத் தக

- என்னால் இயன்றவரை இயற்கையைக் காப்பேன்
- எனது வாழ்நாளில் ஒரு மரக்கன்றையாவது நட்டு வளர்ப்பேன்
- எனது சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பேன்

செயல் திட்டம்

- கடல் படம் வரைந்து கடலின் பயன்களைப் பட்டியலிட்டு வருக.
- உமது பள்ளியில் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதைத் செயல்திட்டமாக மேற்கொள்க. புகைப்படத்துடன் எழுதி வழங்குக.
- பழமொழிகள், புதிர்கள், விடுகதைகள் தொகுப்பு தயார் செய்க.

பாடல்

இயல்
நான்கு

அறிவியல்/
தொழில்நுட்பம்

கற்றல் நோக்கங்கள்

- அறிவியல் விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்
- சுற்றுப்புறத்தில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் அறிவியல் பின்புலம் உள்ளதை அறிந்துகொள்ளுதல்
- அறிவியல் கண்டுபிடிப்புகளையும் கண்டுபிடித்தவர்களையும் தெரிந்துகொள்ளல்
- காரணகாரியங்களை அறிவியல் மனப்பான்மையுடன் அணுகுதல்
- மூவிடப்பெயர்களை அறிந்துகொண்டு, உரிய இடங்களில் பயன்படுத்துதல்

எதனாலே, எதனாலே?

எதனாலே, எதனாலே?
பலவண்ண வானவில் எதனாலே?
விண்மீன் ஒளிர்வது எதனாலே?
ரோஜாப்பூ சிவப்பது எதனாலே?
இலைகள் உதிர்வது எதனாலே?
மின்மினி மின்னுவது எதனாலே?
பறவைகள் பறப்பது எதனாலே?
மின்னல் மின்னுவது எதனாலே?
மேகம் கறுப்பது எதனாலே?
கடலில் அலைகள் எதனாலே?
அனைத்தின் காரணம் கண்டறிந்தால்
அறிஞனாகலாம் அதனாலே!

L32TG9

பாடல் பொருள்

ஏன், எதற்கு, எப்படி என்னும் அறிவியல் சிந்தனையைத் தூண்டும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது. நம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்களைக் காரணகாரியங்களுடன் விளக்க முற்படுகிறது.

- வானில் உள்ள நீர்த்துளிகளுள் சூரிய ஒளி ஊடுருவும்போது, நீர்த்துளிகளின் பின்புறமாக எதிரொளிப்பதால் வானவில் தோன்றுகிறது.
- விண்மீன்கள், தங்களிடம் உள்ள ஒன்றிற்கும் மேற்பட்ட ஹைட்ரஜன் அணுக்களை இயற்பியல் நிகழ்வின் உதவியுடன் ஒன்றிணைப்பதன் மூலம் ஒளி வீசுகின்றன.
- ரோஜாப்பூவில் 'ஆந்தோசைனின்' என்ற நிறமி இருப்பதால், சிவந்த நிறத்தில் காணப்படுகின்றது.
- கோடைக்காலங்களில் நீராவிப் போக்கைத் தடுப்பதற்காகத் தாவரங்களிலிருந்து இலைகள் உதிர்கின்றன.
- மின்மினிப் பூச்சிகளின் பின்னால் அடிக்கடி விளக்கு எரிவதைப் போல் மின்னுகின்றன. காரணம், லூசிஃபெரேஸ் என்சைம் மின்மினிப்பூச்சி பின்னால் இருப்பதால் மின்னுகிறது.
- பறவைகள், பறக்கக் காரணம் அவற்றின் எலும்புகளிலும் இறகுகளிலும் காற்றுப் பைகள் உள்ளன. அவை, பறப்பதற்கு உதவுகின்றன.
- மின்னிறக்கத்தால் மின்னல் மின்னுகிறது.
- மேகத்தில் அதிக அளவு நீர் இருப்பதால், சூரிய ஒளி ஊடுருவ முடியாது. ஆதலால், மேகம் கறுப்பாகத் தோன்றுகிறது.
- பூமியின் மீது சந்திரனின் ஈர்ப்பு விசை இருப்பதால், கடலில் அலைகள் தோன்றுகின்றன.

கற்பவை கற்றபின்

- பாடலைப் புரிந்துகொண்டு பாடுக.
- அறிவியல் சிந்தனையைத் தூண்டும் வினாக்களுக்கு விடை அறிந்துகொள்க.
- பாடலில் உள்ளதுபோல், வேறு சில வினாக்களுக்குரிய விடைகளை அறிய முயல்க.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. பொருத்துக

ZNI79S

1. விண்மீன்	–	உதிரும்
2. ரோஜாப்பூ	–	பறக்கும்
3. மேகம்	–	ஒளிரும்
4. இலை	–	சிவக்கும்
5. பறவை	–	கறுத்திருக்கும்

ஆ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. வானவில் எப்படி தோன்றுகிறது?
2. கடலில் ஏன் அலைகள் உண்டாகின்றன?

இ. சிந்தனை வினா

நாம் வாழும் பூமி, சுழன்று கொண்டேயிருக்கிறது. ஆனால், அதில் வாழும் நாம் சுழல்வதில்லை. ஏன்? விடை காண்போமா?

அறிந்து கொள்வோமா?

மோட்டார் வண்டி உருவான கதை

தந்தையுடன் சிறுவன் ஒருவன் தெருவில் சென்று கொண்டிருந்தான். எதிரில், ஒரு வண்டி மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்த வண்டியை மாடும் இழுக்கவில்லை; குதிரையும் இழுக்கவில்லை. அதைப் பார்த்த சிறுவனுக்கு வியப்பு ஏற்பட்டது. அப்பாவிடம் அதைப் பற்றிக் கூறினான். அதுமட்டுமின்றி, அந்த வண்டியோட்டியிடமும் சென்று வண்டியைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டான். அந்த வண்டியின் பெயர் ரோடு – என்ஜின் எனவும் அது, நீராவியால் ஓடுகிறது எனவும் அறிந்துகொண்டான். அன்றே அந்தச் சிறுவனுக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. மனிதர்கள் ஓட்டிச் செல்லக்கூடிய வண்டிகளைச் செய்து, அவை மிக வேகமாக ஓடுமாறு செய்ய வேண்டும் என்று நினைத்தான்.

பெரியவனானதும் ஓர் இயந்திரத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தான். பகலில் அங்கு வேலை செய்வான். இரவில், வேகமாக ஓடும் வண்டியை எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்று ஆராய்ச்சி செய்யத் தொடங்கிவிடுவான். பல நாள் செய்த முயற்சி ஒரு நாள் வெற்றி பெற்றது. ஆம். மோட்டார் வண்டி கண்டுபிடிக்கப்பட்டது. அன்று மோட்டார் வண்டியைக் கண்டுபிடிக்க அயராது முயற்சி செய்து வெற்றி கண்ட அந்தச் சிறுவன்தான், அமெரிக்காவைச் சேர்ந்த ஹென்றி போர்ட் என்பவர். தாமே சொந்தமாக மோட்டார் தொழிற்சாலையொன்றை நிறுவி, ஆயிரக்கணக்கான மோட்டார்களை உருவாக்கினார். 'மோட்டார் மன்னன்' என்று உலகமே அவரைப் புகழ்ந்தது. அவருடைய தொழிற்சாலையில் உருவான மோட்டார் கார்கள் உலகப் புகழ் பெற்றன.

இளம்வயதிலிருந்தே புதிதாக ஒன்றை உருவாக்க வேண்டும் என எண்ணும் எண்ணத்தை நாம் வளர்த்துக்கொண்டால், முடியாததனையும் முடித்துக்காட்டலாம். விடாமுயற்சியும் கடின உழைப்பும் நம்மை மென்மேலும் உயர்த்தும்.

உரைநடை

இயல் நான்கு

அறிவின் திறவுகோல்

முதன்முதலில் அறிவு என்னும் கருவி செயல்படத் தொடங்கிய நாள், மனிதனுக்கு அச்சம் மிகுந்ததாகவே இருந்திருக்கும். தன் அறிவைக் கொண்டு, அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். காலையில் ஒளிவீசிக் கொண்டிருந்த கதிரவன், திடீரென மாலையில் மறைந்ததும் அவனது அறிவு விழித்துக் கொண்டது. அந்தக் கதிரவன் எங்கே போனான்? இப்படியே இருளாகத்தான் இருக்குமா? என்று அவன் எண்ணிக் கொண்டிருக்க மறுநாள் மீண்டும் கதிரவன் தோன்றினான். அப்போதே மனிதனின் அறிவு வேலை செய்யத் தொடங்கியது. இந்தக் கதிரவன் நேற்றுத் தோன்றிய இடத்திலேயே ஏன் இன்றும் தோன்றுகிறான்? இதுபோன்று அடுக்கடுக்காக அவன் உள்ளத்தில் சிந்தனை தோன்றியது. ஏன்? எதற்கு? எப்படி? என்றெல்லாம் அவன் சிந்திக்கத் தொடங்கியபோதுதான் அறிவியல் வளரத் தொடங்கியது. அவ்வகையில் அறிவியலை வளர்த்த அறிஞர்களைப்பற்றி நாம் அறிந்துகொள்வது மிகவும் தேவை. இப்பாடப்பகுதியில் அறிவால் வளர்ந்த அறிவியல் சிந்தனையாளர்களைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

ஆப்பிளைக் கண்டார்; ஆற்றலைத் தந்தார்

தன் வீட்டுத் தோட்டத்திலுள்ள ஆப்பிள் மரத்தினடியில் சிறுவன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அப்போது, மரத்திலிருந்த ஒரு பறவை சிறகடித்துப் பறந்து செல்ல, திடீரென ஆப்பிள் ஒன்று மரத்திலிருந்து கீழே விழுந்தது. நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? "ஆகா, நமக்கு ஓர் ஆப்பிள் கிடைத்ததே" என்று மகிழ்ச்சியோடு உண்ணத் தொடங்கியிருப்போம் அல்லவா? ஆனால், அந்தச் சிறுவன், அப்படி நினைக்கவில்லை. இந்த ஆப்பிள் ஏன் மேலே மேலே வானத்தைநோக்கிப் போகாமல் கீழிறங்கி வந்து விழுகிறது? என்று சிந்திக்கத் தொடங்கிவிட்டான். இதில் ஏதோ ஓர் இயற்கைச் சக்தி இருக்கவேண்டும் என எண்ணினான். இதன் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று தன் பிறந்தநாளில் முடிவு செய்தான். அன்று தன் பிறந்தநாள் பரிசாக ஆப்பிள் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தான். அன்று சிந்திக்கத் தொடங்கிய அந்தச் சிறுவன்தான், புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்துப் பின்னாளில் உலகப்புகழ் பெற்ற சர் ஐசக் நியூட்டன். அவர், பூமிக்கு ஈர்ப்புச் சக்தி உண்டு என்ற உண்மையை உலகுக்கு உணர்த்திய அறிவியலறிஞர் ஆவார்.

வேடிக்கை பார்த்தார்; வியக்க வைத்தார்

பூங்கா ஒன்றில் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர். அருகில் சிந்தனையுடன் அமர்ந்திருந்தார் மருத்துவர் ஒருவர். சிறுவனொருவன், 'ஸீஸா' என்ற ஒருவகை மரப்பலகையின் மீது ஒரு முனையில் குண்டூசியால் கீறிக்கொண்டிருந்தான்.

பலகையின் மறுமுனையில் தன் காதைப் பொருத்தி, எழும் ஒலியைக் கேட்டுக் கொண்டிருந்தான் மற்றொரு சிறுவன். பலகையின் ஒரு முனையில் குண்டூசியால் மெதுவாகக் கீறும்போது எழுந்த ஒலி, மறுமுனையில் மிகத் தெளிவாகக் கேட்பதைக் கண்டு அந்தச் சிறுவன் வியப்படைந்தான்.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த அந்த மருத்துவர், சிறுவர்களின் செய்கையைக் கண்டார். அவர் உள்ளத்தில் மின்னல்போல் ஓர் ஒளிக்கீற்று தோன்றியது. தாம் விடை தெரியாமல் தவித்த ஒரு வினாவுக்கு இப்போது விடை கிடைத்துவிட்டது. அவர், அந்தச் சிறுவர்களை நோக்கிச் சென்றார். மரம் போன்ற திடப்பொருள்கள் ஒலியைப் பெருக்கும் தன்மையுடையவை. அதனால்தான், ஒரு முனையில் மெதுவாகக் கீறினாலும் மறுமுனையில் தெளிவாகக் கேட்கிறது என அவர்களிடம் விளக்கினார்.

அந்த விளக்கம் சிறுவர்களுக்கு மட்டுமல்ல, அவருக்கும்தாம். ஏனெனில், நோயாளியின் இதயத் துடிப்பை எவ்வாறு துல்லியமாகக் கேட்கமுடியும் என்றுதானே அவர் கவலைப்பட்டார். இப்போது, அவருக்கே விடை காண முடிந்ததல்லவா? உடனே ஓட்டமும்நடையுமாக மருத்துவமனையை அடைந்தார். தாள்களை ஓர் உருளை வடிவமாகச் சுருட்டிக் கொண்டு, நோயாளியை நெருங்கினார். காகித உருளையின் ஒரு முனையை நோயாளியின் மார்பில் வைத்து, மறுமுனையில் தம் காதை வைத்துக் கேட்டார். என்ன வியப்பு! நோயாளியின் இதயத்துடிப்பு இவருக்குத் துல்லியமாகக் கேட்டது. அந்த மணித்துளியில் மருத்துவ உலகம் அதுவரை கண்டிராத மாபெரும் ஒரு முயற்சிக்கு வித்திட்டது. ஆம். ஸ்டெதஸ்கோப் எனப்படும் இதயத்துடிப்பைக் கண்டறியும் கருவி அப்போதுதான் உருவானது. அதைக் கண்டுபிடித்தவர், வேறு யாருமல்லர், அந்தப் பூங்காவில் சிறுவர்களின் விளையாட்டிலிருந்து ஓர் உண்மையைக் கண்டுபிடித்தாரே அந்த மருத்துவர்தாம். அவர் பெயர், இரேனே லென்னக்.

ஆவியைக் கண்டார்; நீராவி இயந்திரம் தந்தார்

அந்தச் சிறுவனுக்கு வயது பன்னிரண்டு. சமையலறைக்குள் நுழைந்த சிறுவன், தேநீர் தயாரிப்பதற்காகக் கெட்டிலில் நீர் கொதித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். நீர் நன்றாகக் கொதித்தவுடன் அந்தக் கெட்டிலின் மூக்கு வழியாகக் 'குப் குப்' என்று ஆவி வெளிவருவதைப் பார்த்தான். இந்த ஆவி வெளிவராதபடி கெட்டிலின் மூக்கை அடைத்தால் என்ன நடக்கும் என்று எண்ணினான். உடனே, அந்தப் பாத்திரத்தின் மூக்குப்பகுதியை மூடினான். இப்போது ஆவி வரவில்லை. சிறிதுநேரம் சென்றது. கெட்டிலின் மூடி மெல்ல அசையத் தொடங்கியது. அதனால், சிறிது இடைவெளி ஏற்பட்டது. இப்போது, நீராவி கொப்புளித்துக்கொண்டு வெளியேறியது. அந்தச் சிறுவன் பார்த்துக்கொண்டே நின்றான். மேலும் சிறிதுநேரம் சென்றபின், கெட்டிலின் மூடி மேலெழும்பத் தொடங்கியது. அப்புறம்... அப்புறம் என்ன? மூடியைத் தள்ளிவிட்டு நீராவி வேகமாக வெளிவரத் தொடங்கியது. அந்தச் சிறுவனுக்கு வியப்பு மேலிட்டது. இந்த நீராவியும் புகையும்தான் அந்தச் சிறுவனை நீராவி என்ஜினையும் புகைவண்டியையும் கண்டுபிடிக்கத் தூண்டியது. அந்தச் சிறுவன்தான் ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்த ஜேம்ஸ் வாட். இவர்தாம் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கக் காரணமாக இருந்தார்.

கற்பவை கற்றபின்

- நம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்களை உற்றுநோக்கிக் காரணகாரியம் கண்டறிக.
- அறிவியல் அறிஞர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.
- 'அறிவுக்கு விருந்தாகும் அறிவியல்' என்னும் தலைப்பில் 5 மணித்துளி பேசுக.
- எளிய கண்டுபிடிப்பு ஒன்றை வகுப்பில் நிகழ்த்திக்காட்டுக.

E9YK3B

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. அறிவியலறிஞர் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) அறிவியல் + அறிஞர் ஆ) அறிவு + அறிஞர்
இ) அறிவியல் + லறிஞர் ஈ) அறவியல் + அறிஞர்

2. மணித்துளி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) மணித் + துளி ஆ) மணி + துளி
இ) மண் + துளி ஈ) மனி + துளி

3. பத்து + இரண்டு – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) பன்னிரெண்டு ആ) பன்னெண்டு
இ) பன்னிரண்டு ஈ) பன்னண்டு

4. **வேகமாக** – இச்சொல்லுக்குரிய பொருள் ....

அ) மெதுவாக ஆ) விரைவாக இ) கவனமாக ஈ) மெலிதாக

5. **மரப்பலகை** – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது..

அ) மரப் + பலகை ஆ) மர + பலகை

இ) மரம் + பலகை ஈ) மரப்பு + பலகை

ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) நீராவி – --------- + ----------

ஆ) புவியீர்ப்பு – --------- + ----------

இ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அ) சமையல் + அறை – ----------------------

ஆ) இதயம் + துடிப்பு – ----------------------

ஈ. பொருத்துக.

1. ஐசக் நியூட்டன் – நீராவி இயந்திரம்
2. இரேனே லென்னக் – புவியீர்ப்பு விசை
3. ஜேம்ஸ் வாட் – ஸ்டெதஸ்கோப்

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. மனிதனின் சிந்தனையால் எது வளரத் தொடங்கியது?
2. ஐசக் நியூட்டன், புவியீர்ப்பு விசையைக் கண்டறிய எந்த நிகழ்ச்சி காரணமாக இருந்தது?
3. ஸ்டெதஸ்கோப் கண்டுபிடிப்பதற்குக் காரணமான நிகழ்வு எது?
4. நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
5. அறிவியலறிஞர்களிடம் உற்றுநோக்கும் திறன் உள்ளது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஊ. சிந்தனை வினாக்கள்

1. ஒவ்வொரு நிகழ்வுக்குப் பின்னும் ஓர் அறிவியல் உண்மை உள்ளதா? உங்களால் விளக்க இயலுமா?
2. நீரில் நீந்தும் மீனால், நிலத்தில் வாழ முடிவதில்லையே, ஏன்?

இயல் நான்கு

துணைப்பாடம்

நானும் பறக்கப் போகிறேன்

ஆம் மகளே.. மனிதன் பறவையைக் கண்டான்; விமானம் படைத்தான். அப்படி விமானத்தைக் கண்டுபிடித்தவர் யாரென்று உனக்குத் தெரியுமா?
எனக்குத் தெரியுமே! ரைட் சகோதரர்கள் அல்லவா!
சரியாகச் சொன்னாய். பாராட்டுகள். அவர்களும் உன்னைப்போல் பறக்க ஆசைப்பட்டவர்கள்தாம்.
அதற்காக அவர்கள் என்ன முயற்சி செய்தார்கள்?
சிறுவயதிலே இருவரும் பறவைகளைப் பார்ப்பது, பல வகைகளில் பட்டங்கள் செய்து பறக்கவிடுவது என ஆர்வமாக இருந்தனர்.
அருமை. இயற்கையைப் பார்த்து வியப்பது, விளையாடுவது இவற்றிலிருந்துகூட நம்மால் நிறைய கற்றுக்கொள்ள முடியுமா?
ஆம். ரைட் சகோதரர்கள் தாங்கள் பறப்பதற்காகப் பலமுறை முயற்சி செய்தனர். அனைத்திலும் தோல்வியே. ஆனாலும், தோல்வியிலிருந்து நிறைய கற்றுக்கொண்டார்கள்.
ஓட்டப் பந்தயத்தில் தோற்றால்கூட சிலர் அழுகிறார்களே, அப்பா.
ஆம். நாம் எதிலும் தொடர்ந்து முயற்சி செய்தால், கட்டாயம் ஒருநாள் வெற்றி பெறலாம்.
அப்போ... ரைட் சகோதரர்கள் இதில் எப்படி வெற்றி பெற்றார்கள்?
அவர்கள் செய்த முயற்சிகளில் உள்ள குறைகளைச் சரிசெய்து கொண்டே வந்தார்கள். ஒரு நாள் பறப்பதற்கான கருவியைக் கண்டுபிடித்து விட்டார்கள்.
அது எப்போது நடந்தது? .
1903 ஆம் ஆண்டு டிசம்பர் 17அன்று 12 நொடிகள் ரைட் சகோதரர்களில் ஒருவர், தாங்கள் சொந்தமாக உருவாக்கிய விமானத்தில் உயர்ந்த பகுதியிலிருந்து சிறிது தூரம் பறந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.
நானும்கூட அப்படி ஒருநாள் பறந்துகாட்டுவேன், மேலும் சாதனைகள் படைப்பேன் அப்பா.
நல்லது, முயற்சி செய்

கற்பவை கற்றபின்

- ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டுபிடிக்க என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டனர்? நூலகத்தில் தேடிப் படிக்க.
- நீங்களே கண்டறிந்த எளிய கண்டுபிடிப்பை விளக்கப்படமாக வரைந்துகாட்டுக.
- எவரேனும் அறிவியலறிஞர் ஒருவரின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை நாடகமாக நடித்துக்காட்டுக.
- கற்பனையாக அறிவியல் புனைகதையொன்றை எழுதி, வகுப்பில் படித்துக்காட்டுக.

PVZUN8

மதிப்பீடு

வினாக்களுக்கு விடையளிக்க.

1. தன்னால் பறக்க முடியாததற்கு அமுதா கூறிய காரணம் என்ன?
2. பறப்பதற்கு ஏற்றவகையில் பறவையின் உடலமைப்பு எவ்வாறு உள்ளது?
3. பறக்கும் விமானத்தைக் கண்டறிந்தவர்கள் யார், யார்?

சிந்தனை வினா.

பறவைகளைப்போல் பறக்க முடிந்தால், நமக்கு எத்தகைய உடலமைப்பு இருக்கவேண்டும்?

கற்கண்டு

மூவிடப்பெயர்கள்



மான்விழி : அடடே! கலையரசியா? ஆளே அடையாளம் தெரியவில்லையே? இவ்வளவு நாளாக எங்கே இருந்தாய்?

கலையரசி : நானும்கூட உன்னைப் பார்த்து நெடுநாளாகிவிட்டது. எங்கள் குடும்பத்துடன் மும்பையில் அல்லவா இருந்தோம். சென்ற வாரம்தான் என் தந்தைக்குப் பணிமாற்றம் நம்ம ஊரிலேயே கிடைத்தது.

மேற்கண்ட செய்தியைப் படித்தீர்களா? நீங்கள் எந்த அளவிற்குப் புரிந்து கொண்டீர்கள் என்று பார்க்கலாமா?

- நீங்கள் படித்த செய்தி, என்ன வடிவத்தில் உள்ளது?

  உரையாடல் வடிவம்

- நீங்கள் படித்த பகுதியில் பேசுபவர் யார்? கேட்பவர் யார்?

  பேசுபவர் மான்விழி, கேட்பவர் கலையரசி

- இருவரும் என்ன பேசுகிறார்கள்?

  இருவரும் நெடுநாள் கழித்து ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வது குறித்துப் பேசுகின்றனர்.

சரியாகச் சொல்லிவிட்டீர்கள். ஆகவே, நீங்கள் படித்த உரையாடலில் பேசுவோர், கேட்போர், பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் அமைந்துள்ளன. இங்கு பேசுபவர் யார்? மான்விழி. அதனால், பேசுவோரைக் குறிக்கும் இடம் தன்மை. அடுத்ததாக, கேட்பவர் யார்? கலையரசி. ஆதலால், கேட்போரைக் குறிக்கும் இடம், முன்னிலை. இருவரும் யாரோ ஒருவரைப்பற்றி அல்லது ஏதோ ஒரு செய்தியைப் பற்றிப் பேசுகின்றனர். ஆதலால், பேசப்படுபவர் அல்லது பேசப்படும் செய்தியைக் குறிக்கும் இடம், படர்க்கை.



- ☞ தன்னைக் குறிப்பது, தன்மை.
- ☞ முன்னால் இருப்பவரைக் குறிப்பது, முன்னிலை.
- ☞ இவ்விருவரையும் தவிர மற்றவற்றை/ மற்றவர்களைக் குறிப்பது, படர்க்கை.

☞ ஒரு பெயர்ச்சொல்லை வேறொரு பெயர்ச்சொல்லால் குறிப்பது, மாற்றுப் பெயர்ச்சொல்.

☞ இந்த மாற்றுப் பெயர்ச்சொல்தான் இடம் நோக்கித் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவிடப்பெயர்களாக அமைகிறது.



தன்மை – நான், நாம், யான், யாம், நாங்கள்

முன்னிலை – நீ, நீர், நீவிர், நீயிர், நீங்கள்

படர்க்கை – அவன், அவள், அவர், அது, அவை

தற்போதைய வழக்கில், அவர் என்பது, ஒருவரைக் குறிக்கிறது; அவர்கள் என்பது, பலரைக் குறிக்கிறது. எ.கா. **அவர் பேசினார்/ அவர்கள் பேசினார்கள்.**

ஆனால், **அது வந்தது, அவை வந்தன** என்று இருப்பதைப்போல், **அதுகள் வந்தது, அவைகள் வந்தன** என்பன வழக்கில் இல்லை. அவை, வழூஉச்சொற்களாகக் (பிழையானவையாகக்) கூறப்படுகின்றன.

மூவிடப்பெயர்கள் – ஒருமையும் பன்மையும்					
தன்மை		முன்னிலை		படர்க்கை	
ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
நான், யான்	நாம், யாம் நாங்கள்	நீ	நீர், நீங்கள், நீவிர், நீயிர்	அவன், அவள், அது	அவர், அவை

கற்பவை கற்றபின்

- மூவிடப்பெயர்கள் பயன்படும் இடங்களை அறிந்துகொள்க.
- ஒருமையிலும் பன்மையிலும் மூவிடப்பெயர்கள் மாற்றம் அடைவதைக் கண்டறிக.
- உங்கள் பெற்றோரிடம் பேசும்போதும் உங்கள் நண்பர்களிடம் பேசும்போதும் நீங்கள் பயன்படுத்தும் மூவிடப்பெயர்களைக் குறிப்பிடுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. ___________ எங்குச் சென்றீர்கள்?

அ) நீ ஆ) நாங்கள் இ) நீங்கள் ஈ) அவர்கள்

2. செடியில் பூக்கள் பூத்திருந்தன. ---------- அழகாக இருந்தன.

அ) அது ஆ) அவை இ) அவள் ஈ) அவர்

3. இந்த வேலையை ---------- செய்தேன்.

அ) அவன் ஆ) அவர் இ) நான் ஈ) அவள்

ஆ. பொருத்துக.

1. தன்மைப் பெயர்	–	அவர்கள்
2. முன்னிலைப் பெயர்	–	நாங்கள்
3. படர்க்கைப் பெயர்	–	நீங்கள்

இ. உரைப்பகுதியில் பொருத்தமான இடப்பெயர்களை நிரப்புக.

தென்றலும் அமுதனும் அறிவியல் கண்காட்சிக்குச் சென்றனர். அங்கு மனிதர்போன்ற வடிவத்துடன் ரோபோ சிலை ஒன்று இருந்தது. -------- எல்லாரையும் இரு கைகூப்பி வரவேற்றது. அந்தச் சிலை ---------க்கண்டதும் ------------ யார்? எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டது. உடனே, இருவரும் ---------- அருகிலிருக்கும் பள்ளியில் படிப்பவர்கள் என்றனர். அமுதன், அந்தச் சிலையிடம் ------ யார்? இங்கு என்ன செய்கிறாய்? என்று கேட்டான்.

ஈ. தொடர்களிலுள்ள பெயர்ச்சொற்களைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என வகைப்படுத்துக.

1. நீங்கள் எங்குச் சென்றீர்கள்?	நீங்கள் – முன்னிலை
2. குழலி படம் வரைந்தாள்	________________
3. கதிர் நேற்று வரவில்லை	________________
4. நான் ஊருக்குச் சென்றேன்	________________
5. மயில் ஆடியது	________________

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- ஏன்? எதற்கு? எப்படி? எங்கே போன்ற வினாக்களை எழுப்பக்கூடிய அறிவியல் விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டறிக.
- அறிவியல் மன்றங்களில் சிந்தனையைத் தூண்டும் வினாக்களைக் கேட்டு, விடை காண்க.

ஆ. பேசுதல்

- அறிவியல் வளர்ச்சி ஆக்கத்திற்கா/ அழிவிற்கா பட்டிமன்ற உரை தயாரித்துப் பேசுக.
- அறிவியலறிஞர் ஒருவரின் கண்டுபிடிப்பு குறித்து 5 மணித்துளி பேசுக.

இ. படித்தல்

- அறிவியல் சார்ந்த நூல்களை நூலகத்தில் தேடிப் படித்து மகிழ்க.
- நீங்கள் விரும்பிப் படித்த அறிவியல் புனைகதையொன்றை வகுப்பில் கூறுக.

ஈ. சொல்லக்கேட்டு எழுதுக.

1. பறவைகள் பறக்கின்றன
2. ரோஜாப்பூ சிவப்பு நிறத்தில் உள்ளது.
3. கடலில் அலைகள் தோன்றுகின்றன.

உ. தொடரில் அமைத்து எழுதுக.

1. பறவை – ____
2. விமானம் – ____
3. முயற்சி – ____
4. வானவில் – ____
5. மின்மினி – ____

ஊ. பொருத்துக

1. மின்மினி – சிறகு
2. இறகின் தொகுப்பு – ஹைட்ரஜன் அணுக்கள்
3. வானவில் – பறவையின் இறகு
4. காற்றுப்பைகள் – லூசிஃபெரேஸ் என்சைம்
5. விண்மீன் – நீர்த்துளி எதிரொளிப்பு

எ. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை மூலம் வானத்தில் நைட்ரஜன் ஆக்ஸைடுகள் அதிகரிக்கின்றன. தொழிற்சாலைகள் மிகுந்துள்ள நாடுகளிலும், மோட்டார் போக்குவரத்து அதிகமாக உள்ள பிரதேசங்களிலும் அமில மழை அதிகமாகப் பெய்வதாகக் கண்டறிந்துள்ளனர். நிலப்பரப்பில் கால்சியம் கார்பனேட் பத்து மில்லி கிராமுக்குக் குறைவாக இருந்தால் அந்த நிலப்பரப்பில் அமில மழையின் பாதிப்பு அதிகமாக இருக்கிறது. அமிலமழை அடிக்கடி பெய்யும் இடங்களில் கடல் பகுதி மீன்களும், சின்னஞ்சிறு உயிரினங்களும் உயிரிழக்க நேரிடுகின்றன.

வினாக்கள்

1. அமில மழை எங்கு அதிகமாகப் பெய்கிறது?
2. அமில மழையின் பாதிப்பு எங்கு அதிகமாக இருக்கும்?
3. மீன்களும், சின்னஞ்சிறு உயிரினங்களும் உயிரை இழக்கக் காரணம் என்ன?
4. பொருள் தருக. அதிகரித்தல் ---------, பிரதேசம் ---------, பாதிப்பு ---------

ஏ. வண்ண எழுத்திலுள்ள பிறமொழிச் சொல்லுக்குத் தமிழ்ச்சொல் எழுதுக.

1. நான் தபால் நிலையத்திற்குச் சென்றேன். ______________________________
2. ஓய்வு நேரத்தில் ரேடியோ கேட்பேன் ______________________________
3. பஞ்சாயத்துக்கூட்டம் நாளை கூடுகிறது ______________________________
4. ஹோட்டலில் உணவு தயாராக உள்ளது ______________________________
5. அலமாரியில் துணிகள் உள்ளன. ______________________________

ஐ. பாடலை நிறைவு செய்க

செடிகள் நாளும் வளருதே
ஏன்? ஏன்? ஏன்?
பனிமலை உருகிப் போகுதே
ஏன்? ஏன்? ஏன்?
____
____
____
____
____
____
____

மொழியோடு விளையாடு

1. ஒரே ஓசையில் முடியும் பெயர்களைக் கொண்ட படங்களை இணைக்க.







2. சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குவோம்

பட்டுக்கோட்டை

பட்டு

__________ __________ __________ __________

__________ __________ __________ __________

3. **குறிப்புகளைப் படித்து, விடை கண்டறிக.**

8 வா 2	ன	ம்	ளி	ஒ	ம	6 வி
ன	ந்	பு	5 கு	தி	ரை	மா
வி	ஆ	ப்	ல்	ய	7 ப	ன
ல்	கி	டு	1 ப	ட்	ட	ம்
ல	டூ	4 து	ப்	ம	கு	க
டி	ணா	ண்	3 9 க	ப	லை	10 கா

1. பறக்கவிட்டு மகிழ்வோம்
2. நீல நிறத்தில் காட்சியளிக்கும்
3. கடற்பயணத்திற்கு உதவும்
4. படகு செலுத்த உதவும்
5. உயிரினங்களுள் ஒன்று
6. இதன் உதவியால் வானில் பயணிக்கலாம்
7. பறவைகள் இதுபோன்ற உடலமைப்பு கொண்டுள்ளது
8. ஏழு நிறங்கள் கொண்டது
9. இராமன் இதன் மூலம் எதிரொளிப்பு விளையாட்டு விளையாடினான்
10. பொழுது விடிவது

4. **பாடப்பகுதியில் 'சுற்றும்முற்றும், ஓட்டமும்நடையுமாய் என்று சொற்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றிற்கு இணைச்சொற்கள் என்று பெயர். இவைபோன்று நான்கு சொற்கள் எழுதுக.**

1. ------------------------- 2. ----------------------

3. ------------------------- 4. ----------------------

5. ஒரே ஓசையுடைய சொற்களின் பொருள் எழுதுக.

1. தேநீர் = தேயிலையைக் கொண்டு கொதிக்க வைத்த நீர் (டீ)

   தேனீர் = தேனும் நீரும் கலந்த நீர்

2. பரவை = --

   பறவை = --

3. கோரல் = --

   கோறல் = --

4. வன்னம் = --

   வண்ணம் = --

5. எதிரொலி = --

   எதிரொளி = --

6. ஒரு சொல்லைப் பிரித்து இரு பொருள் எழுதுக.

1. பலகை = மரப்பலகை

   பல + கை = பல கைகள்

2. அந்தமான் = ------------------------

   = ------------------------

3. தாமரை = ------------------------

   = ------------------------

4. பழம்பால் = ------------------------

   = ------------------------

5. மருந்துக்கடை = ------------------------

   = ------------------------

நிற்க அதற்குத் தக

1. அறிவியல் சார்ந்த தமிழ்ச் சொற்களை அறிந்துகொண்டு பயன்படுத்துவேன்.
2. ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களுக்கு விடை காண்பேன்.

செயல் திட்டம்

- அறிவியல்தமிழ்ச் சொற்களுள் 20 எழுதி வருக.
- அறிவியலறிஞர்களுள் எவரேனும் ஐவரின் படத்தை ஒட்டியும் அவர்களின் கண்டுபிடிப்புகளை எழுதியும் தொகுப்பேடு உருவாக்குக.

பிர்லா கோளரங்கத்தைச் சுற்றிப் பார்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்தல்

திருவள்ளூர்,
07.10. 2019

அனுப்புநர்

செல்வன் ந. பூங்குன்றன்,
பள்ளி மாணவர் தலைவர்,
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி,
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்

இயக்குநர்,
பிர்லா கோளரங்கம்,
சென்னை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: **அறிவியல் தொழில்நுட்பக் கூடத்தைச் சுற்றிப் பார்க்க, அனுமதி வேண்டுதல் – சார்பு.**

வணக்கம். தலைமையாசிரியரின் இசைவுடன் எங்கள் பள்ளியின் மகிழ் உலா குழு, பிர்லா கோளரங்கத்தை 09.10.2019 அன்று, சுற்றிப்பார்க்க விரும்புகிறது. அக்குழுவில், ஆசிரியர்கள் மூவரும் 40 மாணவர்களும் இருப்பர். ஆகையால், அன்பு கூர்ந்து எங்களுக்கு அனுமதி வழங்கிட வேண்டுகிறேன். அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த கருத்துகளை விளக்குவதற்கு அலுவலர் ஒருவரையும் ஏற்பாடு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

செல்வன். ந. பூங்குன்றன்,
ஊ.ஒ.தொ.ப., திருவூர்.
திருவள்ளூர்.

இயல்
ஐந்து

நாகரிகம்/
பண்பாடு

கற்றல் நோக்கங்கள்

செய்யுள்

- திருக்குறளின் மேன்மையை அறிந்துகொள்ளுதல்
- தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டுகளை அறிந்துகொள்ளுதல்
- தமிழர்கள் வீரக்கலைகளுக்கு அளித்த முதன்மையைப் புரிந்துகொள்ளுதல்
- தமிழர் கட்டடக்கலை, சிற்பக்கலை குறித்துத் தெரிந்துகொள்ளுதல்
- உரையாடல்களிலும் தொடர்களிலும் இணைப்புச்சொற்களைப் பயன்படுத்துதல்

திருக்குறள்

EP8J2Z

பண்புடைமை

1 அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

பொருள் அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழ்வதற்கு உரிய நல்ல வழியாகும்.

சொல்பொருள் ஆன்ற – உயர்ந்த

2 நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

பொருள் நேர்மையையும் நன்மையையும் விரும்பி, பிறருக்குப் பயன்படும்படி வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

சொல்பொருள் நயன் – நேர்மை; நன்றி – நன்மை

3 பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

பொருள் நற்பண்பு உடையவர் செய்யும் நல்ல செயல்களாலேயே இவ்வுலகம் இயங்குகிறது. இல்லையெனில், அது மண்ணோடு மண்ணாகி அழிந்துவிடும்.

சொல்பொருள் புக்கு – புகுந்து; மாய்வது – அழிவது

4 அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

பொருள் அரத்தைப்போல் கூர்மையான அறிவு உடையவரானாலும் மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், மரத்தைப் போன்றவரே ஆவர்.

சொல்பொருள் அரம் – வாளைக் கூர்மையாக்கும் கருவி; போல்வர் – போன்றவர்

5 பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந் தற்று

பொருள் பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமானது, தூய்மையற்ற பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவது போன்றதாகும்.

சொல்பொருள் பெருஞ்செல்வம் – மிகுந்த செல்வம்; நன்பால் – நல்ல பால்

நூல்குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று, திருக்குறள். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பிரிவுகளை உடையது. இதில் 133 அதிகாரங்களும் 1330 குறட்பாக்களும் உள்ளன. உலகிலுள்ள அனைவரும் பின்பற்றத்தக்க சிறந்த அறநெறிக் கருத்துகள் இந்நூலில் உள்ளதால், இது உலகப்பொதுமறை எனப் போற்றப்பெறுகிறது. இந்நூலை இயற்றியவர், திருவள்ளுவர்.

கற்பவை கற்றபின்

- பாடலைச் சரியான ஒலிப்புடன் படித்து மகிழ்க.
- நம்மிடம் இருக்கவேண்டிய நற்பண்புகளைப் பட்டியலிடுக.
- பண்பா, பணமா எதற்கு முதன்மையளிக்க வேண்டும்? பட்டிமன்றத்திற்கு உரை தயாரித்துப் பேசுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. 'ஆன்ற' – இச்சொல்லின் பொருள் ....

அ) உயர்ந்த ஆ) பொலிந்த
இ) அணிந்த ஈ) அயர்ந்த

7W5AP2

2 பெருஞ்செல்வம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________

அ) பெருஞ் + செல்வம் ஆ) பெரும் + செல்வம்

இ) பெருமை + செல்வம் ஈ) பெரு + செல்வம்

3 பண்புடைமை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. ___________

அ) பண் + புடைமை ஆ) பண்பு + புடைமை

இ) பண்பு + உடைமை ஈ) பண் + உடைமை

4 அது + இன்றேல் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________

அ) அதுஇன்றேல் ஆ) அதுயின்றேல்

இ) அதுவின்றேல் ஈ) அதுவன்றேல்

5 பாடலில், நேர்மை என்னும் பொருள் தரும் சொல் ___________

அ) நயன் ஆ) நன்றி

இ) பயன் ஈ) பண்பு

ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) இவ்விரண்டும் = _____________ + ____________

ஆ) மக்கட்பண்பு = _____________ + ____________

இ. உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதுக.

அன்புடைமை ___________ ___________ ___________

___________ ___________ ___________ ___________

ஈ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

___________ ___________ ___________ ___________

உ. அன்புடைமை, பண்புடைமை போல் ஈற்றில் 'மை' என முடியும்படி நான்கு சொற்கள் எழுதுக.

___________ ___________ ___________ ___________

ஊ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை?
2. 'மரம் போன்றவர்' எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?
3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனிலாது போகும்?

எ. சிந்தனை வினா

ஒருவரின் பண்புகளைக்கொண்டே, இந்த உலகம் அவரை மதிக்கிறது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

இயல்
ஐந்து

உரைநடை

தமிழர்களின் வீரக்கலைகள்

தனக்கென்று தனித்த நாகரிகமும் பண்பாடும் உடையது தமிழ் மரபு. தமிழரின் பண்பாட்டுக் கூறுகளும் கலைகளும் இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பண்டைத்தமிழன், வாளாண்மையால் பகைவரை வென்றான். தாளாண்மையால் நன்னிலம் ஆக்கினான். வேளாண்மையால் வளம் பெருக்கினான். வீரமும் தீரமும் நிறைந்த விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினான். தமிழர்க்கென்றே இருக்கும் வீரம் செறிந்த கலைகளை அறியுந்தோறும் வியப்பு மேலிடும்; மனம் மகிழ்ச்சியில் நிறைந்திடும்.

ஏறுதழுவுதல், சிலம்பாட்டம், இளவட்டக்கல் தூக்குதல், மற்போர் முதலான கலைகள் தமிழர்களின் வீரக்கலைகளாக விளங்குகின்றன. இக்கலைகளுள் இன்றளவும் நடைமுறையில் உள்ள சில விளையாட்டுகளைப் பற்றி அறிந்துகொள்வோம்.

ஏறுதழுவுதல்

TANWVI

தமிழரின் வீரத்தைப் பறைசாற்றும் விளையாட்டுகளுள் ஒன்று, ஏறுதழுவுதல். ஏறு என்பது, காளை மாட்டைக் குறிக்கும். ஏறு தழுவுதல் என்பது, காளையைத் தழுவி, அதன் வீரத்தை அடக்குவதாகும். இவ்விளையாட்டு, பழங்காலந்தொட்டு இன்றுவரை விளையாடப்பட்டு வருகிறது. வளமான புல்வளம் கொண்ட முல்லைநிலமே ஏறு தழுவுதலுக்கு உகந்த நிலமாக விளங்கியது. இன்று பல மாவட்டங்களில் இவ்வீர விளையாட்டு நடைபெறுகிறது. பொங்கல் திருவிழா கொண்டாடப்படும் நாள்களில் ஏறுதழுவுதல் என்னும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது. ஜல்லிக்கட்டு, மஞ்சு

விரட்டு எனப் பல பெயர்களிலும் அது அழைக்கப்படுகிறது. ஊரிலுள்ள இளைஞர்கள், காளைகளை அடக்கித் தங்கள் வீரத்தை வெளிப்படுத்துகின்றனர்.

காளையின் கொம்பைப் பிடித்தல் ஆண்மை; வாலைப் பிடித்தல் தாழ்மை என்பது, தமிழர் கொள்கை. கொம்பிலே உள்ளது காளையின் தெம்பு என்பதைத் தமிழர்கள் திடமாக நம்பினர். காளையின் வாலைப் பிடித்தவன், அதன் காலால் உதைபட்டு, மண்ணிடை வீழ்வான். ஆதலால், கொம்பைவிட்டு வாலைப் பற்றுதல் கோழையின் செயல். வசமாகப் பிடி கிடைத்தால், காளையின் விசை அடங்கும்; வீரம் அடங்கும்; திடமின்றி மண்ணில் சோர்ந்து விழும். இத்தகைய வீர விளையாட்டை விளையாடுவதற்குச் சில விதிமுறைகள் இன்று பின்பற்றப்படுகின்றன.

இவ்விளையாட்டில் பங்குபெறும் காளைக்குக் கன்று பருவத்திலிருந்தே பாய்ச்சலுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. காளையின் கொம்பில் கட்டப்பட்டிருக்கும் ஜல்லிக்கட்டுத் துணியை எடுப்பவரே வெற்றிபெற்றவர் ஆவர். தற்காலத்தில் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர் மற்றும் காளைகளுக்கு உடல் பரிசோதனை செய்யப்படுகிறது. போட்டி நடைபெறும்போது வாடிவாசலை மறித்துக்கொண்டு போட்டியாளர்கள் நிற்கக்கூடாது. காளையின் திமில் பகுதியைப் பிடித்தபடி 15 மீட்டர் தூரம் அல்லது 30 வினாடிகள் அல்லது மூன்று துள்ளல்கள்வரை ஓடும் போட்டியாளர் வெற்றி பெற்றவர் ஆவார். இவ்விளையாட்டில் ஈடுபடுவதற்கு நல்ல உடல் திறனும், அஞ்சா நெஞ்சமும் தேவை.

சிலம்பாட்டம்



தமிழர்களின் மற்றொரு வீர விளையாட்டு, சிலம்பம். சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள். கம்பு சுழலும்போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் எனப் பெயரிட்டனர். **கம்பு சுழற்றுதல்** என்னும் பெயரும் இதற்கு உண்டு. தற்காப்புக்காகத் தோன்றிய இக்கலை, இன்று வீர விளையாட்டாக அறியப்படுகிறது.

சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல் எதிராளியின் உடலில் சிலம்புக் கம்பினால் தொடுதல் போன்றவை அடிப்படையாகும். இதற்கான கம்பு நன்கு வளைந்து கொடுக்கக்கூடிய 'சிறுவாரைக்கம்பு' என்னும் மூங்கில் இனத்திலிருந்து செய்யப்படுகிறது.

சிலம்பக் கலையில் மான்கொம்பு, பிச்சுவா கத்தி, சுருள்பட்டா, வளரி போன்ற ஆயுதங்களையும் பயன்படுத்துவர். நாடிநரம்புகளையும் மனத்தையும் ஒருங்கிணைக்கும் இவ்விளையாட்டு, தமிழரின் வீரத்திற்கும் நுட்பமான செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

வில்வித்தை

வித்தை என்பது, வியப்படையச் செய்யும் வகையில் நிகழ்த்தப்படும் ஒரு செயல். அவற்றுள் வில் வித்தையும் ஒன்று. பண்டைத் தமிழர் விரும்பிக் கற்றுக்கொண்ட விளையாட்டாக வில்வித்தை விளங்கியது. தொடக்கத்தில் அம்பெய்தி விலங்குகளை வேட்டையாடவும், போர்முனைகளில் எதிரிகளை வெல்லவும் இவ்வில்லாற்றல் பயன்பட்டது.

கடையெழு வள்ளல்களுள் ஒருவரான 'வல்வில் ஓரி' வில்லாற்றலில் சிறந்து விளங்கியவர் என்பதைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம். அவர், வேட்டையாட காட்டுக்குச் சென்றபோது, பெரிய யானையொன்று எதிர்ப்பட, அதன்மீது அம்பெய்தினார். அந்த அம்பானது, அப்பெரிய யானையின் தலையில் பாய்ந்தும், அங்குக் குறுக்கிட்ட பெரும்புலியைக் கொன்றும், அதனைக் கடந்து சென்ற கலைமானைச் சாய்த்தும், மேலும் விசை குறையாமல் சென்று, ஒரு பன்றியின் மேல் பாய்ந்ததோடு அல்லாமல், புற்றிலே இருந்த ஓர் உடும்பின் மீதும் பாய்ந்து தன் சினம் தீர்த்தது என்று புறநானூற்றுப் பாடல்வழி அறிகிறோம். படைத்திறமும் கொடைத்திறமும் கொண்டு விளங்கிய வல்வில் ஓரியை வன்பரணர் பாடி மகிழ்ந்தார்.

இன்று வில்வித்தை, ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ளமை தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

மற்போர்

படைக்கலன்கள் ஏதுமின்றி இருவர் போரிடும் விளையாட்டே மற்போர். மல் என்பது, வலிமையைக் குறிக்கும். ஒருவன் தன் உடல் வலிமையால் செய்யும் போரே, 'மற்போர்'. மற்போரில் வெற்றி பெற்றவர்களை 'மல்லன்' என்னும் சொல்லால் குறிக்கும் வழக்கம் இருந்தது. மற்போரில் சிறந்து விளங்கியமையாலேயே மாமல்லன் என்று அக்கால அரசர்கள் போற்றப்பெற்றனர்.

மல்யுத்தம் என உலகம் முழுதும் போற்றப்படும் இவ் வீரக்கலை, பண்டைத்தமிழரின் போர்முறைகளுள் ஒன்றாக இருந்தது. புறநானூற்றுப் பாடலொன்றில் மற்போர் பற்றிய நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

இருவர் கைகோத்துக் கால்களாலும் தலையாலும் இடித்தும் உதைத்தும் ஒருவருடன் ஒருவர் போர் செய்வதே மற்போர். பகைவரை எதிர்கொள்ளும் வகையில் விளங்கிய இம்மற்போர், பின்னர் வீரவிளையாட்டாக மாறியது. நம் நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலும் மற்போர் கழகங்கள் உள்ளன. ஒலிம்பிக் போட்டிகளில் மற்போரிடுவதும் ஒன்றாக இருந்து வருகின்றது.

மேலும் பல விளையாட்டுகள், பண்டைக் காலம்முதல் இன்றுவரை வழக்கில் இருந்து வருகின்றன. வழுக்குமரம், நீர் விளையாட்டு, கபடி என்கின்ற சடுகுடு போன்ற பல விளையாட்டுகளை நாம் இப்போதும் விளையாடி மகிழ்கிறோம். உடலில் வலிமையும் உள்ளத்தில் மகிழ்ச்சியும் விளையாட்டால் ஏற்படுகின்றது. உடலில் உறுதி உடையவரே, உலகை ஆளும் உள்ள உறுதியும் உடையவர் ஆவர். ஆகையால், குழந்தைப் பருவத்திலிருந்தே நமக்குப் பிடித்த வீரவிளையாட்டுகளை விளையாடி மகிழ்வோம். அதுமட்டுமின்றி, உலக விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றியை நாட்டிற்கு அளிப்போம்.

கற்பவை கற்றபின்

- உங்கள் ஊரில் விளையாடும் விளையாட்டுகளைப் பற்றிப் பேசுக.
- உங்களுக்குப் பிடித்த விளையாட்டுகள் எவை? ஏன்?
- விழாக்காலங்களில் ஊர் கூடி விளையாடும் விளையாட்டுகள் எவை? அவற்றைப்பற்றி உங்களுடைய கருத்துகளைக் கூறுக.

படித்து அறிக

வங்கனூர் வாழ் பொதுமக்களுக்கு ஒரு நற்செய்தி ... டம்...டம்...டம்

இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், வரும் பொங்கல் திருவிழா அன்று மாலை 4.00 மணியளவில் பூங்கா நகர் மைதானத்தில் சிலம்பாட்டம் நடைபெற உள்ளது. விருப்பமுள்ளவர்கள் திரு. மணி அவர்களிடம் பெயரைப் பதிவு செய்யுமாறு ஊராட்சி சார்பில் தெரிவிக்கலாகிறது.

டம்...டம்...டம்

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. தமிழரின் வீர விளையாட்டாகக் கருதப்படாதது ....

அ) சிலம்பம் ஆ) மற்போர்

இ) மட்டைப்பந்து ஈ) நீர் விளையாட்டு

2. 'மஞ்சு விரட்டு' என்பதைக் குறிக்கும் விளையாட்டு ....

அ) மற்போர் ஆ) ஏறுதழுவுதல்

இ) சிலம்பாட்டம் ஈ) வில்வித்தை

3. மற்போர் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) மற் + போர் ஆ) மள் + போர்

இ) மல் + போர் ஈ) மறு + போர்

4. தன் + காப்பு –இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) தன்காப்பு ஆ) தண்காப்பு

இ) தனிகாப்பு ஈ) தற்காப்பு

5. ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ள கலை ....

அ) சிலம்பாட்டம் ஆ) வில்வித்தை

இ) ஏறுதழுவுதல் ஈ) வழுக்கு மரம் ஏறுதல்

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக

1. சிலம்பு + ஆட்டம் = ______________
2. வீரம் + கலை = ______________

I3WLAA

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

1. தனக்கென்று = _______ + ______
2. கொடைத்திறம் = _______ + ______

ஈ. பொருத்துக

1. காளை – கம்பு
2. சிலம்பம் – மூங்கில்
3. சிறுவாரைக்கம்பு – திமில்
4. தாளாண்மை – உழவு
5. வேளாண்மை – முயற்சி

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. தமிழர்களின் வீரக்கலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.
2. ஏறுதழுவுதல் என்றால் என்ன?
3. சிலம்பாட்டம்– பெயர்க்காரணம் தருக.
4. வல்வில் ஓரியின் வில்லாற்றல் சிறப்பைக் கூறுக.
5. மற்போர் எவ்வாறு நடைபெறுகிறது?

ஊ. சிந்தனை வினாக்கள்

1. சிலம்பாட்டம் தற்காப்புக்கலைகளுள் ஒன்று. ஏன்?
2. உடலில் உறுதி உடையவரே உலகை ஆளும் உள்ள உறுதி உடையவர் இவ்வரிகளைப் பற்றி உமது கருத்து யாது?

எ. எதிர்ச்சொல் உருவாக்குக.

__________ X __________

__________ X __________

__________ X __________

__________ X __________

__________ X __________

__________ X __________

துணைப்பாடம்

இயல் ஐந்து

கங்கை கொண்ட சோழபுரம்

கயலினி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். ஏன்? இந்த விடுமுறை நாள்களை அவள் மகிழ்வுடன் கழிக்கப் போகிறாள் அல்லவா! அதனால்தான். அன்பு தரும் ஆசைப் பாட்டியின் ஊருக்குப் புறப்படத் தயாராகிவிட்டாள். வாருங்கள், குழந்தைகளே! நாமும் அவள் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்வோம்.

சிதம்பரத்திலிருந்து ஜெயங்கொண்டம் செல்லும் சாலையில்தான் உள்ளது, அந்த ஊர். தன் தாயுடன் பேருந்தில் ஏறிச் சன்னலோரம் அமர்ந்து கொண்ட அவளுக்கு வாயெல்லாம் ஒரே பாட்டுத்தான்.

'ஆறு சட்டம் நூறு பண்ணி
ஐம்பத்தாறு ரயில் வண்டி
கங்கை கொண்டான் மண்ணெடுத்து
கிண்ணுது பார் ரயில் வண்டி…'

WPCZ3T

அவள் பாட்டி சொல்லிக் கொடுத்த நாட்டுப்புறப் பாட்டுத்தான் அது. இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்குமே, அவள் எங்கே செல்கிறாள் என்று? ஆமாம், அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரத்திற்குத்தான் அவள் செல்கிறாள். அவள் பாட்டி, இந்த விடுமுறையில் சில இடங்களுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தாள். அதுதான் கயலினியின் துள்ளலுக்குக் காரணம். ஊர் வந்ததும் அவள் பாட்டி அவர்களை வரவேற்க பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்தார்.

பாட்டியைக் கண்டதும் ஓடிச்சென்று ஆரத் தழுவிக் கொண்டாள் கயலினி. "பாட்டி… பாட்டி, நீங்க தொலைபேசியில சொல்லிக் கொடுத்த பாட்டு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதுல கங்கை கொண்டான் மண்ணெடுத்து என்று வருதுல அப்படினா என்ன பாட்டி?" எனக்கேட்டாள்." ஓ… அதுவா! சோழர்கள் காலத்துல தமிழ்நாட்டை ஆண்ட முதலாம் இராசேந்திர சோழன் என்னும் மன்னன் வட நாடு சென்று பகைவர்களை வென்று கங்கை நீரைக் கொண்டு வந்தான். அதன் அடையாளமாகத்தான் அவனைக் கங்கை கொண்டான் என்று சொல்கிறோம். அந்த வெற்றியைக் கொண்டாட, தான் உருவாக்கிய புதிய நகரத்திற்குக் கங்கை கொண்ட சோழபுரம் என்று பெயரும் வைத்து விட்டான்" என்று பதிலளித்தாள் பாட்டி.

- வெற்றித் திருநகரான கங்கை கொண்ட சோழபுரம் 'கங்காபுரி' என்றும் 'கங்காபுரம்' என்றும் புலவர் பெருமக்களால் போற்றப் பெற்றுள்ளது.
- 'கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு கங்காக புரிபரந்த கற்பம்' என்று ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகிறார்.

"ஓ! அப்படியா? நம் ஊருக்கு இப்படித்தான் பெயர் வந்ததா?" சரி, பாட்டி. எங்கேயோ அழைத்துச் செல்கிறேன் என்றீர்களே, போகலாமா?" என்றாள் கயலினி. "முதலில் சாப்பிட்டு ஓய்வெடு. பிறகு போகலாம்" என்ற பாட்டி அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

சிறிது ஓய்வுக்குப் பிறகு மீண்டும், 'பாட்டி…' என்று இழுத்தாள் கயலினி." சரி…சரி.. நான் புரிந்து கொண்டேன் வா போகலாம்" என்று பாட்டி கூற இருவரும் சோழ நாட்டுக்கு வளம் சேர்த்த சோழ கங்கத்தை அடைந்தனர். 'இதுதான் சோழ கங்கம். பார்த்தாயா இதன் அழகை!' என்று பாட்டி சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் கயலினி, "பாட்டி, இது என்ன பொன்னேரினு எழுதியிருக்கு? நீங்க சோழ கங்கம்னு சொல்றீங்க?" எனக் கேட்டாள்.

"ஆமாம், சோழ கங்கப் பேரேரிதான் இன்று பொன்னேரினு பெயர் மாறியிருக்கு. பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இதனால் பாசன வசதி பெற்று உழவுத்தொழில் தழைத்தோங்கியது". என்றாள் பாட்டி.

மலைகளும் குன்றுகளும் இல்லாத சமவெளியில் பதினாறு கல் தொலைவுவரை வலிமையான உயரமான கரைகளைக் கட்டி, நீண்ட கால்வாய் வெட்டித் தண்ணீரைப் பள்ளத்தாக்கிலிருந்து மேட்டிற்குக் கொண்டு வந்து, ஏரியில் தேக்கி வைத்ததைக் கற்பனையில்கூட எண்ணிப் பார்க்கவே கயலினிக்குக் கடினமாகத் தோன்றியது. "பாட்டி, இது அவ்வளவு எளிமையான செயலன்று" என்று சோழர்களின் நீர்ப்பாசன முறையை எண்ணி வியப்புற்றாள்.

இருவரும் பேசிக்கொண்டே கங்கை கொண்ட சோழபுரத்தை அடைந்தனர். கோவிலைப் பார்த்ததும் "இதுவும் தஞ்சைப் பெரிய கோவில் போன்ற அமைப்பிலேயே உள்ளதே"? வியப்புடன் கேட்டாள் கயலினி. "ஆமாம், இருந்தாலும் இக்கோவில் இராசேந்திரனின் தந்தை இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலைவிட உயரம் குறைவானதுதான்" என்றாள் பாட்டி.

"அது என்ன பாட்டி? "என்று கோவிலின் விமானத்தைப் பார்த்துக் கேட்டாள் கயலினி. அதற்கு பாட்டி "அதுதான் விமானம். அங்கே பார், விமானத்தின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள மிகப்பெரிய வட்ட வடிவக்கல். அது 34 அடி குறுக்களவு கொண்டது. மேலும், இது ஒரே கல்லால் அமைக்கப்பெற்ற விமானம் ' என்று கூறிக் கயலினியை வியப்படையச் செய்தாள் பாட்டி.

"பாட்டி, அதோ பாருங்கள் நந்தி! இது கல்லால் செதுக்கப்பட்டதுதானே"? என்று கூறிக்கொண்டே ஓடிப்போய் அதனைத் தொட்டுப்பார்த்தாள் கயலினி. ."இல்லை,

இல்லை. இது முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டது" என்று உரைத்தாள் பாட்டி. அழகு மிளிர்ந்த இச்சிலையைக் கண்டபடி உள்ளே சென்றாள் கயலினி.

'என்ன பாட்டி, கோவிலின் வாயில் இவ்வளவு உயரத்தில் உள்ளதே!' என்றாள் கயலினி. "ஆமாம். எல்லாக் கோவிலின் வாயில்களைக்காட்டிலும் தரைமட்டத்திலிருந்து 20 அடி உயரத்தில் இருப்பதே இதன் சிறப்பு" என்று கூறிய பாட்டி, கயலினியை உள்ளே அழைத்துச் சென்றாள்.

படியைக் கடந்து ஏறியதும் வாயிற்காவலர் சிலைகளைக் கண்டு களித்தாள் கயலினி. அவற்றைப் பார்த்ததும் அவளுக்கு அடக்கமுடியாமல் சிரிப்பு பொங்கியது.

தூண்களிலும் கோவில்களிலும் இருந்த சிற்பக்கலைகளைக் கண்டு களித்தாள் கயலினி. கோவிலின் வடக்குப் பக்க நுழைவாயிலின் இருபக்கங்களிலும் உள்ள கலைச்செல்வி மற்றும் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி ஆகிய சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை என்பதைப் பாட்டி மூலம் அறிந்து கொண்டாள்.

"பாட்டி, இங்கே பாருங்க, சிங்கம் வடிவத்திலிருக்கும் இந்தச்சிற்பத்தின் வயிற்றிலே ஒரு வாயில் இருக்கிறதே" என்றாள் கயலினி". அதற்குப் பாட்டி, "அதுதான் சிங்க முகக் கிணறு"என்றாள். "என்னது? சிங்கத்தின் வயிற்றுக்குள் கிணறா?" என்றுதன் இரு கைகளையும் கன்னத்தில் வைத்தபடி சோழர்களின் கலையை எண்ணி வியந்தாள். தமிழர்களின் கலைத் திறமையை கண்டு உள்ளம் மகிழ்ந்த அவள், அக்கலைக்கூடத்தைவிட்டு வரவே மனமில்லாமல் பாட்டியுடன் வீடு வந்து சேர்ந்தாள்.

இந்தியச் சிற்ப வரலாற்றில் கங்கை கொண்ட சோழபுரச் சிற்பங்கள் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளன. கலையழகும் புதுப்பொலிவும் கொண்ட சிற்பக் கூடமாகவே கங்கை கொண்ட சோழபுரம் அமைந்துள்ளது. யுனெஸ்கோ நிறுவனம் உலகப் பாரம்பரியச் சின்னமாகக் கங்கை கொண்ட சோழபுரத்தை அறிவித்துள்ளது நமக்கெல்லாம் பெருமைதானே!

என்ன, குழந்தைகளே, கயலினியோடு நாமும் அருமையும் பெருமையும் மிக்க கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டோமே! இப்போது, உங்களுக்கும் மகிழ்ச்சிதானே. நாம் மீண்டும் சந்திப்போமா?

கற்பவை கற்றபின்

- காலம் வென்ற கங்கை கொண்ட சோழபுரம் என்ற பாடப் பகுதியைச் சரியான ஒலிப்போடும் நிறுத்தக்குறிகளோடும் படித்துக்காட்டுக.
- கங்கை கொண்ட சோழபுரம் பற்றியும் அக்கோவிலிலுள்ள சிற்பங்களின் சிறப்புகளைப் பற்றியும் வகுப்பறையில் கலந்துரையாடுக.
- நீங்கள் கண்டுகளித்த சுற்றுலா இடங்களின் சிறப்புகளைப் பட்டியலிடுக.

மதிப்பீடு

LHKNHK

வினாக்களுக்கு விடையளிக்க.

1. முதலாம் இராசேந்திர சோழனை ஏன் கங்கை கொண்ட சோழன் என்று அழைக்கிறோம்?
2. சிங்கமுகக் கிணறு – குறிப்பு எழுதுக.
3. சோழ கங்கப் பேரேரிக்கு நீர் எங்கிருந்து வருகிறது?
4. கங்கை கொண்ட சோழபுரம் கோவிலிலுள்ள வாயில்களின் பெயர்களைக் கூறுக.

சிந்தனை வினா

ஏரிகளும் குளங்களும் தூர் வாரப்படாமல் மண்மூடி இருந்தால் என்ன ஆகும்? கருத்துகளைக் குழுவில் பகிர்ந்து கொள்க.

கற்கண்டு

இணைப்புச்சொற்கள்

செழியன் : இளந்தமிழா, நாளை வெளியூர் செல்வதாகக் கூறினாயே? மறந்துவிட்டாயா? உன்னுடன் யாரெல்லாம் வருகிறார்கள்?

இளந்தமிழ் : மறக்கவில்லை, செழியா! நாளை நான் மட்டும்தான் செல்வதாக இருக்கிறேன். அதனால், என்னுடன் யாரும் வரவில்லை.

செழியன் : அப்படியானால் நீ கவனமாக இருக்கவேண்டும் அல்லவா?

இளந்தமிழ் : நான் ஏற்கெனவே சென்ற இடம்தான். ஆதலால், அச்சம் ஒன்றும் இல்லை.

செழியன் : அது சரி, இளந்தமிழ். மறுநாளே வந்துவிடுவாயா அல்லது வருவதற்கு நாளாகுமா?

இளந்தமிழ் : நான் திரும்பி வருவதற்கு இரண்டு நாளாகும். ஆகையால், தேவையான உடைகளைக் கொண்டு செல்கிறேன்.

செழியன் : ஏனெனில், இந்த வார இறுதியில், நமக்கு மட்டைப்பந்து போட்டி இருக்கிறது. அதனால்தான் கேட்கிறேன். நீ கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். ஆகவே, மறந்துவிடாதே நண்பா!

குழந்தைகளே! மேற்கண்ட உரையாடலைப் படித்தீர்களா? உங்களிடம் வழக்கம்போல ஒரு வினா கேட்கலாமா? நீங்கள் படித்த உரையாடலில் எத்தனை இணைப்புச் சொற்கள் உள்ளன? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். அட, மீண்டும் உரையாடலைப் படிக்கத் தொடங்கிவிட்டீர்களா?

நாம் கண்டுபிடித்த இணைப்புச் சொற்களைப் பட்டியலிடலாமா?

மட்டும், அதனால், அப்படியானால், ஆதலால், அல்லது, ஆகையால், ஏனெனில், ஆகவே

படித்தீர்களா? இவைபோன்ற இணைப்புச்சொற்கள், நாம் பேசும் பேச்சில் இயல்பாகவே இடம்பெறுகின்றன. இவற்றைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்திப் பேசவும் எழுதவும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. நாம் தங்குதடையின்றிப் பேசவும் எழுதவும் இணைப்புச்சொற்கள் பயன்படுகின்றன.

தொடர்களை இணைப்பதற்கு இணைப்புச்சொற்கள் பயன்படுகின்றன. இவற்றை இணைப்பிடைச் சொற்கள் எனவும் கூறுவர். தொடர்களில் பயன்படும் சில இணைப்புச்சொற்கள் பின்வருமாறு:

அதனால், அப்படியானால், அல்லது, அவ்வாறெனில், ஆனால், ஆகையால், ஆகவே, ஆதலால், ஆயினும், இருந்தபோதும், உம், எனவே, எனில், ஏனெனில், எவ்வாறெனில்

கற்பவை கற்றபின்

- புத்தகப் பூங்கொத்து கதையொன்றில் இடம்பெற்றிருக்கும் இணைப்புச்சொற்களைக் கண்டறிக.
- வீட்டிலோ பள்ளியிலோ பிறர் பேசும்போது, என்னென்ன இணைப்புச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர்? அவற்றைப் பட்டியலிடுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. 'அதனால்' என்பது ....

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்

இ) உரிச்சொல் ஈ) இணைப்புச்சொல்

2. கருமேகங்கள் வானில் திரண்டன .... மழை பெய்யவில்லை. இத்தொடருக்குப் பொருத்தமான இணைப்புச்சொல்

அ) எனவே ஆ) ஆகையால்

இ) ஏனெனில் ஈ) ஆயினும்

3. கண்ணன் பேருந்தில் செல்ல விரும்பினான் .... அவன் நண்பன் மிதிவண்டியே போதும் என்றான்.

அ) அதனால் ஆ) ஆதலால்

இ) இருந்தபோதிலும் ஈ) ஆனால்

ஆ. கீழ்க்காணும் தொடர்களை இணைத்து எழுதுக.

1. நான் விளையாடச் சென்றேன். கண்ணன் விளையாடச் சென்றான். (உம்)

நானும் கண்ணனும் விளையாடச் சென்றோம்.

2. வள்ளி எழுதி முடித்துவிட்டாள். எழிலி எழுதவில்லை. (ஆனால்)

____

3. பெருமழை பெய்தது. ஏரி, குளங்கள் நிரம்பின. (அதனால்)

____

4. முகில் பள்ளிக்குச் செல்லவில்லை. அவனுக்கு உடல்நலமில்லை. (ஏனெனில்)

____

5. அறிவுவளர்ச்சிக்குக் கணினி தேவை. கணினியை இயக்கத் தெரிதல் வேண்டும்.(ஆகவே)

____

இ. கீழ்க்காணும் உரைப்பகுதியில் பொருத்தமான இணைப்புச்சொற்களை இணைத்து எழுதுக.

(ஆனால், அதனால், ஏனெனில், ஆகையால், எனவே, ஆகவே, பிற)

அடர்ந்த காடு ஒன்றில் பல விலங்குகள் வாழ்ந்து வந்தன. __________, சிங்கம் மட்டும் அரசனாக விளங்கியது. __________, அது பார்ப்பதற்கு மிடுக்கான தோற்றமுடையது. __________, அதனைக் கண்டு __________ விலங்குகள் அஞ்சின. __________ அது தனியாகக் குகையில் வசித்தது. __________, அது எப்போதும் விழிப்போடு இருந்தது. ஒருநாள் அதற்குப் பசித்தது. __________, குகைக்கு வெளியே வந்து இரைக்காகக் காத்திருந்தது. சிங்கத்தைப் பார்த்தவுடன் __________ விலங்குகள் அஞ்சியோடின. __________, அவற்றைச் சிங்கம் அடித்துவிடும் அல்லவா?

ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. இணைப்புச் சொற்கள் எதற்குப் பயன்படுகின்றன?
2. இணைப்புச்சொற்களுள் நான்கு எழுதுக.
3. இணைப்புச்சொற்களைப் பயன்படுத்தி, எவையேனும் இரண்டு தொடர்களை எழுதுக.

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- நாள்தோறும் வழிபாட்டுக்கூட்டத்தில் சொல்லப்படும் திருக்குறளைக் கேட்டறிக.
- வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒளிபரப்பாகும் கட்டடக்கலைகள் பற்றிய செய்திகளைக் கேட்டு அறிந்துகொள்க.

ஆ. பேசுதல்

- நீங்கள் கண்டுகளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் குறித்து 5 மணித்துளி பேசுக.
- நற்பண்புகள் கொண்ட சான்றோர் ஒருவரைப்பற்றி 5 மணித்துளி பேசுக.

இ. படித்தல்

- திருக்குறளைப் பொருள் விளங்கப் படித்துக்காட்டுக.
- புத்தகப் பூங்கொத்தில் விளையாட்டுகள் தொடர்பான கதைகளைப் படித்துக்காட்டுக.

ஈ. எழுதுதல்

1. சொல்லக் கேட்டு எழுதுக.

1. பண்பு உடையவராக வாழ்தல் நல்வழியாகும்.
2. திருக்குறள் "உலகப்பொதுமறை" என்றழைக்கப்படுகிறது.
3. கங்கை கொண்ட சோழபுரம் உலகப் பாரம்பரியச் சின்னமாகும்.

2. தொடரில் அமைத்து எழுதுக.

1. வெற்றி ______________________________
2. நாகரிகம் ______________________________
3. உழவுத்தொழில் ______________________________
4. கலையழகு ______________________________

3. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

அரசர்க்குரிய அங்கங்களுள் தலைசிறந்தது படை. படைத்திறத்தால் அரசன் உட்பகையை அழிப்பான். புறப்பகையை ஒழிப்பான். முன்னாளில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் நாற்படையுடைய அரசன் மிகச் சிறந்தவனாக மதிக்கப்பெற்றான். நால்வகைப் படைகளுள் ஏற்றமும் தோற்றமும் பெற்றது யானைப்படை. போர்க்களத்தில் வீறுகொண்டு செம்போர் விளைப்பதும், மாற்றார்க்குரிய மாட மதில்களைத் தாக்கித் தகர்ப்பதும் யானைப்படையே ஆகும். வலிமை சான்ற அழகிய யானை, பட்டத்து யானை என்று பெயர் பெற்றது. உயர்ந்த மேனியும், ஓங்கிய நடையும், சிறந்த கொம்பும், பரந்த அடியும், சிறிய கண்ணும், செந்நிற வாயும் உடைய யானையே அப்பதவிக்கு உரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

1. நால்வகைப்படைகள் யாவை?
2. நால்வகைப் படைகளுள் ஏற்றமும் தோற்றமும் பெற்றது எது?
3. மாற்றார் என்னும் சொல்லின் பொருள் யாது?
4. உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.
5. காலாட்படை – இச்சொல்லைப் பிரித்து எழுதுக.

4. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மக்களுக்கு உரிய பண்பில்லாதவர் ____________________ போன்றவர் என வள்ளுவர் கூறுகிறார்.
2. கங்கை கொண்ட சோழபுரம் ____________________ என்று புலவர்களால் போற்றப்பட்டது.
3. கம்பைக் குறிக்கும் வீரக்கலை ____________________ ஆகும்.

5. பிறமொழிச் சொற்களையும் பேச்சுத்தமிழையும் நீக்கிச் சரியாக எழுதுக.

1. டுமாரோ ஈவினிங் என் ஸிஸ்டர் ஊருக்குப் போவா.

   நாளை மாலை என் தங்கை ஊருக்குச் செல்வாள்.

2. ஷேர் ஆட்டோவில பைவ் பாசஞ்சர்ஸ் இருக்காங்க.

   ______________________________.

3. என் வீட்டில் வாசிங் மிஷின் ரிப்பேராக இருக்கு.

   ______________________________.

6. பொருத்துக.

1. தொடர்வண்டி –

2. மிதிவண்டி –

3. தானியங்கி –

4. இருசக்கர வண்டி –

5. மகிழுந்து –

7. பாடலை நிறைவு செய்க

திருவிழாவாம் திருவிழா
எங்கள் ஊர்த் திருவிழா
ஊர் கூடும் திருவிழா
உறியடிக்கும் திருவிழா
____
____
____
____

8. கீழ்க்காணும் குறட்பாக்களிலுள்ள சொற்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்துக.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புஉடைமை என்னும் வழக்கு.

உயிர் எழுத்து இடம்பெறாத சொற்கள்	மெய் எழுத்து இடம்பெறாத சொற்கள்
நயனொடு நன்றி	

நிறுத்தக்குறிகளை அறிந்துகொள்வோம்

காற்புள்ளி	,	ஒரு தொடரில் பல பொருள்கள் அடுக்கி வரும்போது குறிக்கப்படுவது. மா, பலா, வாழை ஆகியவற்றை முக்கனி என்பர்.
அரைப்புள்ளி	;	ஓர் எழுவாய், பல பயனிலைகளைப் பெற்று வரும்போது, ஒவ்வொரு பயனிலையின் இறுதியிலும் குறிக்கப்படுவது. (எ.கா.) காளையின் கொம்பைப் பிடித்தல் ஆண்மை; வாலைப் பிடித்தல் தாழ்மை.
முற்றுப்புள்ளி	.	ஒரு தொடர் முடிவு பெற்றதனை உணர்த்துவதற்காகக் குறிக்கப்படுவது. (எ.கா.) எனக்கு மட்டைப்பந்து விளையாடப் பிடிக்கும்.
வினாக்குறி	?	ஒரு தொடர் வினாப்பொருளைத் தரும்போது, குறிக்கப்படுவது. (எ.கா.) அப்பா என்னால் பறக்க முடியாதா?
உணர்ச்சிக்குறி	!	ஒரு தொடர் உணர்ச்சியை வெளிப்படுத்தும்போது குறிக்கப்படுவது. (எ.கா.) என்னே! கங்கை கொண்ட சோழபுரக் கோவிலின் அழகு!
ஒற்றை மேற்கோள்குறி	‘ ’	ஒரு தொடரில் நூல் பெயர், கட்டுரை பெயர், பழமொழி முதலியன வந்தால் குறிக்கப்படுவது. (எ.கா.) பிரபஞ்சனின் படைப்புகளுள் 'வானம் வசப்படும்' என்னும் நூல் குறிப்பிடத்தக்கது.
இரட்டை மேற்கோள் குறி	“ ”	ஒரு தொடரில் ஒருவர் கூறியதை நேர்கூற்றாகக் கூறும்போதும், ஒரு தொடரை மேற்கோளாகப் பயன்படுத்தும் போதும் குறிக்கப்படுவது. (எ.கா.) "கண்வனப்பு கண்ணோட்டம்" என்று சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது.

மொழியோடு விளையாடு

1. சுழலட்டையைப் பயன்படுத்திக் குறிப்புகளுக்கு விடை எழுதுக.

1. உடலுறுப்புகளுள் ஒன்று ___________
2. உப்புநீர் அதிகம் உள்ள இடம் ___________
3. அழியாத செல்வம் ___________
4. பொருள்கள் வாங்கும் இடம் ___________
5. சமையலுக்குப் பயன்படுவது ___________
6. வீடு கட்டப் பயன்படுவது ___________
7. ஓவியம் என்பது ___________
8. பாரதியார் இயற்றியவை ___________



2. நீக்குவோம்! சேர்ப்போம்!

1. விதையில் ஒரெழுத்தை நீக்கி, வேறோர் எழுத்தைச் சேர்க்க.

2. சபையில் ஒரெழுத்தை நீக்கி, வேறோர் எழுத்தைச் சேர்க்க.

3. விலையில் ஒரெழுத்தை நீக்கி, வேறோர் எழுத்தைச் சேர்க்க.

4. ஆசையில் ஒரெழுத்தை நீக்கி, வேறோர் எழுத்தைச் சேர்க்க.

5 கடையில் ஒரெழுத்தை நீக்கி, வேறோர் எழுத்தைச் சேர்க்க.

நிற்க அதற்குத் தக



- பிற உயிரினங்களின் மீது அன்பு காட்டுவேன்.
- விளையாட்டு, உடலுக்கும் மனத்திற்கும் நல்லது என அறிந்துகொண்டேன்.
- நீர்த்தேக்கங்கள், வேளாண்மைக்கு உயிர் என்பதைப் புரிந்துகொண்டேன்.

அறிந்து கொள்வோம்

பண்பு

- தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

செயல் திட்டம்

தமிழர் கலைகள் குறித்துச் செய்தித்தாளில் வரும் படங்களையும் செய்திகளையும் தொகுத்து வருக.

இயல்
ஆறு

தொழில்/
வணிகம்

பாடல்

கற்றல் நோக்கங்கள்

- உழைப்பின் மேன்மையை அறிந்துகொள்ளுதல்
- உழவுத்தொழிலே உலகத்தின் அச்சாணி எனப் புரிந்துகொள்ளுதல்
- இயற்கை வேளாண்மையைப் பற்றித் தெரிந்துகொள்ளுதல்
- செய்யும் தொழிலில் நேர்மையின் இன்றியமையாமையை உணர்ந்துகொள்ளுதல்
- அடுக்குத் தொடர்களையும் இரட்டைக் கிளவிகளையும் இடமறிந்து பயன்படுத்துதல்

BATCWC

உழவுப் பொங்கல்

பொங்குக பொங்கல் பொங்குகவே
புதுவனம் நிறைந்தறம் தங்குகவே
எங்கணும் யாவரும் இன்பமுற
ஏர்த்தொழில் ஒன்றே தெம்புதரும்

உணவுப் பொருள்கள் இல்லாமல்
உயிரோ டிருப்பது செல்லாது
பணமும் அதுதரும் நலனெல்லாம்
பயிர்கள் விளைப்பதன் பலனேயாம்

உழவுத் தொழில்தான் உணவுதரும்
உடையும் அதனால் அணியவரும்
பழகும் மற்றுள தொழில்யாவும்
பயிர்த்தொழில் இன்றேல் விழலாகும்

தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்
இங்கிதன் உண்மையை உணர்ந்திடுவோம்
ஏர்த்தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம்

உழவே செல்வம் உண்டுபண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்

ஏழையும் செல்வரும் இங்கிதமாய்
இசைந்துளம் களித்திடும் பொங்கலிது
வாழிய பயிர்த்தொழில் வளம்பெருகி
வையகம் முழுதும் வாழியவே

– நாமக்கல் வெ. இராமலிங்கனார்

சொல்பொருள்

எங்கணும் – எங்கும்	ஏர்த்தொழில் – உழவுத்தொழில்	விழலாகும் – வீணாகும்
களித்து – மகிழ்ந்து	இசைந்து – ஏற்றுக்கொண்டு	வையகம் – உலகம்

பாடல் பொருள்

உழவுத்தொழிலின் மேன்மையை இப்பாடல் விளக்குகின்றது. உழவின் சிறப்பால் பொங்குகின்ற பொங்கலை அனைவரும் கொண்டாடி மகிழவேண்டும் எனக் கூறுகின்றது. எங்கும் யாவரும் இன்பமாய் வாழ்வதற்கு ஏற்ற தொழில் ஏர்த்தொழிலே. உணவுப்பொருள்கள் இல்லையென்றால் நாம் வாழ்வது அரிது. பயிர்கள் விளைவிப்பதால் செல்வம் சேரும்; உணவு கிடைக்கும்; உடையும் தரும். மற்ற தொழில்களைக் கற்றுக்கொண்டாலும், பயிர்த்தொழில் இல்லையெனில் எல்லாம் வீணாகும். தங்கம், வெள்ளி போன்றவற்றை நாம் உண்ணமுடியாது. உணவுப்பயிர்களே நமக்கு உணவாக அமையும். இன்பத்தைத் தருவதும் உழவுத்தொழிலே ஆகும். பொருளில்லாதவரும் செல்வமுடையவரும் இணக்கமாய் வாழும் திருநாள் பொங்கல் நாளே. ஆகையால், ஏற்றம் தரும் ஏர்த்தொழிலின் பெருமையை உணர்ந்து அனைவரும் உழவுப் பொங்கலிட்டுப் பயிர்வளம் பெருக்குவோம்.

நூல் குறிப்பு

உழவுப் பொங்கலின் சிறப்பை விளக்கும் இப்பாடலை இயற்றியவர், நாமக்கல் வெ. இராமலிங்கனார். அவருடைய கவிதைத் தொகுப்பிலிருந்து இப்பாடல் எடுத்தாளப் பெற்றுள்ளது. இந்திய விடுதலை குறித்தும், காந்தியடிகள் குறித்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார். காந்தியக் கவிஞர் என்றும் போற்றப்படுகிறார். இவருடைய 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்னும் பாடல் வரி மிகவும் புகழ்பெற்றதாகும். 'தமிழன் என்றோர் இனமுண்டு' என்றும் 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்றும் அவர் பாடிய பாடல் வரிகள் என்றும் நிலைத்திருப்பவை. இவர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக இருந்துள்ளார்.

கற்பவை கற்றபின்

- உழவுத் தொழிலின் பெருமையை உணர்ந்து போற்றுக.
- பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலிலுள்ள நயங்களைப் பாராட்டுக.
- உழவு நடக்கும் இடத்திற்குச் சென்று, செய்தி திரட்டுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

LWUMH9

1. வையகம் என்பதன் பொருள்

அ) ஊர் ஆ) வயல்

இ) உலகம் ஈ) கிராமம்

2. நலனெல்லாம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) நலன்+ எல்லாம் ஆ) நல + னெல்லாம்

இ) நலன் + னெல்லாம் ஈ) நலம் + எல்லாம்

3. நிறைந்தறம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ) நிறைந்து + அறம் ஆ) நிறைந்த + அறம்

இ) நிறை + அறம் ஈ) நிறை + தறம்

4. 'இன்பம்' – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ______________

அ) மகிழ்ச்சி ஆ) களிப்பு

இ) கவலை ஈ) துன்பம்

ஆ. பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுக.

________________ ________________

________________ ________________

இ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

________________ ________________

________________ ________________

ஈ. பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

________________ ________________

________________ ________________

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. அனைவரும் இன்பமுடன் வாழ்வதற்குத் தெம்பு தரும் தொழில் எது?
2. உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?
3. பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?

ஊ. சிந்தனை வினா

'உழவர், சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்கமுடியும்' இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

இயல்
ஆறு

உரைநடை

விதைத் திருவிழா

BQ3BW1

காலை வழிபாட்டுக் கூட்டத்தில், தலைமையாசிரியர் கூறிய செய்தி, மாணவர்களின் உள்ளத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. காரணம், அருகிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் விதைத் திருவிழாவிற்கு அடுத்த வாரம் அவர்களை அழைத்துச் செல்லப் போகிறார்கள். அன்று முழுவதும் அங்கு நடைபெறும் நிகழ்வுகளைத் தம் நண்பர்களுடன் கண்டு மகிழலாம் அல்லவா!

விதைத் திருவிழா தொடர்பான துண்டு விளம்பரத் தாள்களைத் தலைமையாசிரியர் வகுப்பாசிரியர்களிடம் வழங்கினார். நம் பள்ளியிலிருந்து விதைத் திருவிழாவில் மாணவர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறினார்.

தலைமையாசிரியரிடமிருந்து பெற்ற விளம்பரத் தாள்களை, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்கினர். துண்டு விளம்பரத்தாளிலுள்ள செய்திகளைப் படித்துப் பார்க்கச் செய்தனர்.

மாணவர்கள், விளம்பரத்தைப் படித்துப் புரிந்துகொண்டனர். விதைத் திருவிழாவில் தங்களுடைய பள்ளி சார்பாக என்னென்ன படைப்புகளை வழங்கலாம் எனக் குழுவில் கலந்துரையாடினர். பின்னர், தாங்கள் திரட்டிய படைப்புகளை ஆசிரியரிடம் காண்பித்து அனுமதி பெற்றனர். விதைத் திருவிழாவுக்குச் செல்லும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினர்.

மாணவர்கள் எதிர்பார்த்த நாளும் வந்தது. பள்ளியிலிருந்து அழைத்துச் செல்ல, வண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியர்களின் கனிவான பேச்சு, மாணவர்களுக்கு உற்சாகம் தந்தது.

ஆசிரியர் : மாணவர்களே, நாம் விதைத் திருவிழா நடைபெறும் அரங்கை நெருங்கி விட்டோம். நமது படைப்புகளைக் கண்காட்சியில் வைப்பதற்கு நான் உதவுகிறேன். வாருங்கள்.

ரமணன்: எனக்கு இந்த விதைத் திருவிழா பெருமகிழ்ச்சியைத் தருகிறது. மாலா, ரெஹானா விதைகளையெல்லாம் பாருங்களேன். இத்தனை வகைகளா? வியப்பாக இருக்கிறதே!

மாலா: ஆமாம், ரமணா! வகை வகையான விதைகள் என்பதைவிட, இந்த விதைகளை நாம் எப்படி சேகரிக்க வேண்டும், அதை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், அவற்றை எவ்வாறு முறைப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும் எழுதி வைத்துள்ளார்கள். விதைகள் எல்லாம் தரமானவையாக உள்ளன. இந்த விதைகள் மூலம் கிடைக்கும் சத்துக்கள், மருத்துவப் பயன்கள் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறார்கள், மேலும், விளக்கப் பலகைகளும் வைத்திருப்பது, மிகவும் பயனுள்ள வகையில் உள்ளது.

மணிமொழி: முகிலா, நெல் விதைகளின் பெயர்களைப் பார்த்தாயா? நாட்டு நெல் ரகங்களான மாப்பிள்ளை சம்பா முதலான பல்வேறு மரபு நெல் விதைகள், நாட்டுக்கம்பு, குதிரைவாலி, சோளம் போன்ற சிறு

நிலவளத்தைக் காப்போம்! நீர்வளத்தைப் பெருக்குவோம் ! பூமித்தாயைப் போற்றுவோம்.!

இயற்கை வேளாண்மையின் இன்றியமையாமை

350க்கும் மேற்பட்ட பாரம்பரிய விதைகள் சேகரிப்பு

- இயற்கை வேளாண் பொருள்கள்
- இயற்கை இடு பொருள்கள்
- இயற்கை பருத்தி ஆடைகள்
- இயற்கை கைவினைப் பொருள்கள்
- மண்ணோடு மட்கக்கூடிய பொருள்கள்
- மண்ணின் ஊட்டச்சத்து நீர் மேலாண்மை
- சூழலியல்
- தோட்டக்கலை
- பண்ணை அமைப்பு
- உணவுப் பாதுகாப்பு
- இயற்கை வேளாண்மை

அனைவரையும் சுண்டி இழுக்கும் 27 அரங்கங்கள்

தானியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் கடலை, உளுந்து, முந்திரி, நாட்டுப்பருத்தி விதைகள், சிறுதானிய விதைகள் மட்டுமல்லாமல் அரிய மூலிகைச் செடிகளும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் பார்ப்பதை நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

பாரதி: மணிமொழி அதோ, அங்கே பார்! அந்த அரங்கில் இயற்கை இடுபொருள்கள் இயற்கை உணவுகள், வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான குறிப்புகளும் தருகிறார்கள். வாங்க, வாங்க, என்ன சொல்கிறார்கள் எனக் கேட்போம்.

மணிமொழி: ரமணா, பாதிப்பு என்று இந்த அரங்கத்தில் எழுதியிருக்கே, என்னவாக இருக்கும்?

ரமணா: இரசாயன விதைகள், இரசாயனப் பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைத்தாம் பாதிப்பு என்று சொல்கிறார்கள். இதனால், மண்ணின் தன்மை கெடுகிறது. இதனைத் தடுக்கும்வகையில் இயற்கை முறையில் வேளாண்மை செய்ய வேண்டும் என்பதே அதன் பொருள்.

ரெஹானா: பாரதி, இங்கே பார்! சமையல் பாத்திரங்கள். இவை சாதாரண பாத்திரங்கள் அல்ல; பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட செம்பு, மரத்தாலான சமையல் பாத்திரங்கள், கருவிகள். இவற்றையும் நாம் பார்வையிடுவதற்காக வைத்துள்ளனர்.

ஆசிரியர்: மாணவச் செல்வங்களே, அனைத்துக் கூடங்களையும் பார்த்தீர்களா? இந்த விதைத் திருவிழா, உங்களுக்கு மிகுந்த பயனைத் தந்திருக்குமென நினைக்கிறேன்.

(மாணவர்கள் அனைவரும் "ஆமாம், ஐயா!" என்று கூறுகின்றனர்.)

பாரதி: ஐயா! அங்கே பாருங்கள். இயற்கை உணவுப்பொருள்கள் என்று எழுதப்பட்ட அந்த அரங்கத்தில் எல்லாரும் ஏதோ சுவைக்கிறார்கள். நாமும் அங்கே செல்லலாமா?

மணிமொழி: விழாவிற்கு வந்தவர்களுக்கு இயற்கை முறையில் தயாரித்த நவதானிய உணவுகளான இனிப்பு உருண்டை, பிட்டு, பொங்கல், கேழ்வரகுக் கூழ், கேழ்வரகு அடை, முளைகட்டிய பாசிப்பயறு, நவதானிய சுண்டல். கொண்டைக்கடலை, தட்டைப்பயறு, மொச்சை போன்ற தின்பொருள்களை வழங்குகிறார்கள்

ஆசிரியர்களுடன் மாணவர்களும் அந்த அரங்கில் நுழைந்தார்கள். இயற்கை உணவுகளைச் சுவைத்து மகிழ்ந்தார்கள்.

"இந்த **விதைத் திருவிழா** எங்களுக்குப் பயனுள்ள நிகழ்ச்சியாக இருந்தது. இந்த நாள் எங்களுக்கு இனிய நிகழ்வாகவும் அமைந்தது. இங்குப் பார்த்தவற்றை நாங்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்வோம்" என்று மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள். விதைத் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்த தலைமையாசிரியருக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி, மீண்டும் தங்களுடைய பள்ளிக்குத் திரும்பிச் சென்றார்கள்.

கற்பவை கற்றபின்

- இயற்கை வேளாண்மையின் சிறப்புகளைப் பற்றி, வழிபாட்டுக்கூட்டத்தில் பேசுக.
- இயற்கை உணவுப்பொருள்களின் படங்களைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.
- 'இயற்கை உரம் பயன்படுத்துவோம், இனிமையாய் வாழ்வோம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
- உங்கள் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள இயற்கை விதைப் பண்ணைகளுக்குச் சென்று, செய்தி திரட்டுக.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவுக்கு மாதிரி அழைப்பிதழ்/ துண்டு விளம்பரம் உருவாக்கி மகிழ்க.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. அனுமதி – இச்சொல் குறிக்கும் பொருள்------------
   அ) கட்டளை ஆ) இசைவு இ) வழிவிடு ஈ) உரிமை

2. விளம்பரத்தாள்கள் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----------
   அ) விளம்பர + தாள்கள் ஆ) விளம்புரத்து + தாள்கள்
   இ) விளம்பரம் + தாள்கள் ஈ) விளம்பு + தாள்கள்

3. ஆலோசித்தல் – இச்சொல்லுக்குரிய பொருள்-----------
   அ) பேசுதல் ஆ) படித்தல் இ) எழுதுதல் ஈ) சிந்தித்தல்

4. தோட்டம் + கலை– இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது---------
   அ) தோட்டம்கலை ஆ) தோட்டக்கலை
   இ) தோட்டங்கலை ஈ) தோட்டகலை

5. பழங்காலம் இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்---------------------
   அ) பழைய காலம் ஆ) பிற்காலம்
   இ) புதிய காலம் ஈ) இடைக்காலம்

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அ) வழிபாடு + கூட்டம் – ------------------
ஆ) வீடு + தோட்டம் – ------------------

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) அழைப்பிதழ் = ------- + --------
ஆ) விதைத்திருவிழா = ------- + --------

4WZ3I3

ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக

அ) விதைத்திருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளின் எண்ணிக்கை--------.
ஆ) விதைகள்---------ஆனவையாக இருத்தல் வேண்டும்.
இ) கொண்டைக்கடலை என்பது, -----------ஒன்று.

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார்?
2. ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது?
3. 'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?
4. நவதானியங்களுள் ஐந்தின் பெயரை எழுதுக.

ஊ. சிந்தனை வினா

செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் என்ன செய்யலாம்?

துணைப்பாடம்

இயல் ஆறு

நேர்மை நிறைந்த தீர்ப்பு

பல ஆண்டுகளுக்குமுன் தென் பாண்டிய நாட்டை மங்கையர்க்கரசி என்பவர் ஆண்டு வந்தார். அவர், நீதியும் நேர்மையும் மிக்கவராக விளங்கினார். அவர் ஆட்சியில் மக்கள் குறைவின்றி வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள், கிராமத் தலைவர் ஒருவர் அரசியிடம் ஒரு வழக்கைக் கொண்டு வந்தார். அவருடன் நான்கு பேர்களும் அரண்மனைக்கு வந்தனர். அரசியை வணங்கிய கிராமத் தலைவர், தம் வழக்கை எடுத்துரைத்தார்.

"செல்வந்தர் ஒருவர், அரிய சாதனை புரிபவருக்கு நூறு பொற்காசுகள் கொண்ட பொற்கிழி ஒன்றைப் பரிசளிப்பதாக அறிவித்து, அதனைப் பஞ்சாயத்தாரிடம் கொடுத்தார். அந்தப் பொற்கிழியைப் பெறுவதற்கு இவர்கள் நால்வரும் போட்டி போட்டனர். நால்வருடைய அரிய சாதனையைக் கேட்ட எங்கள் ஊர்ப் பஞ்சாயத்தினர், யாருடைய சாதனை சிறந்தது என்று முடிவு கட்ட முடியாமல், பரிசுத் தொகையை நால்வருக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுக்கலாம் என முடிவெடுத்தனர்.



ஆனால், இந்நால்வரும் அதற்கு உடன்பட மறுத்தனர். அவரவர்க்கும் தங்கள் சாதனையே பெரியது என்று கூறி, பரிசுத் தொகை முழுமையாகத் தங்களுக்கே சேர வேண்டும் என்றனர். அதனால், தாங்களே இவர்கள் செய்த சாதனையைக் கேட்டு விசாரித்து, பொற்கிழியை யாருக்குக் கொடுப்பது என்று சரியான தீர்ப்பளிக்க வேண்டும்" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார் அந்தப் பஞ்சாயத்து தலைவர்.

அரசியார் அந்நால்வரையும் பார்த்தார்., "ஒவ்வொருவராக உங்கள் சாதனையைச் சொல்லுங்கள்," என்று ஆணையிட்டார்.

முதலில், முருகேசன் என்பவர் தம் சாதனையைச் சொல்லத் தொடங்கினார்; "நான் ஒரு வியாபாரி. மளிகைக் கடை வைத்துள்ளேன். வியாபாரத்தில் முழுக்கவனத்தோடு ஈடுபட்டிருந்தபோது, சிறுமி ஒருத்தி ஒருநாள் என் கடைக்கு வந்தாள். கடையில் சில பொருள்களை வாங்கினாள். நான் வேலையில் மும்முரமாக இருப்பதைக் கவனித்துவிட்டுப் பணம் கொடுக்காமல் நழுவப் பார்த்தாள். அப்போது தெருவில் வந்த மாடு, அவளை ஆவேசமாக முட்டுவதற்குப் போனது. நான் பாய்ந்துசென்று அவளைக் காப்பாற்றினேன். இத்தனைக்கும் அவள் தந்தைக்கும் எனக்கும் நிலத்தகராறு உண்டு. அடிதடிவரைகூடப் போய்விட்டோம். அப்படியிருந்தும் அவளை நான் காப்பாற்றினேன். அதைக் கண்ட ஊர்மக்கள் எல்லாரும் என்னைப் பாராட்டினார்கள். ஓர் உயிரைக் காப்பாற்றியது அதுவும் பகைவனின் மகளைக் காப்பாற்றியது பெரிய சாதனை இல்லையா? அதனால்தான் பொற்கிழியை எனக்கே கொடுக்க வேண்டும் என்கிறேன்."என்று சொன்னார் முருகேசன்.

இரண்டாவதாக, கண்ணன் என்பவர் தம் சாதனையைச் சொல்லலானார்."நான் ஒரு கவிஞன். பல பாடல்களும் கவிதைகளும் இயற்றியுள்ளேன். ஒரே இரவில், உலகம் வியக்கும்படியாக நூறு செய்யுள்களைக் கொண்ட 'ஆனந்த வாழ்வு' என்ற காவியத்தைப் படைத்துள்ளேன். மக்கள் எல்லாரும் அதை விரும்பிப் படிக்கிறார்கள். ஒரே இரவில் இப்படி ஒரு காவியத்தைப் படைத்தது ஓர் இலக்கிய சாதனை அல்லவா? எனவே பொற்கிழி பெற முற்றிலும் தகுதி உள்ளவன் நான் ஒருவனே!" இவ்வாறு தன்னிலை விளக்கம் அளித்தார் கவிஞர்.

அடுத்ததாக மூன்றாவது ஆள், கல்தச்சர் கந்தசாமி. அவர் தம் சாதனையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். "கரடுமுரடான பாறையையும் வெட்டிக்கொண்டு வந்து, அழகிய சிலையாகவும் எழிலான தூண்களாகவும் செய்யும் கல் தச்சன் நான். சிற்றுளியைக் கையில் எடுத்தால் போதும், அது பேசும்; பாடும்; நடனமாடும். பாறையைக் குடைந்து குடைவரைக் கோவில்களும் மண்டபங்களும் செய்துள்ளேன். நான் செதுக்கிய குகைக் கோவிலைக் கண்டு வியந்து பாராட்டாதவர்களே இல்லை. அது என் அரிய சாதனை. அதில் என்னை வெல்ல எவருமில்லை. எனவே, பொற்கிழியை எனக்குக் கொடுப்பதே பொருத்தம்!" என்றார் கல்தச்சர் கந்தசாமி.

நான்காவதாக முதியவர் ஒருவர் வந்தார். அவர், தமது சாதனை என்ன என்று சொல்லலானார். "நான் சாதாரண ஓர் ஏழை விவசாயி. என் மூதாதையர் வழியில் எனக்குக் கிடைத்த ஒரு காணி நிலத்தை நன்கு உழுது பயிரிட்டுப் பிழைத்து

வருகிறேன். என் மனைவி காலமாகிவிட்டாள். என் மகளும் நானும்தான் வயலில் உழைத்து வாழ்க்கை நடத்துகிறோம். இருவரும் பாடுபட்டு வேலை செய்ததால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மூன்று மடங்கு விளைச்சல் கண்டுள்ளது. என் குடும்பத்திற்குத் தேவையான நெல் போக, மீதியைப் பத்துக் குடும்பத்திற்கு விற்றேன். ஒரு காணி நிலத்தைக் கொண்டு பத்துக் குடும்பத்தைக் காப்பாற்றியது என் சாதனைதானே?" என்று கேட்டார் முதியவர்.

மங்கையர்க்கரசி சற்று யோசித்தார். பிறகு தம் தீர்ப்பைக் கூறலானார்.

"தன் உயிரையோ, பகையையோ பொருட்படுத்தாமல், பாய்ந்துசென்று பகையாளி மகளைக் காப்பாற்றியது அரிய சாதனைதான். பகைவருக்கும் நட்பு காட்டுவது நமது பண்பாடு. "இராவணனைப் பார்த்து, இன்றுபோய் நாளை வா!" என்றதும் "சுற்றி நில்லாதே போ பகையே, துள்ளி வருகுது வேல்" என்ற பாடல் வரிகளும் பண்பாட்டையே வெளிப்படுத்துகின்றன. எனவே, பகைவரின் மகளை நீர் காப்பாற்றியது, நமது பண்பாட்டுச் செயலே தவிர, புதிய சாதனை ஏதுமில்லை".

"அடுத்து, கவிஞர் ஒரே இரவில் நூறு கவிதைகளைப் புனைந்து காவியம் படைத்துள்ளதாகச் சொன்னார். சோழ நாட்டில் இருந்த பெண் கவி ஒருவர், ஒரே இரவில் ஆயிரம் கவிதை புனைந்து காவியம் படைத்தது பழைய செய்தி. எனவே, ஒரே இரவில் நீர் நூறு கவிதை புனைந்து காவியம் படைத்ததை அரிய சாதனையாக ஏற்க முடியாது".



"அடுத்ததாகக் கல் தச்சர், பாறையைக் குடைந்து பார்ப்போர் வியக்கும்வகையில் குடைவரைக் கோவில் உருவாக்கியதை ஒரு சாதனையாகச் சொன்னால், மாமல்லபுரம் கோவில்களும், திருச்சி பல்லவர்காலக் கோவில்களும் அழகிய குடைவரைக் கோவில்களே! எனவே, இவர் செய்தது புதுமையான சாதனை அன்று".

நாலாவதாக, முதிய விவசாயி, தமது ஒருகாணி நிலத்தில் மும்மடங்கு நெல் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார். உண்மையில் இது பெரிய சாதனைதான். எந்த அளவிற்குப் பாடுபட்டு உழைத்திருந்தால், இந்த அளவு பலன் காண முடியும்! அவரது உழைப்பால், மேலும் பத்துக் குடும்பங்களுக்குப் பயன் கிடைத்துள்ளது. விவசாயிகள் ஒவ்வொருவரும் இப்படிச் சாதனை செய்தால் நாட்டில் பஞ்சம், பசி இருக்காது; நோய்நொடி இருக்காது; வறுமையும் இருக்காது. எனவே, பொற்கிழி பெறத் தகுதியானவர் இவர்தாம். இவருக்கே பொற்கிழியை வழங்க ஆணையிடுகிறேன்" என்று நேர்மை நிறைந்த தீர்ப்பை வழங்கினார் மங்கையர்க்கரசி. அவரது தீர்ப்பைக் கேட்டு, மக்கள் எல்லாரும் அவரை வாழ்த்தினர்.

கற்பவை கற்றபின்

- நேர்மையால் உயர்ந்தவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்க.
- நேர்மை நிறைந்த தீர்ப்பு கதையை நாடகமாக நடித்துக்காட்டுக.

மதிப்பீடு

F4RE4B

வினாக்களுக்கு விடையளிக்க.

1. அரசியிடம் கிராமத் தலைவர் கொண்டுவந்த வழக்கு யாது?

2. முருகேசன் தாம் என்ன சாதனை புரிந்துள்ளதாகக் கூறினார்?

3. விவசாயியின் சாதனைதான் உயர்ந்தது என்று அரசி கூறக் காரணம் என்ன?

சிந்தனை வினா

நண்பர்கள் உன்னை வீட்டில் வந்து சந்திக்கின்றனர். அவர்கள் சென்றபிறகு, பணப்பை ஒன்று நாற்காலியில் இருப்பதைக் காண்கிறாய். இந்நிலையில் நீ செய்யப்போவது என்ன?

அ) பணப்பையை உரியவரிடம் கொடுப்பேன்

ஆ) உரியவரே தேடிக்கொண்டு வரட்டும் எனக் காத்திருப்பேன்.

இ) நான் பார்த்ததால், எனக்குத்தான் உரியது என வைத்துக்கொள்வேன்.

கற்கண்டு

அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி

தேனிசை: அடடே, செல்வியா? வா! வா! வா! எப்படி இருக்கிறாய்?

செல்வி: (**கலகலவென** நகைத்தவாறே) ஓ! நன்றாக இருக்கிறேன். அத்தை எங்கே?

தேனிசை: அவர்கள் வேலைக்குச் சென்றிருக்கிறார்கள்.

(அப்போது **தடதட வென** அங்கே ஓடி வருகிறான் தேனிசையின் தம்பி மதியழகன்)

செல்வி: மதி, ஏன் இப்படி **படபடவென** மூச்சு இரைக்க ஓடி வருகிறாய்? என்ன ஆயிற்று?

மதியழகன்: அக்கா, அங்கே **பாம்பு, பாம்பு**......

தேனிசை: மதி, விளையாடாதே, அன்றும் இப்படித்தான் **தீ, தீ, தீ** என்று சொல்லிக்கொண்டே ஓடி வந்தாய். ஆனால், அப்படி எதுவும் இல்லை. **போ, போ, போ** இப்படியெல்லாம் பொய் சொல்லாதே.

மதியழகன்: அக்கா, உண்மையாகத்தான் சொல்கிறேன். நீங்களே வந்து பாருங்கள்.

செல்வி: தேனிசை, தம்பி **திரும்பத் திரும்பச்** சொல்வதைப் பார்த்தால் பொய் சொல்வதுபோல் தெரியவில்லையே, **வா, வா,** போய்ப் பார்க்கலாம்.

(அவர்கள் வெளியில் வந்து பார்த்தபோது, அருகிலிருந்த மரத்தின்மீது பாம்பொன்று **சரசரவென** ஊர்ந்து கொண்டிருந்தது. அதன் உடல் **பளபளவென** வெயிலில் மின்னியது).

மேற்கண்ட உரையாடலில் சில சொற்கள் தடித்த எழுத்துகளில் உள்ளன. அவை என்னவென்று அறிந்துகொள்வோமா?

சில சொற்கள் எப்போதும் இரண்டாகவே வரும். அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தால் பொருள் தரா. உரையாடலில் **கலகல, தடதட, படபட, பளபள** என வரும் சொற்களில் **கலகல** என்பதைக் **கல** எனத் தனியாகப் பிரித்தால் பொருள் இல்லை. அதனால், இம்மாதிரியான சொற்கள் எப்போதும் இரட்டைச் சொல்லாகவே வரும். ஆகவே, இவற்றை இரட்டைக்கிளவி என்பர்.

இரட்டை என்பது, இரண்டு. கிளவி என்பது, சொல். இரட்டைக் கிளவி ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு, வியப்புக்குறிப்பு, சினக்குறிப்பு போன்ற பலவகைக் குறிப்புகளை உணர்த்தும்.

சில சொற்கள் இரண்டாகவோ மூன்றாகவோ ஏன் நான்காகவோ கூட அடுக்கி வரலாம். ஆனால், அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தாலும் பொருள் தரும். உரையாடலில் **வா வா வா, பாம்பு பாம்பு, தீ தீ தீ, போ போ போ, திரும்பத் திரும்ப** போன்ற சொற்கள் வந்துள்ளன. இவற்றைத் தனித்தனியாகப் பிரித்தாலும் பொருள் தரும். இவற்றை அடுக்குத்தொடர் என்பர்.

வா, வா, வா என மூன்றுமுறை அடுக்கிவரும் சொல்லை வா எனத் தனியே பிரித்தாலும் அஃது ஓரெழுத்து ஒருமொழியாய் வருகையைக் குறிக்கிறது. அடுக்குத்தொடர் அசைநிலை, விரைவு, வெகுளி, அச்சம், உவகை, அவலம், இசைநிறை முதலிய பொருள்களைக் குறித்து வரும்.

- ☞ எப்போதும் இரட்டைச் சொல்லாகவே வருவது, இரட்டைக்கிளவி.
- ☞ ஒரு சொல்லே இரண்டு அல்லது அதற்குமேல் அடுக்கி வருவது, அடுக்குத்தொடர்.

இரட்டைக்கிளவி	அடுக்குத்தொடர்
இரட்டைச் சொல்லாக வரும்	ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வரும்.
தனித்தனியே பிரித்தால் பொருள் தராது	தனித்தனியே பிரித்தாலும் பொருள் தரும்.
இரண்டு முறைக்குமேல் அடுக்கி வராது	இரண்டு அல்லது அதற்குமேல் அடுக்கி வரும்.

கற்பவை கற்றபின்

- இரட்டைக்கிளவிகளைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுக.
- உரைப்பகுதிகளில் காணப்படும் அடுக்குத்தொடர்களைத் தொகுத்து எழுதுக.
- அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி வருமாறு கற்பனைக் கதையொன்றை எழுதுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. அடிபட்ட கால் __________ என வலித்தது.

அ) கடகட ஆ) விண்விண் இ) படபட ஈ) கணகண

2. காலைப்பொழுது __________ வென புலர்ந்தது.

அ) பலபல ஆ) தடதட இ) புலபுல ஈ) மளமள

3. குயில் __________ எனக் கூவியது.

அ) கீச்கீச் ஆ) கூகூ இ) கொக்கொக் ஈ) பக்பக்

4. மணமக்களை __________ என வாழ்த்தினர்.

அ) வருக வருக ஆ) வாழ்க வாழ்க இ) வீழ்க வீழ்க ஈ) வளர்க வளர்க

ஆ. பொருத்துக.

1. கலகலவென – விரைவுக்குறிப்பு
2. நறநறவென – ஒலிக்குறிப்பு
3. தடதடவென – சினக்குறிப்பு

இ. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருந்துமாறு இரட்டைக்கிளவி/ அடுக்குத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

அடர்ந்த காடு. ஒன்றையொன்று துரத்தி விளையாடிக்கொண்டிருந்த குரங்குகள், திடீரெனக் குரலெழுப்பியவாறு, ஒவ்வொரு மரமாக ஏறியும்இறங்கியும் கிளைக்குக் கிளை ---------------ச் சென்றன. அவை எழுப்பிய ஓசையினால், பறவைகள் தத்தம் சிறகுகளைப் --------வென அடித்துக்கொண்டு பறந்தன. அருகிலிருந்த சிற்றாற்றில், நீர் --------வென ஓடிக்கொண்டிருந்தது. நீர்நிலை தேடிக் ----------மாக வந்த யானைகள், அந்த ஆற்றைக்கண்டு, களிநடனமிட்டன. அருகில் வளர்ந்திருந்த தென்னை மரமொன்றிலிருந்த தேங்காய்கள், ---------எனக் கீழே விழுந்தன. அந்த ஓசையைக் கேட்டு, மிரண்ட யானைக்கன்று --------வென ஓட, அருகிலிருந்த மான்கள் அங்குமிங்கும் -----------ஓடின. சூல்கொண்ட மேகங்கள், ----------வெனத் திரள, --------வென மின்னல் மின்னியது. சற்றுநேரத்தில், --------வென மழை பெய்ய, குரங்குகள் மரத்தின் மீது -------- வென ஏறின.

தபதப, துள்ளித் துள்ளி, கூட்டம் கூட்டம், படபட, சலசல,
சடசட, கருகரு, பளபள, மடமட, தாவித் தாவி, பொத்து பொத்து

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- எளிய, இனிய ஓசைநயமிக்க பாடல்களைக் கேட்டு மகிழ்க.
- உழவு வேலை நடைபெறும் இடங்களில் பாடப்படும் பாடல்களைக் கேட்டு மகிழ்க.

ஆ. பேசுதல்

- 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்னும் தலைப்பில் 5 மணித்துளி பேசுக.
- நேர்மையாக வாழ்ந்தவர்களுள் யாரேனும் ஒருவரின் பண்புகளைப் பாராட்டிப் பேசுக.

இ. படித்தல்

- செய்தித்தாளில் இடம்பெறும் வேளாண்மை பற்றிய செய்திகளை வகுப்பில் படித்துக்காட்டுக.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் விழாவுக்குத் துண்டு விளம்பரத்தாள் தயாரித்து, அனைவருக்கும் படித்துக்காட்டுக.

ஈ. எழுதுதல்

1. சொல்லக் கேட்டு எழுதுக.

1. விதைத் திருவிழாவிற்குச் செல்வோம்.
2. இயற்கை வேளாண்மை அன்புடன் வரவேற்கிறது.
3. நீர்வளத்தைப் பெருக்குவோம்.
4. மண்ணின் ஊட்டச்சத்து நீர் மேலாண்மை
5. ஆர்வலர்களைச் சுண்டியிழுக்கும் அரங்குகள்

2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. திருவிழா ____
2. இரசாயன விதை ____
3. விளம்பரப் பலகை ____
4. வீட்டுத் தோட்டம் ____
5. பழங்காலம் ____

3. ஒருபொருள் தரும் பல சொற்களை எழுதுக.

1. வயல் – செய், கழனி
2. உழவு – ------, ------
3. மகிழ்ச்சி – ------, ------
4. வீடு – ------, ------
5. பேசு – ------, ------

4. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

நீர்வளமும் நிலவளமும் உடைய தமிழ்நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே பயிர்த்தொழில் சிறந்ததாகக் கருதப்பட்டது. முற்காலத் தமிழர் தொழுதுண்டு வாழ விரும்பினார் அல்லர்; உழுதுண்டு வாழவே விரும்பினார்கள். 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்றார் ஒரு புலவர். ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு மழை இன்றியமையாதது. தாய் முகம் காணாப் பிள்ளையும் மழை முகம் காணாப் பயிரும் செழிப்படைவதில்லை. ஆகவே, தமிழ்நாட்டார் வானத்திலே தவழும் மேகத்தையே நோக்கி வாழ்ந்தார்கள். உயர்ந்து ஓங்கிய மலைகளில் மேகம் தவழக் கண்டால் தமிழர் உள்ளம் தழைக்கும்; கார்மேகத்தின் இடையே மின்னல் வீசக் கண்டால் அவர் உள்ளம் துள்ளி மகிழும்.

1. பண்டைக்காலத்திலேயே சிறந்ததாகக் கருதப்பட்ட தொழில் எது?
2. முற்காலத் தமிழர் எப்படி வாழ விரும்பினர்?
3. ஏர்த்தொழில் இனிது நடைபெற எது தேவை?
4. தமிழர் உள்ளம் துள்ளி மகிழக் காரணம் என்ன?
5. மழையுடன் தொடர்புடைய சொற்களை எழுதுக.

5. கீழ்க்காணும் பாடலைப் படித்து மகிழ்க.

நீர் மேலாண்மை ஆத்திசூடி

அகலத் தூறிடு
ஆழ்துளை நீக்கு
இருகரை சமன்செய்
ஈராறு இணை
உப்புநீர் வடி
ஊற்றுநீர் பெருக்கு
எரிபொருள் சேமி
ஏரியைக் காத்தல் செய்
ஐம்பொறி அழுக்கறு
ஒன்றாக்கு நீர்நிலை
ஓங்கிடும் உலகெலாம்
ஔடதம் நீர்

மொழியோடு விளையாடு

1. உழவுத் தொழிலுடன் தொடர்புடைய பழமொழிகளின் சொற்கள் இடம் மாறியுள்ளன. அவற்றை முறைப்படுத்தி எழுதுக.

1. பட்டம், தேடி, ஆடிப், விதை, – ஆடிப்பட்டம் தேடி விதை
2. தேடு, ஏரைத், தேடின், சீரைத் – ------------------
3. உழுவதை, அகல, விட, உழு, ஆழ – ------------------

2. கீழ்க்காணும் பாடலிலுள்ள தொகைச்சொற்களை விரித்து எழுதுக.

இருவினை அறிந்து கொள்வோமே!
முத்தமிழ் கற்றுத் தேர்வோமே!
நாற்றிசை தேடிச் செல்வோமே!
ஐந்திணை சுற்றி வருவோமே!
அறுசுவை உண்டு மகிழ்வோமே!

இருவினை – நல்வினை, தீவினை
முத்தமிழ் – -----, -----, -----,
நாற்றிசை – -----, -----, -----, -----,
ஐந்திணை – -----, -----, -----, -----, -----
அறுசுவை – -----, -----, -----, -----, -----, -----,

3. குறிப்புகளைப் படித்துத் 'தை' என முடியும் சொற்களை எழுதுக.

1. மெதுவாக ஊர்ந்து செல்லும் ஓர் உயிரி
2. பொதி சுமக்கும் விலங்கு
3. பகலில் கண் தெரியாப் பறவை
4. பாரதியாரின் சிறப்பு



4. கீழ்க்காணும் தொடரைப் பல தொடர்களாக மாற்றுக.

1. மணமலர் படம் வரைந்தாள்

அ) மணமலர் படம் வரைந்தாளா?

ஆ) மணமலரா படம் வரைந்தாள்?

இ) மணமலர் படம் வரை

ஈ) மணமலர் படம் வரைவாயா?

2. கதிரவன் வீட்டுக்குச் சென்றான்

அ) ---------------------- ஈ) ----------------------

ஆ) ---------------------- உ) ----------------------

இ) ----------------------

5. புதிய சொற்களை உருவாக்குக.

1. விளையாட்டுத் திடல் – விளை, விளையாட்டு, திடல், விடல், விடு., விடுதி, வில்
2. பல்கலைக்கழகம் – --
3. கவிதைத்திரட்டு – --

6. பாடலைத் தொடர்ந்து பாடி மகிழ்க.

விடுகதையாம் விடுகதை
விடை காணும் விடுகதை
உயரமாக இருப்பானாம்
ஒரே இடத்தில் நிற்பானாம்
இளநீர்,தேங்காய் தருவானாம்
ஓலைக்கீற்றும் தருவானாம்
அவன் பெயர் என்ன?
தென்னை மரம் அவன்தானே
விடுகதையாம் விடுகதை

நிற்க அதற்குத் தக

- உழவின் மேன்மையை அனைவருக்கும் உணர்த்துவேன்.
- இயற்கை உரங்களின் பயன்களைச் சொல்வேன்.
- மழைவளம் பெருக மரம் வளர்க்க உதவுவேன்.

செயல் திட்டம்

- உழவு தொடர்பான படம் ஒன்றை வரைந்து வண்ணம் தீட்டுக.
- உழவு தொடர்பான பாடல்களுள் ஐந்து எழுதி வருக.

இயல் ஏழு

நாடு/சமூகம்/அரசு/நிருவாகம்

கற்றல் நோக்கங்கள்

- பண்டைத் தமிழ் மன்னர்களின் நிருவாகத் திறனையும் ஆட்சிமுறையையும் அறிந்துகொள்ளுதல்
- கடையெழு வள்ளல்களின் கொடைத்தன்மையைத் தெரிந்துகொள்ளுதல்
- தமிழர்களின் சமூகச் சிந்தனைகளைப் புரிந்துகொள்ளுதல்
- நடைமுறை வாழ்க்கையில் இணைச்சொற்களைப் பயன்படுத்துதல்

சிறுபஞ்சமூலம்

கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் – பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு

– காரியாசான்

TQ7RWU

சொல்பொருள்

வனப்பு – அழகு	வேந்தன் – அரசன்
கண்ணோட்டம் – இரக்கம்	வாட்டான் – வருத்தமாட்டான்
இத்துணை – இவ்வளவு	பண் – இசை

பாடல் பொருள்

கண்ணுக்கு அழகு, இரக்கம் கொள்ளுதல்; காலுக்கு அழகு, பிறரிடம் பொருள் வேண்டிச் செல்லாமை; ஆராய்ச்சிக்கு அழகு, இது இவ்வாறு முடியும் என்று உறுதி செய்து கூறுதல்; இசைக்கு அழகு, அதனைக் கேட்போர் நன்று எனச் சொல்லுதல்; அரசனுக்கு அழகு, தன் நாட்டு மக்களை வருத்த மாட்டான் என்று பிறர் அவனைப் புகழ்ந்து கூறுதல்.

நூல் குறிப்பு

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று சிறுபஞ்சமூலம். கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்கள் உடல் நோயைத் தீர்க்கின்றன. அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் ஐந்து கருத்துகள், மக்கள் மனநோயைத் தீர்ப்பனவாக உள்ளன. ஆகையால், இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர், காரியாசான்.

கற்பவை கற்றபின்

- பாடலைப் பொருள் புரிந்து படித்துக்காட்டுக.
- பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலை அடிபிறழாமல் எழுதுக

IIFGBL

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. **வனப்பு** – இச்சொல்லின் பொருள் ______________

அ) அறிவு ஆ) பொறுமை
இ) அழகு ஈ) சினம்

2. **நன்றென்றல்** – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) நன் + றென்றல் ஆ) நன்று + என்றல்
இ) நன்றே + என்றல் ஈ) நன்றெ + என்றல்

3. **என்று + உரைத்தல்** – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ....

அ) என்றுஉரைத்தல் ஆ) என்றுயுரைத்தல்

இ) என்றஉரைத்தல் ஈ) என்றுரைத்தல்

4. **கண்ணுக்கு** அழகு ....

அ) வெறுப்பு ஆ) பொறுமை

இ) இரக்கம் ஈ) பொறாமை

ஆ. பொருத்துக

1. கண்ணுக்கு அழகு – கேட்பவர் நன்று என்று சொல்லுதல்
2. காலுக்கு அழகு – இவ்வளவுதான் என உறுதி செய்து கூறுதல்
3. ஆராய்ச்சிக்கு அழகு – நாட்டு மக்களை வருத்தாமை
4. இசைக்கு அழகு – பிறரிடம் சென்று கேட்காமை
5. அரசனுக்கு அழகு – இரக்கம் காட்டல்

இ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக

_______________ _______________

_______________ _______________

ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. கண்ணுக்கு எது அழகு?
2. காலுக்கு எது அழகைத் தருகிறது?
3. இசைக்கு அழகாக எது கூறப்படுகிறது?
4. அரசனுக்கு அழகைத் தருவது எது?

உ. சிந்தனை வினா

நம்மைப் பிறர் பாராட்ட வேண்டுமெனில், நம்மிடம் எத்தகைய பண்புகள் இருக்கவேண்டும்?

இயல் ஏழு

உரைநடை

வாரித் தந்த வள்ளல்

சென்று வாருங்கள்! தாங்கள் வரும் வழிநோக்கி எங்கள் விழிகள் பார்த்திருக்கும்
அரசவை
வாழிய, மன்னா! இசைப் பாணர் ஒருவர் உங்களைக் காண வாயிலில் காத்திருக்கிறார்.
தடுக்காதே! அவரை விரைந்து உள்ளே அனுப்புக!
கொல்லிமலைக் கொற்றவா! கொடைத் திறத்தின் கோமகனே! நீவிர் வாழ்க! உமது படை வாழ்க!
தரணியெங்கும் தமிழ் இசையின் புகழ் பரப்பும் பாணரே! வருக! வளரட்டும் தமிழ்த் தொண்டு! எம்மை நாடி வந்த காரணம்?
வள்ளலே! வறுமை காரணமாக எமது வீட்டின் அடுப்பில் பூனை உறங்குகிறது
தமிழ் பரப்பும் பாணரே! உமது நிலை என்னை வருத்தமுறச் செய்கிறது.
உணவின்றி என் இல்லாள் மெலிந்து கிடக்கிறாள். பிள்ளைகளோ காற்றை உண்டு கண்ணில் உயிரைத் தேக்கியபடி இருக்கின்றனர்

கலக்கம் வேண்டாம் பாணரே! உம் வறுமையைப் போக்குவது என் பொறுப்பு.
மரம் பழுத்து எல்லாருக்கும் பயன் தருவது போல, எம் துயர் துடைத்து உதவுங்கள்
ஆகட்டும் பாணரே! அமைச்சரே! வாருங்கள்! இப்பாணரின் குடும்பம் பல தலைமுறைகள் வாழ வழி செய்திடுங்கள்
அப்படியே அரசே! தங்கள் ஆணைப்படி செய்கிறேன்.
பொற்காசுகளை அள்ளித்தருக! அணி மணிகளும் களிறுகளும் அனுப்பிடுக, பற்பல பரிசுகளைப் பேழைகளில் நிறைத்து அனுப்பிடுக
தங்கள் ஆணைப்படியே அனைத்தையும் அனுப்பி வைக்கிறேன் அரசே!
கற்ற கல்வி அறியாமை அகற்றுதல் போல, உற்ற துயர் துடைக்கும் வள்ளலே! உங்களின் குன்றாப் புகழ்,கொடைப் பண்பு ஓங்குக! வாழ்க! வாழ்க! நீவிர் வாழ்க!
போய் வாரும் பாணரே! நீரும் உமது சுற்றத்தாரும் குறைவின்றி நீடுழி வாழ்க!

கற்பவை கற்றபின்

- கல்விச் செல்வமே பிற செல்வங்களைவிட நிலையானது– இக்கூற்றைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
- வல்வில் ஓரி அன்பில் சிறந்தவன்–இக்கூற்றுக்கு விளக்கம் தருக.
- கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்பை அறிந்துகொண்டு வந்து பேசுக.

படித்து அறிக

IXPFBA

சொற்போர் மன்றம்

கல்வியா? செல்வமா? வீரமா?

இடம்: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கம்மங்காடு

நேரம்: பிற்பகல் 3.00 மணி நாள்: 10.01.2020

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து	–	மாணவ, மாணவியர்
வரவேற்புரை	–	தமிழாசிரியர்
தலைமை	–	தலைமை ஆசிரியர்
சிறப்பு விருந்தினர்	–	'சொற்போர் சுடர்' திரு. நா. எழிலன்
பங்கேற்பாளர்கள்	–	செல்வன் அ. .சுரேஷ், ஐந்தாம் வகுப்பு 'அ' பிரிவு
		செல்வி பி. அகிலா, ஐந்தாம் வகுப்பு 'ஆ' பிரிவு
		செல்வி ஏ. கம்ருன்னிஷா, ஐந்தாம் வகுப்பு 'இ' பிரிவு
நன்றியுரை	–	திருமதி ஆ. வளர்மதி, சமூக ஆர்வலர்

நாட்டுப்பண்

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. பொற்காசு – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) பொற் + காசு ஆ) பொல் + காசு

இ) பொன் + காசு ஈ) பொ + காசு

2. கொடைத்திறம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) கொடை + திறம் ஆ) கோடை + திறம்

இ) கொட + திறம் ஈ) கொடு + திறம்

3. **களிறு** என்பது .... யைக்குறிக்கும்

அ) குதிரை ஆ) கழுதை இ) யானை ஈ) ஒட்டகம்

4. **தரணி** – இச்சொல்லின் பொருள் ....

அ) மலை ஆ) உலகம் இ) காடு ஈ) வானம்

5. **'சோறு'** இச்சொல்லுடன் பொருந்தாதது ....

அ) உணவு ஆ) அமுது இ) அன்னம் ஈ) கல்

ஆ. பொருத்துக

1. பேழை – வாசல்
2. மாரி – கடன்
3. வாயில் – பெட்டி
4. ஆணை – மழை
5. இரவல் – கட்டளை

இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாணனின் குழந்தைகள் பசியால் வாடக் காரணம் என்ன?
2. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது?
3. பரிசு பெற்ற பாணன், மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?
4. "வாரித் தந்த வள்ளல்" – இப்படக்கதை மூலம் நீவிர் அறிந்து கொண்டதை எழுதுக.

ஈ. சிந்தனை வினா

வல்வில் ஓரியைப் போல் ஈகைக் குணம் உனக்கிருந்தால் நீ யாருக்கெல்லாம் உதவி செய்வாய்?

உ. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

குப்பன் ஐந்தாம் வகுப்பு படிக்கிறான் தன் வேலையில் யாரும் குறுக்கிடக்கூடாது என்று எண்ணுவான். சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென்பதே அவன் ஆசை. ஒருநாள், அவன் பட்டம் விட்டுக்கொண்டிருந்தான். அப்போது, அவனுடைய தந்தை அங்கு வந்தார். "இந்தப் பட்டத்தைப் பார்க்கும்போது உனக்கு என்ன தோன்றுகிறது" எனக்கேட்டார். அதற்குக் குப்பன், "இந்த நூல் பட்டத்தின் சுதந்திரத்தைத் தடுத்துக் கொண்டிருக்கிறது" என்றான். உடனே அவன் தந்தை, பட்டத்தின் நூலை அறுத்துவிட்டார் பட்டம் தடுமாறிக் கீழே விழுந்தது. இப்பொழுது பார், வரையறைக்குட்பட்டு நூலுடன் இருக்கும்போது இந்தப் பட்டம் எவ்வளவு அழகாகப் பறந்து கொண்டிருந்தது? ஆனால்,

அந்த நூல்தான் பட்டத்தின் சுதந்திரத்தைத் தடுக்கிறது என்று நீ நினைத்தாய். இப்போது என்ன ஆயிற்று? நூல் அறுந்ததும் நிலை தடுமாறி, அந்தப் பட்டம் கீழே விழுந்துவிட்டதே! இதுபோலத்தான் நம் வாழ்க்கையும் நூலறுந்த பட்டமாய் இருந்தால் நாமும் வாழ்வில் தடுமாறக்கூடும்" என்று கூறினார்.

1. குப்பன் எந்த வகுப்பில் படிக்கிறான்?

2. பட்டத்தின் நூல் அறுந்ததும் அதன் நிலை என்னவாயிற்று?

3. இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்டது என்ன?

ஊ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கண்ணுக்கு அழகு பிறரிடம் -------------காட்டல்.
2. சிறுபஞ்ச மூலம் _____________ என்பவரால் எழுதப்பட்டது.
3. வாரிக் கொடுக்கும் வள்ளல்_____________
4. நாட்டு மக்களை வருத்தாமை_____________ க்கு அழகு

எ. பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.

1. என்னுடைய புக் டேபிளில் உள்ளது. ______________________
2. நான் டிவியில் நியூஸ் பார்த்தேன் ______________________
3. தை மாதம் பர்ஸ்ட் நாள் பொங்கல் பெஸ்டிவெல் கொண்டாடினான்

   ____
4. பாலன் ஸ்நாக்ஸ் சாப்பிட்டான். ______________________

ஏ. பாடலை நிறைவு செய்க

நாடு அதை நீயும் நாடு

பாடு அதன் புகழ் பாடு

____

____

____

____

துணைப்பாடம்

இயல் ஏழு

தலைமைப் பண்பு

செந்தூர் என்ற சிற்றூரில் வேம்பன் என்ற ஊர்த்தலைவர் வாழ்ந்து வந்தார். அவ்வூரை முன்னேற்ற வேண்டும் என்பதற்காகப் பலரை நாடிச்சென்று பொருளுதவி பெற்றார். பல திட்டங்களைச் செயல்படுத்த திறமையான நிருவாகி ஒருவரை நியமிக்க எண்ணினார். இச்செய்தியை ஊர்மக்களுக்கு முரசு அறைந்து அறிவித்தார். அவ்வூரைச் சேர்ந்த பாலன், பூவண்ணன் இருவருமே அப்பொறுப்பைத் தம்மிடம் வழங்குமாறு விருப்பம் தெரிவித்தனர். இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று சிந்தித்த தலைவர் ஒரு முடிவிற்கு வந்தார். மக்கள்மீது உண்மையான அன்புகொண்டு, தேவையானவற்றைச் செய்து, சரியான நிருவாகத் திறமை உள்ளவர் யார் என்பதை அறிந்து கொள்வதற்காக அவர்களுக்கு மூன்று போட்டிகள் வைத்தார்.

அவ்விருவரும் போட்டிகளில் கலந்து கொண்டனர். முதல் போட்டி, மக்களுக்குப் பிடித்தவராக இருக்க வேண்டும். போட்டியைப் புரிந்துகொண்ட பாலன், அவ்வூர் மக்களுக்கு அறுசுவை விருந்தளித்தார். மக்கள் மகிழ்ந்தனர். பூவண்ணன் அவ்வூரிலுள்ள திறமைசாலிகள் சிலரைத் தேர்ந்தெடுத்துத் தொழில் சார்ந்த பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார்.

இரண்டாவது போட்டியானது, அவ்வூர் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த வேண்டும் என்பதாகும். இதற்காகப் பாலன் தம்மிடமிருந்த செல்வங்களை மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கத் தொடங்கினார். இதனால், மக்களுக்குப் பாலன்மீது அளவற்ற நம்பிக்கை ஏற்பட்டது. பூவண்ணன் தாம் தேர்ந்தெடுத்த திறமைசாலிகளுக்குக் கல்வியுடன் மற்ற கலைகளையும் சேர்த்துக் கற்றுக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்தார். மக்கள், இந்தச் செயல்களைக் கண்டு அவரை ஏளனமாகப் பார்த்தனர். அதனைப் பார்த்த பாலனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

மூன்றாவது போட்டி மக்களிடம் பரிவு காட்டவேண்டும் என்பதாகும். அதனை ஒப்புக்கொண்டு இருவரும் சென்றனர். மறுநாள் பாலன் சிந்தித்துக் கொண்டே நடந்து சென்றார். அவ்வழியில் மூதாட்டி ஒருவர் மரத்தடியில் படுத்திருந்தார். "தம்பி, என்னைத் தூக்கிவிடு, என்னால் எழுந்திருக்க முடியவில்லை" என்றார். "எனக்கு அவசர வேலை இருக்கிறது" என்று கூறிக்கொண்டே பாலன் வேகமாகச் சென்றுவிட்டார். சற்று நேரத்தில் அவ்வழியே வந்த பூவண்ணன், அந்த வயதான மூதாட்டியின் அருகில் சென்று, "என்ன வேண்டும்?" என்று கேட்டார். "தம்பி என்னைத் தூக்கிவிடு" என்று அந்த மூதாட்டி கூறினாள். உடனே பூவண்ணன் மூதாட்டியின் அருகில் சென்று, அவரைத் தூக்கி உட்கார வைத்தார். பிறகு, மூதாட்டியின் களைப்பைப் போக்க உணவும் வாங்கிக் கொடுத்தார்.

மறுநாள் ஊர்மக்கள் முன்னிலையில், நிருவாகி பதவி யாருக்கு கிடைக்கப்போகிறது என்பதை அறிவிக்க ஊர்த்தலைவரால் கூட்டம் கூட்டப்பட்டது. மக்களில் பெரும்பாலானோர் பாலனே நிருவாகி பதவிக்குத் தகுதியானவர் என முணுமுணுத்தனர். பூவண்ணன் அமைதியாக நின்றிருந்தார்.

ஊர்த் தலைவர் இருவரின் செயல்களையும் கேட்டறிந்தார். பாலன், மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கியதையும், தம் செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்க திட்டமிட்டதையும் கூறினார். மேலும், அனைவருடனும் அன்பாகப் பழகுவதாகவும் கூறினார். அதுமிட்டுமின்றி, தமக்கு அப்பதவி கிடைத்தால் சிறப்பாகச் செயல்படுவேன் என்றும் கூறினார்.

பூவண்ணன், திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்துக் கல்வியுடன் தனியாகத் தொழில் செய்து, பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பயிற்சிகள் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னார். மேலும், மற்றக் கலைகளையும் கற்றுத்தர ஏற்பாடு செய்திருக்கிறேன் என்றார். இருவரின் கருத்துகளைக் கேட்ட ஊர்த்தலைவர், மக்களின் இப்போதைய தேவைக்குப் பாலனால் வழங்கப்படும் அறுசுவை உணவும் செல்வமும் பயன்படலாம். அதைப் பகிர்ந்து கொடுக்க நினைத்ததில் மகிழ்ச்சி. ஆனால், எதிர்காலத்தேவை, மக்கள் முன்னேற்றம், சமூக முன்னேற்றத்திற்குக் கல்வியறிவு இன்றியமையாதது. அதனால், இந்த நிருவாகிப் பதவிக்கு ஏற்றவர் பூவண்ணனே என்று கூறினார். மக்களிடம் சலசலப்பு ஏற்பட்டது. அவர் கூறியதை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். அதைப் புரிந்து கொண்ட ஊர்த்தலைவர், "சற்றுப் பொறுத்திருங்கள். இதோ வருகிறேன்" என்று கூறிச் சென்றார். சிறிதுநேரம் கழித்துப் பாலன், பூவண்ணனிடம் உதவி கேட்ட

மூதாட்டி தள்ளாடியபடியே மக்கள் கூடியிருக்கும் இடத்திற்கு வந்தார். தட்டுத் தடுமாறிக் கீழே விழப்போன மூதாட்டியைப் பூவண்ணன் விரைந்து சென்று, தாங்கிப் பிடித்தார். எல்லாரும் அவரைப் பார்த்தனர். தடுமாறி விழுந்த மூதாட்டி, தம்முடைய வேடத்தைக் கலைத்தார். அவர் வேறு யாரும் அல்லர்; ஊர்த்தலைவர் வேம்பனே ஆவார்.

மக்களே, நான் பூவண்ணனைச் சிறந்த நிருவாகி என்றபோது, அதை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயங்கினீர்கள். இப்பொழுது உண்மையை உணர்ந்து கொண்டீர்களா? எதிர்காலச் சிந்தனை, சமூகப் பொருளாதார முன்னேற்றம், மக்களிடம் பரிவு காட்டும் தன்மை இவை அனைத்தையும் பெற்றவரே சிறந்த நிருவாகத் திறமை உடையவர் என்றார் ஊர்த்தலைவர். இந்தத் திறமை முழுவதும் பூவண்ணனிடமே உள்ளது. எனவே, அவரே சிறந்த நிருவாகி என்றார். ஊர்த்தலைவரின் முடிவை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர்.

கற்பவை கற்றபின்

- இக்கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- உமக்கு மிகவும் பிடித்த போட்டி எது? அதில் பங்கேற்றிருப்பின் அந்த அனுபவத்தைப் பற்றிக் கூறுக.

மதிப்பீடு

XJ5T4T

வினாக்களுக்கு விடையளிக்க.

1. வேம்பன் எதற்காகப் பலரை நாடிச் சென்று பொருளுதவி பெற்றார்?
2. ஊர்த்தலைவர் அறிவித்த இரண்டாவது போட்டி என்ன?
3. செந்தூர் மக்களுக்குப் பாலன் மீது நம்பிக்கை ஏற்படக் காரணம் என்ன?
4. சிறந்த நிருவாகி என ஊர்த்தலைவர் யாரை அறிவித்தார்?
5. பூவண்ணன் மக்களின் முன்னேற்றத்திற்கு என்ன செய்ததாகக் கூறினார்?

சிந்தனை வினாக்கள்.

1. உங்கள் ஊரை முன்னேற்றம் பெறச் செய்ய நீங்கள் எந்தவகையில் உதவுவீர்கள்?
2. உங்களுக்குத் தலைமைப் பண்பு கிடைக்கிறது எனில், என்னவெல்லாம் செய்ய நினைப்பீர்கள்? பட்டியலிடுக.

கற்கண்டு

இணைச்சொற்கள்

பூவரசன் : செல்வா, என்னாச்சு? ஏன் கவலையாக இருக்கிறாய்?

செல்வம் : எங்க வீட்டுத் தோட்டத்திலே இருந்த **சின்னஞ்சிறிய** பூச்செடி வாடிவதங்கியிருக்கு.

பூவரசன் : அதற்காகவா கவலைப்படுகிறாய்?

செல்வம் : ஆமாம். நான் அதை எவ்வளவு **கண்ணுங்கருத்துமாகப்** பார்த்துக்கொண்டேன் தெரியுமா? போனவாரம்தான் அதில **அடுக்கடுக்காக வெள்ளைவெளேர்னு** பூ பூத்திருந்தது.

பூவரசன்: வருந்தாதே, செல்வம். **இரவுபகலாக** நீ அந்தச் செடியை எப்படிக் கவனித்திருப்பாய் என்று எனக்கும் புரிகிறது. மீண்டும் அந்தச்செடி **பச்சைப்பசேல்னு** மாறணும் இல்லையா? நம்ம அறிவியல் ஆசிரியரிடம் கூறி இதற்குத் தீர்வு காண்போம்.

உரையாடலைப் படித்தீர்களா? வண்ண எழுத்துகளில் சில சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன அல்லவா? அவற்றைப்பற்றித்தான் நாம் இப்போது படிக்கப் போகிறோம்.

நாம் பேசும்போதும் எழுதும்போதும் இயல்பாகவே இத்தகைய சொற்களைப் பயன்படுத்துகிறோம். நன்றாகக் கவனித்தீர்களேயானால், ஒவ்வொன்றும் இரண்டிரண்டு சொற்களாக இருப்பதைக் காண்பீர்கள். எப்படி?

சிறிய + சிறிய – சின்னஞ்சிறிய

கண்ணும் + கருத்தும் – கண்ணுங்கருத்தும்

இரவு+ பகல் – இரவுபகல்

பச்சை + பச்சை – பச்சைப்பசேல்

இவைபோன்று இணையாகச் சொற்கள் வருகின்றன. ஆகையால், இவற்றை இணைமொழிகள் அல்லது இணைச்சொற்கள் என்று கூறுகிறோம். இவை, தொடர்களில் வரும்போது எப்போதும் சேர்ந்தே இருக்கும். நம்முடைய சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கு இவை துணைபுரிகின்றன.

இணைச்சொற்கள் மூவகையாக வருகின்றன. அவையாவன,

நேரிணை – கண்ணுங்கருத்தும், வாடிவதங்கி, ஈடும்எடுப்பும்

எதிரிணை – இரவும்பகலும் அங்கும்இங்கும், வெற்றியும் தோல்வியும்

செறியிணை – பச்சைப்பசேல், வெள்ளைவெளேர், சின்னஞ்சிறிய, அடுக்கடுக்காக

கற்பவை கற்றபின்

- நீங்கள் படிக்கும் நூல்களிலிருந்து இணைமொழிகளைத் தொகுக்க.
- இணைமொழிகளைப் பயன்படுத்தி, சிறு உரையாடல் எழுதுக.
- இணைமொழிகள் வருமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இணைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(ஈடும்எடுப்புமாக, கண்ணுங்கருத்துமாக, அடுக்கடுக்காக, இன்பமும்துன்பமும், கீரியும்பாம்பும்)

1. பானைகள் ------------ வைக்கப்பட்டிருந்தன.
2. நேற்றுவரை ------------ போல் இருந்தவர்கள் இன்று நட்புடன் பழகுகிறார்கள்.
3. தேர்வில் ------------ படித்ததால், நான் வகுப்பில் முதலாவதாக வந்தேன்.
4. வாழ்வில் ------------ உண்டு. அதனைக் கண்டு நாம் சோர்வடையக்கூடாது.
5. மன்ற விழாக்களில் எங்கள் ஆசிரியரின் பேச்சு ------------ இருக்கும்

ஆ. விடுபட்ட இடங்களில் உரிய எதிரிணைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

1. இன்பமும் -------------- – இன்பமும்துன்பமும்
2. அன்றும் -------------- – --------------
3. அங்கும் -------------- – --------------
4. உயர்வும் -------------- – --------------
5. விண்ணும் -------------- – --------------

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- பள்ளி வழிபாட்டுக்கூட்டத்தில் கூறப்படும் அறிவுரைகளைக் கேட்டறிக.
- ஆசிரியர் மற்றும் வயதில் மூத்தோர் கூறும் கதைகளைக் கேட்டு மகிழ்க.
- தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் விரிவான செய்திகள் மற்றும் உலகச் செய்திகளைக் கேட்டறிக.

ஆ. பேசுதல்

- அன்றாட வாழ்க்கைச் சூழலில் நீங்கள் காணும் சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- உங்கள் மனம் கவர்ந்த தலைவர்களுள் ஒருவரைப்பற்றி 5 மணித்துளி பேசுக.
- வல்வில் ஓரியின் கொடைச் சிறப்பைப்பற்றிப் பேசுக.

இ. படித்தல்

- செய்யுளைப் பொருள் விளங்கப் படித்துக்காட்டுக.
- பாடப்பகுதியைச் சரியான ஒலிப்புடன் பிழையின்றிப் படித்துக்காட்டுக.

ஈ. எழுதுதல்

1 சொல்லக்கேட்டு எழுதுக.

1. கண்ணுக்கு அழகு பிறருக்கு இரக்கம் காட்டல்
2. கொல்லிமலையை வல்வில் ஓரி என்ற மன்னர் ஆட்சி செய்தார்.
3. பாலன் அவ்வூர் மக்களுக்கு அறுசுவை விருந்தளித்தார்.

2 சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. பொருளுதவி – ______________________________________
2. திறமைசாலி – ______________________________________
3. நம்பிக்கை – ______________________________________
4. ஆராய்ச்சி – ______________________________________
5. வான்புகழ் – ______________________________________

3. பொருத்தமான சொற்களைக்கொண்டு, தொடரை முழுமையாக்குக.

[பாணர், ஊர்த்தலைவர், வல்வில் ஓரி, பூவண்ணன், பாலன்]

1. கொடைத்திறத்தில் சிறந்தவர் ________________________
2. மக்களுக்கு அறுசுவை விருந்தளித்தவர் ________________________
3. திறமைசாலிகளைத் தேர்ந்தெடுத்தவர் ________________________
4. இசைப் பாடல்களைப் பாடுபவர் ________________________
5. மூதாட்டிபோல் வேடமிட்டவர் ________________________

4. வரைபடத்தைப் புரிந்துகொள்ளுதல்



குறள்மதி, தேர்வில் பெற்ற மதிப்பெண்களைத்தான் மேலே பார்க்கிறீர்கள். இந்த வரைபட விவரத்திலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை அறிவோம்.

1. நூறு மதிப்பெண் பெற்றுள்ள பாடம் எது? – கணக்கு
2. எந்தப் பாடத்திற்கு 90 மதிப்பெண் கிடைத்துள்ளது? – தமிழ்
3. ஒரே மதிப்பெண் கிடைத்துள்ள பாடங்கள் எவை? – தமிழ், அறிவியல்
4. குறள்மதி பெற்ற மொத்த மதிப்பெண்களைக் குறிப்பிடுக. – 455/ 500
5. அதிக மதிப்பெண்ணுக்கும் குறைந்த மதிப்பெண்ணுக்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு? – 20 மதிப்பெண்

மொழியோடு விளையாடு

1. சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. வல்வில் ஓரி வாரித் தரும் வ__ள__ (ள், ல், ழ்)
2. பாணரே! உம் வ__மையைப் போக்குவது என் பொ__ப்பு (று, ரு)
3. களிறும் கொடையாய் நல்கும் வா__புக__வல்வில் ஓரி (ன், ண்/ல், ள், ழ்)
4. மக்களுக்குப் பாலன் மீது அளவ__ற நம்பிக்கை ஏற்பட்டது (ற்/ர்)
5. பூவண்ணன் மூதாட்டிக்கு உ__வு வாங்கிக் கொடுத்தான் (ண , ன, ந)

2. சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்கலாமா?

கொடுக்கப்பட்ட சொற்களையும், குறிப்புகளையும் கொண்டு புதிய சொல் உருவாக்குக.

1. விடுகதை – மரத்திற்கு ஆதாரம் விதை
2. திருநெல்வேலி – பயிர்களைப் பாதுகாக்கும் ______
3. நகர்ப்புறம் – விரலின் மணிமகுடம் ______
4. இமயமலை – உண்கலம் ______
5. உருண்டை – நமது அடிப்படைத் தேவைகளுள் ஒன்று ______

3. சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.

1. மதிவாணன் பலம் மிக்கவன்

   காற்றடித்ததால் மரத்திலிருந்து பழம் விழுந்தது. (பழம்)

2. இந்த மரம் உயரமாக உள்ளது.

   ______________________ (மறம்)

3. நிலா தன் கையில் வளை அணிந்திருந்தாள்.

   ______________________ (வலை)

4. சூரியனில் இருந்து ஒளி கிடைக்கிறது.

   ______________________ (ஒலி)

5. பரிமளா கடையில் வெல்லம் வாங்கினார்.

   ______________________ (வெள்ளம்)

4. கீழ்க்காணும் குறுக்கெழுத்துப் புதிரில் உள்ள வினாக்களுக்குச் சிந்தித்துச் சரியான விடையைக் கண்டுபிடிக்க.

ணி	ர	த	அ	சை	வ	லூ
ட்	லை	ழெ	மை	இ	ல்	க
ஆ	ரா	ய்	ச்	சி	வி	வா
பு	ம்	க	ச	ன்	ல்	து
சி	ன்	கௌ	ர்	சி	ஓ	மெ
ன்	த	ந்	வே	ப	ரி	வு

இடமிருந்து வலம்

1. அறிவியல் அறிஞர்கள் செய்வது ______________________
2. இரக்கம் என்ற சொல்லை இப்படியும் கூறலாம் ________________

வலமிருந்து இடம்

1. உலகின் மற்றொரு பெயர் ______________________
2. மக்களைக் காப்பவர் ________________
3. நவதானிய வகைகளுள் ஒன்று ______________

மேலிருந்து கீழ்

1. அரசரின் ஆலோசகர் _________________
2. கொல்லிமலை நாட்டின் அரசன் _________________

கீழிருந்து மேல்

1. இது வந்திட பத்தும் பறக்கும் ______________________
2. விரைந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் _________________
3. இதைக் கேட்டால் மனம் மயங்கும் ____________________

5. வரிசைமாறியுள்ள தொடர்களை நிகழ்வுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.

1) மூதாட்டி ஒருவர் மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

2) ஊர்த்தலைவர் நிருவாகி ஒருவரை நியமிக்க எண்ணினார்.

3) ஊர்த்தலைவரின் முடிவை மக்கள் மகிழ்ந்து ஏற்றனர்.

4) பாலன், பூவண்ணன் இருவரும் நிருவாகி பதவிக்கு விருப்பம் தெரிவித்தனர்.

5) பூவண்ணனே நிருவாகியாகத் தகுதியானவர் என்றார் ஊர்த்தலைவர்.

நிற்க அதற்குத் தக

- நாட்டு உடைமைகளான பொதுச் சொத்துகளைப் பாதுகாப்பேன்.
- அனைவருடனும் ஒற்றுமையாக வாழ்வேன்.

அறிந்து கொள்வோம்

பிறநாட்டு நாணயங்களை அறிவோமா?

இந்தியா	–	ரூபாய்
அமெரிக்கா	–	டாலர்
இங்கிலாந்து	–	பவுண்டு
மலேசியா	–	ரிங்கிட்

செயல் திட்டம்

- நமது நாட்டுச் சின்னங்களின் படங்களைத் தொகுத்து அவற்றைப் பற்றி எழுதித் தொகுப்பேடு உருவாக்குக.
- கடையெழு வள்ளல்களைப் பற்றிச் செய்திகளைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.



குறிப்புச்சட்டகத்தைப் பயன்படுத்திச் சிறு சிறு கட்டுரை எழுதுதல்.

கட்டப்பட்ட உரையே கட்டுரை. குறிப்பிட்ட தலைப்பில் அமையும் செய்திகளைத் தொகுத்து, கட்டுரை எழுதுவதற்குமுன் நினைவில் கொள்ள வேண்டியவற்றை அறிந்துகொள்வோம்.

- கட்டுரை எழுதுவதற்குரிய தலைப்பு
- தலைப்பு சார்ந்த செய்திகளைத் திரட்டுதல்
- கட்டுரையை விளக்கும் குறிப்புச்சட்டகம் உருவாக்குதல்
- முன்னுரை, பொருளுரை, முடிவுரை என அமைதல்
- பொருளுரையில் சிறு சிறு உள்தலைப்புகள் இடுதல்
- பொருத்தமான பழமொழி, மேற்கோள், உவமை, சான்றோர் கூற்று, பாடல் பயன்படுத்துதல்
- சொற்களுக்கிடையே இடைவெளி, நிறுத்தக்குறிகள் பயன்படுத்துதல்
- சிறு சிறு பத்தியாகப் பிரித்தல், வரிசைப்படுத்துதல்
- கையெழுத்துத் தெளிவு, அழகு, சுருக்கமாக விளக்குதல்
- குறித்த அளவுக்குள் கட்டுரை எழுதுதல்

குறிப்புச் சட்டகம் என்பது, கட்டுரையில் இடம்பெறும் செய்திகளைச் சிறு சிறு தலைப்புகளில் விளக்குவதாகும். அந்தத் தலைப்புகளைக் கொண்டே, கட்டுரையை விரிவாக எழுதிட இயலும். கட்டுரையின் முழுப்பொருளையும் விளக்குவதாகக் குறிப்புச்சட்டகம் அமையும்.

கீழே மாதிரிக்காக ஒரு குறிப்புச்சட்டகம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, கட்டுரையை விரித்து எழுதும் முறையை அறிந்து கொள்க.

கல்வியின் சிறப்பு

குறிப்புச் சட்டகம்

முன்னுரை
கல்வியின் தேவை
கல்வியின் சிறப்பு
கல்வியால் உயர்ந்தவர்கள்
கல்வியால் விளையும் பயன்
முடிவுரை

இதுபோன்று, நீங்கள் எழுத விரும்பும் கட்டுரைக்குக் குறிப்புச் சட்டகம் உருவாக்கிக் கட்டுரை எழுத முயலுக.

இயல்
எட்டு

அறம்/தத்துவம்/
சிந்தனை

பாடல்

கற்றல் நோக்கங்கள்

- கல்வியின் இன்றியமையாமையை அறிந்துகொள்ளுதல்
- கல்வியறிவு பரந்துபட்ட விரிசிந்தனைக்கு வழிவகுக்கும் என்பதை உணர்தல்
- உலக உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல்
- நேர்மையாக வாழ்தலின் இன்றியமையாமையை உணர்ந்துகொள்ளுதல்
- மயங்கொலிச்சொற்களின் பயன்பாட்டை அறிந்து பயன்படுத்துதல்

C5L6XC

கல்வியே தெய்வம்

அன்னையும் தந்தையும் தெய்வம் – இதை
அறிந்திட வேண்டும் நீயும்
கண்ணெனும் கல்வியும் தெய்வம் – இதைக்
கருத்தினில் கொள்வாய் நீயும்
பொன்னையும் மண்ணையும் விஞ்சும் – அந்தப்
புகழும் நம்மைக் கொஞ்சும்
நன்மையும் மென்மையும் தோன்றும் – நல
நயமதும் நம்மை அண்டும்
கல்வியைக் கற்றிட வேண்டும் – அதைக்
கசடறக் கற்றிட வேண்டும்
வல்லமை பெற்றிட வேண்டும் – நல்
வளமதை எட்டிட வேண்டும்
கற்றிடக் கற்றிட யாவும் – நல்
கணக்கென நெஞ்சில் கூடும்
வெற்றிகள் ஆயிரம் சேரும் – புகழ்
வெளிச்சமும் மேனியில் ஊறும்
விண்ணையும் அளந்திட வைக்கும் – நம்மை
விடியலாய் எழுந்திட வைக்கும்
திண்மையும் வசப்பட வைக்கும் – மனதில்
தெளிவினைச் செழித்திட வைக்கும்

– பாரதிசுகுமாரன்

சொல்பொருள்

விஞ்சும்	–	மிகும்	அண்டும்	–	நெருங்கும்
கசடற	–	குற்றம் நீங்க	ஊறும்	–	சுரக்கும்
திண்மை	–	வலிமை	செழித்திட	–	தழைத்திட

பாடல் பொருள்

இப்பாடல், கல்வி குறித்த விரிசிந்தனையைத் தருகிறது. அன்னை, தந்தை இவர்களுடன் நாம் கற்கும் கல்வியும் தெய்வமாகும். பொன்னையும் மண்ணையும்விட மேலானது கல்வி. நமக்குப் புகழையும் தந்து நிற்கும். கல்வி கற்றால், நன்மையும் மென்மையும் நல்லருளும் நம்மை நெருங்கிவரும். ஆகையால், கல்வியைக் குற்றம் நீங்க கற்றிட வேண்டும். ஆற்றலையும் நல்ல வளத்தையும் நாம் பெறவேண்டும். நாள்தோறும் கற்றிட, கற்பவை யாவும் மனக்கணக்கைப்போல் நெஞ்சில் பதியும். வெற்றி கிட்டும். புகழ் தோன்றும். விண்ணையும் அளக்கச் செய்யும். நம்மை விடியலாய் எழச் செய்யும். நம்மிடம் வலிமையையும் சேர்க்கும். மனத்தினில் தெளிந்த நல்லறிவை வளரச்செய்யும்.

கற்பவை கற்றபின்

- பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க
- கல்வியின் சிறப்பை உம் சொந்த நடையில் கூறுக.
- கல்வியின் சிறப்பை உணர்த்தும் வேறு பாடல்களை அறிந்து வந்து பாடுக.
- கல்வியினால் மேன்மை அடைந்தவர்களைப் பற்றிக் கலந்துரையாடுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

MCDHIK

1. **கசடற**– இச்சொல்லின் பொருள் ....

அ) தவறான ஆ) குற்றம் நீங்க

இ) குற்றமுடன் ஈ) தெளிவின்றி

2. **வளமதை**– இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

அ) வள + மதை ஆ) வளமை + அதை

இ) வளம் + அதை ஈ) வளம் + மதை

3. வெளிச்சம்– இச்சொல்லின் எதிர்ச்சொல் ....

அ) இருட்டு ஆ) வெளிப்படையான

இ) வெளியில் ஈ) பகல்

ஆ. ஒன்றுபோல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக.

முதலெழுத்து	இரண்டாமெழுத்து
அன்னையும்	நன்மையும்
______________	______________
______________	______________
______________	______________
______________	______________

இ. எதிர்ச்சொல் எழுதுக.

1. நன்மை X --------
2. புகழ் X --------
3. வெற்றி X --------
4. வெளிச்சம் X --------
5. தோன்றும் X --------

ஈ. "உம்" என முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

1. அன்னையும் தந்தையும்

____

____

____

____

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பொன்னையும் மண்ணையும்விடச் சிறந்தது எது?
2. கல்வியை எவ்வாறு கற்கவேண்டும்?

ஊ. சிந்தனை வினா

கல்வியோடு நற்பண்புகளும் அமைவதுதான் சிறப்பு என்று கூறுகிறார்களே, இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

இயல் எட்டு

உரைநடை

நீதியை நிலைநாட்டிய சிலம்பு

முன்கதை சுருக்கம்

பொருளீட்டுவதற்காக மதுரை நகருக்குக் கண்ணகியுடன் வருகிறான் கோவலன். அங்கு அவன் செய்யாத குற்றத்துக்காக, மரணதண்டனை பெறுகிறான். ஆராயாமல் தீர்ப்பு அளித்ததாக அரசன் மீது குற்றம் சாட்டும் கண்ணகி, தன் காற்சிலம்பைக் கொண்டு, தன் கணவன் கள்வனல்லன் என்பதை உணர்த்துகிறாள். அரசனுக்கும் கண்ணகிக்கும் நடக்கும் உரையாடலே இங்குப் பாடமாக அமைந்துள்ளது.

QR2JQV

வாயிற்காப்போன் அரசே! அரசே! நம் அரண்மனை வாயிலின்முன், அழுத கண்களோடும் தலைவிரி கோலத்துடனும் ஒரு பெண் வந்து நிற்கிறாள்.

பாண்டிய மன்னர் அப்படியா? அந்தப் பெண்ணிற்கு என்ன துயரமோ? கேட்டாயா?

வாயிற்காப்போன் கேட்டேன், மன்னவா! அதைப்பற்றி உங்களிடம்தான் கூறவேண்டும் என்று சொல்கிறாள். அவள் உங்களிடம் நீதி கேட்டு வந்திருப்பதாகக் கூறுகிறாள்.

பாண்டிய மன்னர் நீதி கேட்டு வந்திருக்கிறாளா? சரி, அந்தப் பெண்ணை உள்ளே அனுப்பு.

(ஆன்றோர்களும் சான்றோர்களும் நிறைந்திருக்கும் அவையிலே நடுநாயகமாய் மன்னர் வீற்றிருக்க, அரசவைக்குள் நுழைகிறாள், கண்ணகி.)

பாண்டிய மன்னர் இளங்கொடி போன்ற பெண்ணே! அழுத கண்களுடன் எம்மைக் காண வந்ததன் காரணம் என்ன? நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?

கண்ணகி ஆராயாது நீதி வழங்கிய மன்னனே! என்னையா யாரென்று கேட்கிறாய்? சொல்கிறேன், கேள். உலகம் வியக்கும் வண்ணம் ஒரு புறாவுக்காக தன் உடலையே தந்த சிபி மன்னனைப் பற்றி நீ அறிவாயா? பார் போற்றும் பசுவை மக்கள் தெய்வமென வணங்க, அதன் கன்றைத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற தன் மகனையும் அதே தேர்க்காலிலிட்டுக் கொன்றானே மனுநீதிச் சோழன், அவனைப் பற்றியும் அறிவாயா?

பாண்டிய மன்னர்	பெண்ணே, நான் கேட்ட வினாவுக்கு இன்னும் நீ விடை கூறவில்லை. அதைவிட்டுவிட்டு.... நீ வேறு எதையெதையோ கூறிக்கொண்டிருக்கிறாய்.
கண்ணகி	இழப்பின் அருமை தெரியாத மன்னனே! என் நிலை அறியாமல்தானே இப்படிப் பேசுகிறாய். நான் இதுவரை கூறிய பெருமைமிக்க சோழ மன்னர்கள் வாழ்ந்த புகார் நகரமே எனது ஊர். அவ்வூரில் பழியில்லாச் சிறப்பினையுடைய புகழ்மிக்க மாசாத்துவான் மகனாகிய கோவலன் என்பானின் மனைவி நான்.
பாண்டிய மன்னர்	ஓ! இப்போது புரிகிறது. அந்தக் கோவலனின் மனைவியா நீ?
கண்ணகி	போதும் மன்னா, என் கணவனை இகழ்வதற்கு உனக்கு என்ன தகுதி இருக்கிறது? ஊழ்வினைப் பயனால், உன் ஊருக்கு வந்து, என் கால்சிலம்பை விற்க வந்த என் கணவனை அநியாயமாகக் கொன்றுவிட்டாயே, நீ செய்தது தகுமா?
பாண்டிய மன்னர்	பெண்ணே, போதும் நிறுத்து. கள்வனைக் கொல்வது கொடுங்கோலன்று அஃது ஏற்புடையதே. அஃது அறநெறியும் ஆகும். இதை அனைவருமே அறிவார்களே, உனக்குத் தெரியாதா, என்ன?

கண்ணகி அறநெறி தவறிய மன்னனே! தவறிழைத்தவர்களைத் தண்டித்தல் தகுதியுடைய மன்னனுக்கு உரியது என்பதை நானும் அறிவேன். ஆனால், நீ கூறுவதுபோல, என் கணவன் கள்வனல்லன்; அவனிடம் இருந்த சிலம்பும் அரசிக்குரிய சிலம்பன்று; அதன் இணைச் சிலம்பு இதோ, என்னிடம் உள்ளது. என் கால்சிலம்பின் பரல் மாணிக்கக் கற்களால் ஆனது.

பாண்டிய மன்னர் பெண்ணே, நீ சொல்வது உண்மைதானா? உண்மையாயின் அரசிக்குரிய சிலம்பின் பரல் முத்துகளால் ஆனது. ஆன்றோர் நிறைந்த இந்த அவைதனிலே அனைவருக்கும் உண்மையை உணர்த்துகிறேன். யாரங்கே, கோவலனிடமிருந்து பெற்ற அச்சிலம்பை இங்குக் கொண்டு வா!

(சிலம்பைப் பெற்ற மன்னர், அதைக் கண்ணகியிடம் கொடுக்கிறார்)

பாண்டிய மன்னர் பெண்ணே! இதோ, உன் கணவனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பு

(கண்ணகி, அச்சிலம்பைக் கையில் எடுக்கிறாள்.)

கண்ணகி நீதி தவறாதவன் என்று உன்னைக் கூறிக்கொள்ளும் மன்னனே, ஒரு தவறும் செய்யாத என் கணவனைக் கொன்றது, உன் அறநெறிக்கு இழுக்கு என்று இதோ மெய்ப்பிக்கிறேன். இங்கே பார்.

(கண்ணகி, சிலம்பை எடுத்துத் தரையில்போட்டு உடைக்கின்றாள். அதிலிருந்து மாணிக்கக் கல் ஒன்று, அரசனின் முகத்தில்பட்டுத் தெறித்து விழுகிறது.)

பாண்டிய மன்னர்: ஆ! தவறிழைத்துவிட்டேனே! பிறர் சொல் கேட்டுப் பெரும்பிழை செய்தேனே! யானோ அரசன், யானே கள்வன். இதுவரை என் குலத்தில்எவரும்செய்யாதபழிச்சொல்லுக்குஆளாகிவிட்டேனே! இனிமேலும் யான் உயிரோடு இருத்தல் தகுமா? இனி எனக்கு வெண்கொற்றக் குடை எதற்கு? செங்கோல்தான் எதற்கு? என் வாழ்நாள் இன்றோடு முடிவதாக!

பாண்டிய மன்னர், தாம் தவறாக வழங்கிய தீர்ப்பால் உண்டான பழிச்சொல்லுக்கு அஞ்சி, அரியணையிலிருந்து தரைமீது வீழ்ந்து, இறந்துபடுகிறார்.

கற்பவை கற்றபின்

- பாடத்தில் உள்ள உரையாடலை நாடகமாக நடித்துக்காட்டுக.
- நீதிநெறி தொடர்புள்ள கதை அல்லது உண்மை நிகழ்வுகள் பற்றிய செய்திகளைக் கூறி, வகுப்பறையில் கலந்துரையாடுக.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. புறாவிற்காகத் தன் உடலையே தந்த மன்னன் _______________
   அ) மனுநீதிச்சோழன் ஆ) பாண்டியன்
   இ) சிபி மன்னன் ஈ) அதியமான்

FJA95M

2. கண்ணகியின் சிலம்பு _______________ ஆல் ஆனது
   அ) முத்து ஆ) மாணிக்கம்
   இ) பவளம் ஈ) மரகதம்

3. அறநெறி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______________
   அ) அறி + நெறி ஆ) அற + நெறி
   இ) அறம் + நெறி ஈ) அறு + நெறி

4. கால் + சிலம்பு – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _______________
   அ) காற்சிலம்பு ஆ) கால்ச்சிலம்பு
   இ) கற்சிலம்பு ஈ) கல்சிலம்பு

5. தண்டித்தல்–இச்சொல்லின் பொருள் _______________
   அ) புகழ்தல் ஆ) நடித்தல்
   இ) வழங்குதல் ஈ) ஒறுத்தல்

ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக

1. அ + ஊர் = _______________
2. தகுதி + உடைய = _______________

இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக

1. கள்வனல்லன் = ________ + ________
2. செங்கோல் = ________ + ________

ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது?
2. புகார் நகரின் சிறப்புகள் யாவை?
3. பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடை வீழக்காரணமென்ன?

உ. சிந்தனை வினாக்கள்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு – இந்தக் குறள் கருத்து யாருக்குப் பொருந்தும்? கண்ணகிக்கா? பாண்டிய மன்னருக்கா? சிந்தித்து விடை தருக.

துணைப்பாடம்

இயல் எட்டு

காணாமல் போன பணப்பை

ஓர் ஊரில் வணிகன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் தன்னிடமிருந்த ஆடுகளை விற்று, ஒரு பை நிறைய பணத்துடன் தன் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

திரும்பும்போது, அளவுக்குமிஞ்சிய கனவில் மிதந்துகொண்டே நடந்தான். "இந்தப் பணத்தைக் கொண்டு, மேலும் ஆடுகள் வாங்கி விற்றால், நிறைய லாபம் கிடைக்கும். நான் பெரும் பணக்காரன் ஆவேன்" எனக் கற்பனை செய்தான். அப்போது அவனையும் அறியாமல் தான் வைத்திருந்த பணப்பையை நழுவவிட்டான்.

வீட்டுக்கு வந்த பிறகுதான் பணப்பை காணாமல் போனதை உணர்ந்தான். அதை எண்ணி எண்ணி அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலாகிவிட்டது.

மறுநாள் அவன் தன் நாட்டுச் சிற்றரசனிடம் சென்று முறையிட்டான். 'அரசே! என் பணப்பையை வரும் வழியில் தொலைத்து விட்டேன். அதை எடுத்தவர்கள் திருப்பிக் கொடுத்தால் நாற்பது பணம் சன்மானமாகக் கொடுத்து விடுகிறேன். அருள் கூர்ந்து இதை ஊர் மக்களுக்கு அறிவிக்க வேண்டுகிறேன்" எனக் கேட்டுக் கொண்டான்.

அரசனும் அவ்வாறே முரசு அறைந்து நாட்டு மக்களுக்கு அறிவித்தான்.

மூன்று நாள் கழித்து, வயதான மூதாட்டி ஒருவர், தான் கண்டெடுத்த பணப்பையை சிற்றரசனிடம் ஒப்படைத்தாள். சிற்றரசன் அவளுடைய நேர்மையையும், நாணயத்தையும் கண்டு மெச்சி அவளுக்குத் தக்க வெகுமதி அளிக்கும்படி வியாபாரிக்கு ஆணையிட்டான்.

அதற்குள் அந்த வியாபாரி பணப்பையைப் பெற்றுக் கொண்டு, பணம் சரியாக இருக்கிறதா என எண்ணிப் பார்த்துக் கொண்டான். எல்லாம் சரியாக இருந்தது. பணப்பையைத் திருப்பிக் கொடுப்பவருக்குச் சன்மானம் அளிப்பதாக முன்பு கூறியிருந்தான். ஆனால், இப்போது அவன் மனம் சட்டென மாறியது. தான் சொன்ன சொல்லை அவன் நிறைவேற்ற விரும்பவில்லை.

எனவே, அவன் பையில் அதிகப் பணம் இருந்ததாகவும், இப்போது பணம் குறைகிறது என்றும் பொய் சொன்னான்.

இதை அறிந்துகொண்ட அரசன், சொன்னபடி வெகுமதி கொடுக்காததைக் கண்டு வெகுண்டான். அந்த வணிகனுக்கு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான், "வணிகனே, உன் பையில் இப்போது இருப்பதைக்காட்டிலும் அதிகமாகப் பணம் இருந்தது இல்லையா? எனவே, இது உன் பை இல்லை; வேறு யாருடையதோ தெரியவில்லை. பணத்திற்குச் சொந்தக்காரன் வந்து கேட்கும்வரை என்னிடமே இருக்கட்டும். நீ இவ்விடத்தைவிட்டுப் போகலாம்" என ஆணையிட்டான்.

அவன் சென்றபின், "பணத்தை வைத்திருப்பவன் மட்டுமே பணக்காரன் அல்லன்; சொன்ன சொல்லை மறவாது மற்றவர்க்குப் பெருந்தன்மையுடன் கொடுக்கும் உள்ளம் படைத்தவனே பணக்காரன்" என்று கூறிய அரசன், மூதாட்டியின் நேர்மையைப் பாராட்டிப் பணப்பையை அவருக்கே பரிசாகவும் கொடுத்துவிட்டான்.

கஞ்சத்தனமுடைய வணிகன் பணத்தை இழந்ததுடன் மற்றவர்களுடைய இகழ்ச்சிக்கும், கேலிப்பேச்சுக்கும் ஆளானான்.

நீதி : 'நேர்மை நன்மை தரும்'

கற்பவை கற்றபின்

- நேர்மையால் ஒருவர் உயர்வதாக ஒரு பக்க அளவில் கதை எழுதுக.
- 'காணாமல் போன பணப்பை' – இக்கதையை நாடகமாக நடித்துக்காட்டுக.
- 'காணாமல் போன பணப்பை' கதையை உரையாடல் வடிவில் எழுதுக.

மதிப்பீடு

வினாக்களுக்கு விடையளிக்க.

UJZKXU

1. பணப்பையைப் பெற்றுக் கொண்ட வணிகன் என்ன கூறினான்?
2. இக்கதையின் மூலம் நீ அறியும் நீதி என்ன?
3. இக்கதையில் நீ விரும்பிய கதைமாந்தர் யார்? அவரைப் பற்றி ஐந்து வரிகளில் எழுதுக.

சிந்தனை வினா

நீங்கள் அரசராக இருந்தால், இந்தச் சிக்கலுக்கு என்ன முடிவெடுப்பீர்கள்?

கற்கண்டு

மயங்கொலிச்சொற்கள்

மலர்: என்னப்பா, இது?

வளர்: நீதானே **தவளையைக்** கொண்டுவரச் சொன்னே?

மலர்: என்னது? நான் தண்ணீர் பிடிக்க **தவலை** கேட்டா, நீ தண்ணீரில் வாழும் **தவளையைக்** கொண்டு வந்திருக்கிறியே?

மலர்: பால் குக்கர்கிட்டே நின்னுக்கிட்டு எதுக்கு மேலே இருக்கிற விளக்கையே பார்த்துக்கிட்டு இருக்கே?

வளர்: அம்மாதான் சொன்னாங்க, குக்கரிலிருந்து **ஒளி** வந்தவுடனே அடுப்பை அணைக்கணும்னு, அதான் எப்ப விளக்கிலிருந்து **ஒளி** வரும்னு பார்த்துக்கிட்டு இருக்கேன்.

மலர்: அட, குக்கரிலிருந்து **ஒலி** (விசில் சத்தம்) தான் வரும். **ஒளி** வருமா என்ன ?

மலர்: என்னப்பா இது, வெறுங்கைய வீசிக்கிட்டு வர்றே? நான் கேட்டது எங்கே?

வளர்: ஏன்? இப்ப என்னாச்சு? நீ கேட்டதைத்தான் நான் கையிலேயே போட்டிருக்கிறேனே!

மலர்: அட, நான் மீன் பிடிக்க **வலையைச்** சொன்னா நீ கையில போடற **வளையைச்** சொல்றியே?

மலர்: என்னப்பா, எப்பவும் இந்தக் கரையிலதான் உட்கார்ந்து படிப்பே, இப்ப அந்தக் கரையிலபோய் உட்கார்ந்திருக்கிறியே!

வளர்: அம்மாதான் சொன்னாங்க, **அக்கரையிலே** படிச்சா நல்லா முன்னுக்கு வரலாம்னு.

மலர்: அட, அம்மா சொன்னது **அக்கரையில்லே, அக்கறை**. அதாவது கவனமாப் படிக்கணும்னுதான் சொல்லியிருப்பாங்க. அதைப்போய் நீ ?

மலர்: என்னப்பா, இங்கே நின்னுக்கிட்டுப் **பனை**மரத்தையே பார்த்துக்கிட்டு இருக்கே?

வளர்: அப்பாதான் **பனையை** எடுத்துட்டு வா, வேலி கட்டணும்னு சொன்னாங்க அதான், இவ்வளவு உயரமா இருக்கே இதை எப்படி எடுத்துட்டுப் போறதுன்னு பார்த்துக்கிட்டு இருக்கேன்

மலர்: அடப் போப்பா, எப்பப் பார்த்தாலும் தப்புத் தப்பாவே புரிஞ்சுக்கிற, அப்பா சொன்னது **பணை**. அதாவது, மூங்கில். மற்றவங்க பேசுற பேச்சில வர்ற சொற்களோட ஒலிப்பை நீ கவனமாக் கேட்கணும். அதே சொல்லை நீயும் சரியாக ஒலித்துப் பழகணும் அப்பத்தான் இந்த மாதிரி தவறெல்லாம் ஏற்படாது, சரியா?

மேற்கண்ட உரையாடல்களைப் படித்தீர்களா? இவை, படித்துச் சிரிப்பதற்கு மட்டுமல்ல; சிந்திப்பதற்கும்தான். நாம் பேசும்போதும் எழுதும்போதும் ஏற்படுகின்ற ஒலிப்புப் பிழைகள்தாம் இவை. இதனால், நாம் பொருளைப் புரிந்துகொள்வதில் குழப்பம் ஏற்படும். இதனைத் தவிர்க்க, நாம் தெளிவாகவும் சரியாகவும் ஒலித்துப் பழகவேண்டும். நமக்கு மயக்கம்தரக்கூடிய எழுத்துகளை அறிந்துகொள்வோம்.

மயங்கொலி எழுத்துகள்

- ணநன
- ரற
- லழள

இந்த எழுத்துகளைத் திரும்பத் திரும்ப நன்கு ஒலித்துப் பழக வேண்டும். இவ்வெழுத்துகள் இடம்பெற்றுள்ள சொற்களின் பொருள் வேறுபாடு உணரவேண்டும். அப்போதுதான் பிழையைத் தவிர்க்க முடியும். இந்த எழுத்துகளை ஒலிக்கும்போது, அவை எப்படிப் பிறக்கின்றன என்பதுபற்றி மேல்வகுப்பில் விரிவாகப் படிப்பீர்கள்.

கற்பவை கற்றபின்

- மயங்கொலி எழுத்துகள் இடம்பெறும் சொற்களை அடையாளம் காண்க.
- மயங்கொலிச் சொற்களின் பொருள் வேறுபாடு அறிக.
- மயங்கொலி எழுத்துகள் கொண்ட சொற்களை முறையாக ஒலித்தும் எழுதியும் பழகுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. சாலையில் பள்ளம் இருந்ததால், ---------- பேருந்தை மெதுவாக ஓட்டிச்சென்றார்.

   அ) ஓட்டுநர் ஆ) ஓட்டுனர் இ) ஓட்டுணர்

2. கடவூருக்குச் செல்ல எந்த ----------ப்போக வேண்டும்?

   அ) வலியாக ஆ) வளியாக இ) வழியாக

3. கூண்டிலிருந்த ----------யைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டான் எழிலன்.

அ) கிலி ஆ) கிளி இ) கிழி

4. நீரில் துள்ளி விளையாடுகிறது ---------- மீன்

அ) வாளை ஆ) வாலை இ) வாழை

5. தாய்ப்பசு இல்லாமையால் நாளடைவில் கன்று ---------ப்போனது.

அ) இழைத்து ஆ) இளைத்து இ) இலைத்து

6. கடல்--------யில் கால் நனைத்து மகிழ்வது அனைவருக்குமே பிடிக்கும்.

அ) அளை ஆ) அழை இ) அலை

ஆ. பொருத்தமான சொல்லை நிரப்பித் தொடர்களைப் படித்துக்காட்டுக.

1. நடனம் என்பது, ஒரு ------------------ (களை/ கலை/ கழை)
2. சோளம் என்பது, ஒரு ----------------- (தினை/ திணை)
3. பெட்ரோல் என்பது, ஓர்---------------- (எரிபொருள்/ எறிபொருள்)
4. ஒட்டகம் என்பது ஒரு ----------------- (விளங்கு/ விலங்கு)
5. தென்னை என்பது, ஒரு --------------- (மறம்/ மரம்)

இ. வண்ண எழுத்துகளில் உள்ள சொற்களைச் சரியான ஒலிப்புடன் படித்துக்காட்டுக.

முல்லை: நிலா, நீ வரைந்த படம் மிகவும் அழகாக உள்ளது. வெண் பஞ்சு போன்ற மேகங்கள் சூழ்ந்த மலை; அம்மலையினின்று வீழும் பாலாவி போன்ற அருவி; பசுமை மிகுந்த மரம், செடி, கொடிகள்; துள்ளித் திரியும் புள்ளி மான்கள்; சிறகடிக்கும் வண்ணப் பறவைகள்; மரக்கிளைகளில் ஊஞ்சலாடும் குரங்குக் குட்டிகள் அப்பப்பா! நீ எப்படி இவ்வாறு வரையக் கற்றுக் கொண்டாய்?

நிலா: இதிலென்ன புதுமை? முந்தைய வகுப்புத் தமிழ்ப் பாடநூல்களில் வரைந்து பார்ப்போமா என்றொரு பயிற்சி இருந்ததே. நினைவிருக்கிறதா? அந்தப் பயிற்சிகளை நான் மிகவும் ஆர்வத்துடன் செய்வேன். அதனால்தான் இப்போது நன்றாக வரைகிறேன் என்று நினைக்கிறேன்.

ஈ. விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை எழுதுக.

எ.கா.	மடியைக் குறிப்பது	குறங்கு	மரத்தில் தாவுவது	குரங்கு
1.	ஆற்றின் ஓரம்	----------.	ஆடையில் இருப்பது	----------.
2.	பரந்து இருப்பது	----------.	பறந்து செல்வது	----------.
3.	மரத்தை அறுப்பது	----------.	மனிதர் செய்வது	----------.
4.	சுவரில் அடிப்பது	----------.	மாதத்தில் ஒன்று	----------.

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- இனிய, எளிய, ஓசைநயம் மிக்க பாடல்களைக் கேட்டு மகிழ்க.
- திருவிழாக்களில் நடத்தப்படும் மேடை நாடகங்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்க.

ஆ. பேசுதல்

- 'சிலம்பின் வெற்றி' என்னும் தலைப்பில் பேசுவதற்கு ஏற்ற உரை தயாரிக்க.
- சிலப்பதிகார வழக்குரை நிகழ்ச்சியில் வரும் கண்ணகிபோல் பேசிக்காட்டுக.

இ. படித்தல்

- பேராசையால் பேரிழப்பு ஏற்படும் என்னும் தலைப்பில், கதை எழுதி அதனை வகுப்பில் படித்துக்காட்டுக.
- புத்தகப் பூங்கொத்திலிருந்து அறமுணர்த்தும் கதையொன்றைப் படித்துக்காட்டுக.

ஈ. எழுதுதல்

1 சொல்லக்கேட்டு எழுதுக.

1. அன்னையும் தந்தையும் தெய்வம்
2. கல்வியைக் கசடறக் கற்றிட வேண்டும்
3. தவறிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும்

2 சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. ஆயிரம் ______________________
2. உண்மை ______________________
3. புகார் நகரம் ______________________
4. ஆடுகள் ______________________

3. கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

கல்வி கண் போன்றது

நீதி தவறாதவன் அரசன்

சிலம்பின் பரல் முத்துகளால் ஆனது

ஏழைக்கிழவி பணப்பையுடன் வந்தாள்

தீங்கு செய்தால் தீமை விளையும்

1. தீங்கு செய்தால் என்ன நேரிடும்?

2. சிலம்பின் பரல் எவற்றால் ஆனது?

3. கல்வி எதனைப் போன்றது?

4. நீதி தவறாதவன் யார்?

5. பணப்பையுடன் வந்தது யார்?

4. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

புறநானூறு என்னும் நூலில் அறப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அரசன் ஒருவன் மற்றொரு நாட்டு அரசன்மீது போர் தொடுக்கும் முன்பு, பசுக்களையும், அறவோரையும், பெண்களையும், பிணியாளர்களையும் போர் நிகழும் இடத்தைவிட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும். இந்த அறப்போர் முறை முதுகுடுமிப் பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகிறார் மேலும், படையெடுத்து வரும் பகைவன் மீது, மறைந்துநின்று, அம்பு எய்தும் நிலையங்கள் 'ஞாயில்கள்' என்று அழைக்கப்பட்டன.

வினாக்கள்

1. உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் யாது?

   ____

2. நெட்டிமையாரால் பாராட்டப்படும் அரசர் யார்?

   ____

3. 'ஞாயில்கள்' என்றால் என்ன?

   ____

4. பகைவன் – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

   ____

5. 'பிணி' என்பதன் பொருள்

   ____

5. பொருத்தமான சொற்களால் பாடலை நிறைவு செய்க

(சொல்லி, மீனவன், கடலிலே, பார்த்ததே, வலையில், விட்டதே, செய்ததே)

துள்ளிக் குதிக்கும் மீன் ________________

வெள்ளியை வானத்தில் ________________

________________ வலை போட்டானே

________________ சிக்கிய மீனுமே

வெளியேற முயற்சி ________________

நண்டு நண்பன் வந்ததே

வலையை வெட்டி ________________

மீன் நன்றி ________________ சென்றதே

மொழியோடு விளையாடு

1. பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

2. ஒரு சொல்லில் இரு தொடரை உருவாக்குவோம்.

1) திங்கள் வாரத்தின் இரண்டாம் நாள் — **திங்கள்**

____

2) ஞாயிறு கிழக்கே உதிக்கும் — **ஞாயிறு**

____

3. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் எழுதுக.

1. கல்விக் கண் திறந்தவர் போற்றப்படுகிறார் எனக் காமராசர்

   கல்விக்கண் திறந்தவர் எனக் காமராசர் போற்றப்படுகிறார்.

2. கற்றிட வேண்டும் கல்வியைக் கசடறக்

   ____

3. மனுநீதிச் சோழன் மன்னர் சோழமன்னர்களுள் புகழ்வாய்ந்த

   ____

4. காற்சிலம்பு உடையது கண்ணகியின் மாணிக்கப்பரல்கள்

   ____

5. தந்தையும் தெய்வம் அன்னையும்

   ____

4. சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்கலாமா?

நெய்தல் வயது	நெல் வயல்	நெல் வயல்

கல்வி கண்	______________ ______________	______________

தலைவன் மீனவர்	______________ ______________	______________

மரகதம் பல்லாண்டு	______________ ______________	______________

பாண்டியர் மனைவி	______________ ______________	______________

நிற்க அதற்குத் தக

- கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று அறிந்துகொள்வேன்.

  எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
  எண்ணுவம் என்பது இழுக்கு

  என்ற குறளின் பொருளை நன்கு உணர்ந்து செயல்படுவேன்.
- உண்மை, உழைப்பு, நேர்மை போன்றவை நம் வாழ்வை மேம்படுத்தும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

அறிந்து கொள்வோம்

- உலகின் முதல் தத்துவ ஞானி சாக்ரடீஸ்.
- கணிதத் தத்துவத்தில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியவர் பிளாட்டோ.

செயல் திட்டம்

'பேராசை தீமை தரும்' என்ற தலைப்பில் குழு நாடகமாக நடிப்பதற்கு உரை எழுதி வருக.



கூட்டு விண்ணப்பம் எழுதுதல்

நூல் நிலையம்/ படிப்பகம் அமைக்க வேண்டி ஊர்ப்பொதுமக்களின் கூட்டு விண்ணப்பம் (மாதிரி)

அனுப்புநர்

ஊர்ப்பொது மக்கள்,
புலியூர் கிராமம்,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்

மாவட்ட நூலக அலுவலர்,
நீலகிரி மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: நூல் நிலையம்/ படிப்பகம் அமைக்க வேண்டி விண்ணப்பித்தல் – சார்பு.

வணக்கம். நீலகிரி மாவட்டம், புலியூர் கிராமத்தில் மூவாயிரம் மக்கள் வாழ்கின்றனர். பெரும்பாலானோர் எழுத்தறிவு உடையவர்கள். அதனால், தங்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்கு நூலகம் அல்லது படிப்பகம் வேண்டும் என விரும்புகிறார்கள். நூலகம் அமைப்பதற்குத் தேவையான இடமும் கிராமத்தில் உள்ளது. ஆகவே, அறிவை விரிவு செய்யும் நூலகத்தை எங்களுக்கு விரைவில் அமைத்துத் தர வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
ஊர்ப்பொது மக்கள்,
புலியூர் கிராமம், நீலகிரி.

செய்யுள்

இயல் ஒன்பது

மனிதம்/ஆளுமை

கற்றல் நோக்கங்கள்

- மனிதம்/ஆளுமை குறித்துப் புரிந்துகொள்ளுதல்
- மனிதநேயச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளுதல்
- உயிரிரக்கப் பண்பை மதித்துப் போற்றுதல்
- புதுவை வளர்த்த தமிழ் ஆளுமைகளை அறிந்துகொள்ளுதல்
- மரபுத்தொடர்களின் பொருள்களை அறிந்து பயன்படுத்துதல்

FYJ85B

அறநெறிச்சாரம்

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும் துன்பங்கள்
ஆய பொழுதாற்றும் ஆற்றலும்– காய்விடத்து
வேற்றுமை கொண்டுஆடா மெய்ம்மையும் இம்மூன்றும்
சாற்றுங்கால் சாலத் தலை

– முனைப்பாடியார்

சொல் பொருள்

காய்விடத்து	–	வெறுப்பவரிடத்து	சாற்றுங்கால்	–	கூறுமிடத்து
சால	–	மிகவும்	தலை	–	முதன்மை

பாடல் பொருள்

குற்றம் ஏற்படாமல் பேசுதல், துன்பங்கள் உண்டான போதும் மனம் தளராமலிருத்தல், தம்மை வெறுப்பவரிடத்தும் வேற்றுமை பாராட்டாத உண்மை நிலை ஆகிய இவை மூன்றும் மிக உயர்ந்த பண்புகளாகும்.

நூல் குறிப்பு

அறநெறிக் கருத்துகளைக் கொண்டு, வெண்பா வடிவில் இயற்றப்பெற்ற நூல், அறநெறிச்சாரம். இப்பாடல்கள் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலிய அழகுகளைப் பெற்று விளங்குகின்றன. இந்நூலை எழுதியவர், முனைப்பாடியார்.

கற்பவை கற்றபின்

- சொற்குற்றத்தால் ஏற்படும் துன்பங்களைப் பிறர்க்கு எடுத்துக் கூறுக.
- பாடலின் பொருள் புரிந்து சரியான ஒலிப்புடன் படித்துக்காட்டுக.
- பாடலை அடிபிறழாமல் எழுதுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக!

1. 'சொல்லாடல்' – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______________

அ) சொல் + லாடல்   ஆ) சொல + ஆடல்

இ) சொல் + ஆடல்   ஈ) சொல்லா + ஆடல்

2. 'பொழுதாற்றும்' – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______________

அ) பொழு + தாற்றும்   ஆ) பொழுது + ஆற்றும்

இ) பொழு + ஆற்றும்   ஈ) பொழுது + தூற்றும்

3. வேற்றுமை – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் _______________

அ) பிரிவு   ஆ) வேறுபாடு

இ) பாகுபாடு   ஈ) ஒற்றுமை

ஆ. இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக

_____________   _____________

_____________   _____________

5RRWJ3

இ. எதிர்ச்சொல் எழுதுக.

1. துன்பம் X
2. மெய்ம்மை X

ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. நாம் பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய பண்பு யாது?
2. மிக உயர்ந்த பண்புகளாக அறநெறிச்சாரம் குறிப்பிடுவதை எழுதுக.

உ. சிந்தனை வினா

உன் நண்பர் உன்னை விட்டுப் புதிய நண்பர்களுடன் பழகுவதாகக் கருதுகிறாய். இந்நிலையில், அவருக்குச் சிறு துன்பம் ஏற்படுகிறது. இப்போது உன் நிலை என்ன?

1) அவர் என் நண்பர் இல்லை, அவருக்குத் துன்பம் வந்தால் நான் ஏன் கவலைப்படவேண்டும்?

2) அவருக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள். நான் ஏன் உதவவேண்டும்?

3) அவர் என்னை வெறுத்தாலும், அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும்.

இயல் ஒன்பது

உரைநடை

புதுவை வளர்த்த தமிழ்

யாழினியும் அவள் தந்தையும் புதுச்சேரியில் உள்ள பாரதிதாசன் அரங்கத்தைச் சுற்றிப் பார்க்கின்றனர். யாழினி, தன் தந்தையுடன் உரையாடிக் கொண்டே வருகிறாள்.

XYNN65

யாழினி அங்கிருந்த படத்தைச் சுட்டிக்காட்டி அப்பா, இவர் பாரதிதாசன் அல்லவா? எங்கள் பாடநூலில் இவருடைய படத்தைப் பார்த்திருக்கிறேன்.

அப்பா ஆமாம். சரியாகச் சொன்னாய், யாழினி! இவரைப் புரட்சிக்கவிஞர், பாவேந்தர் எனச் சிறப்பித்துக் கூறுவர். இவர், புதுவைக்குப் புகழ்சேர்த்த புதுமைக் கவிஞர். தமிழாசிரியராகப் பணிசெய்து, தமிழ் அறிஞர்கள் பலரை உருவாக்கிய பெருமைக்கு உரியவர்.

யாழினி அப்பா, இவருடைய இயற்பெயர் பாரதிதாசன் இல்லை, அவராக வைத்துக்கொண்ட பெயர் என்று எங்கள் ஆசிரியர்கூடக் கூறினாரே!

அப்பா ஆமாம், யாழினி. ஆசிரியர் கூறுவதை நீ நன்கு உற்றுக் கவனித்திருக்கிறாய். பாராட்டுகள். பாரதிதாசனுக்கு அவர் பெற்றோர் இட்ட பெயர் கனகசுப்புரத்தினம். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் கொண்டிருந்தார். பாரதியார்முன் 'எங்கெங்கு காணினும் சக்தியடா!' என்ற பாடலைப் பாடிக்காட்டினார். பாரதியார் மீது அன்பும் பாசமும், பற்றும் உடையவர். அதனால்தான், தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றியமைத்துக்கொண்டார்.

யாழினி அருமை. அருமை. அப்பா, எனக்கோர் ஐயம். பாரதியார், புதுச்சேரியைச் சேர்ந்தவர் இல்லையா?

அப்பா இல்லையம்மா. பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தவர். ஆனால், விடுதலைப் போராட்டக் காலத்தில் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் புதுவையில் தங்கி இருந்துள்ளார். இங்கு இருக்கும்போதுதான் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகிய முப்பெருங் காவியங்களைப் படைத்தளித்தார். அவரைப் பெருமைப்படுத்தும் வகையில், அவர் கவிதை எழுதுவதுபோன்ற சிலையை இங்கு வைத்திருக்கிறார்கள்.

யாழினி இப்போது புரிந்துகொண்டேன். பாரதிதாசனுக்குப் புரட்சிக்கவி என்ற பட்டம் வழங்கியதாகக் கூறினீர்களே? அவருக்கு யார் கொடுத்தார்கள், அப்பா?

அப்பா தந்தை பெரியார்தாம் 'புரட்சிக்கவி' என்ற பட்டத்தைப் பாரதிதாசனுக்குக் கொடுத்தார். தமிழின் சிறப்பை, பொதுவுடைமையை, பெண்ணின் பெருமையைப் பாடியவர் பாரதிதாசன்.

யாழினி அப்பா, பாரதிதாசனின் பாடலொன்றைச் சொல்லுங்களேன்.

அப்பா சொல்கிறேன், யாழினி. "தமிழுக்கும் அமுதென்று பேர்... அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடித் தமிழ்மீது தாம் கொண்டிருக்கும் பற்றை வெளிப்படுத்தினார். அதுமட்டுமன்று, இயற்கை, பெண்விடுதலை போன்ற பல கருத்துகளை முன்வைத்து நிறைய பாடல்களைப் பாடியுள்ளார். அவருடைய பாடல்களைப் பாரதிதாசன் கவிதைகள் என்னும் பெயரில் வெளியிட்டுள்ளனர்.

யாழினி அப்பா, இங்கே பாருங்களேன். இந்தப் புத்தகத்தின் பெயர் 'இருண்ட வீடு' என்றிருக்கிறது.

அப்பா இந்தப் புத்தகம்கூடப் பாரதிதாசன் எழுதியதுதான். 'குடும்பவிளக்கு' என்னும் நூலில் கல்வியின் உயர்வைச் சொன்னவர், இருண்ட வீட்டில் கல்லாமையின் இழிவைக் கூறுகிறார்.

யாழினி அப்பா, இங்கே பல நூல்களில் அவர் பெயர் இருக்கிறதே!

அப்பா ஆமாம் யாழினி. அத்தனையும் பாவேந்தர் பாடியதுதாம். அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, தமிழியக்கம், குறிஞ்சித்திட்டு, புரட்சிக்கவி, இசையமுது..... என 72 நூல்களுக்கு மேல் பாடி, தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். பாரதிதாசன்.

யாழினி அப்பா, அங்கே பாருங்கள். பக்கத்து வீட்டு பூங்குழலி!

அப்பா அடடே, வாம்மா, பூங்குழலி. எங்கே இந்தப்பக்கம்?

பூங்குழலி வணக்கம் மாமா. பள்ளி நாடகத்தில் நடிப்பதற்காகப் பாரதிதாசனின் 'பிசிராந்தையார்' நூலைத் தேடிப் படிக்க வந்தேன்.

யாழினி அப்பா, பாரதிதாசன் நாடகங்கள்கூட எழுதி இருக்கிறாரா?

அப்பா ஆம். 33 நாடகங்களுக்குமேல் எழுதியுள்ளார். பூங்குழலி வாசிக்க விரும்பும் 'பிசிராந்தையார்' நாடக நூல் "சாகித்திய அகாதெமி" விருது பெற்றுள்ளது.

யாழினி முத்தமிழிலும் வல்ல நம் பாவேந்தரின் நூல்களை இனிமேல் நானும் படிக்கப் போகிறேன், அப்பா.

அப்பா புதுவை தந்த பாவேந்தர் பாரதிதாசன் பெயரால், தமிழக அரசு ஆண்டுதோறும் சிறந்த தமிழறிஞர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பு செய்கிறது.

யாழினி மகிழ்ச்சியாக இருக்கிறது. இவர் மட்டுமின்றி, வேறு யாரேனும் தமிழ்ச் சான்றோர்கள் புதுவையில் உள்ளனரா, அப்பா?

அப்பா பலர் இருக்கின்றனர். அவர்களுள் வாணிதாசன், புதுவை சிவம், தமிழ்ஒளி, பிரபஞ்சன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்..

பூங்குழலி வாணிதாசனைப்பற்றிச் சொல்லுங்கள் மாமா.

அப்பா தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகள் அறிந்தவர் வாணிதாசன். ரமி என்று புனைபெயரில் எழுதிய இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் எத்திராசலு என்கின்ற அரங்கசாமி.

யாழினி அவரின் படைப்புகளைப் பற்றிக் கூறுங்கள் அப்பா.

அப்பா பாரதிதாசன் நடத்திய தமிழ் வகுப்பில் அவரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள் கவிஞர் வாணிதாசனும், புதுவை சிவமும் ஆவர். பாரதியாரின் பிறந்த நாள் அன்று, "பாரதிநாள் இன்றடா பாட்டிசைத்து ஆடடா" என்று வாணிதாசன் பாடிய பாடல், அவருக்கு முதற்பரிசைப் பெற்றுத் தந்தது.

பூங்குழலி அப்படியென்றால், வாணிதாசனுக்கும் புதுவை சிவத்திற்கும் கவிதை எழுதக் கற்றுத் தந்தவர் பாரதிதாசனா மாமா?



அப்பா ஆமாம். யாப்பு இலக்கணம் பயின்றதோடு, புலவர் தேர்வு எழுதியும் இருவரும் தேர்ச்சி பெற்றனர். பாவேந்தரின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்ட இருவருமே பல்வேறு நூல்களை எழுதியுள்ளனர். வாணிதாசனின் 'கொடி முல்லை' என்னும் நூல் சிறப்பு பெற்றது.

யாழினி புதுச்சேரி அரசு இவர்களைப் பெருமைப்படுத்தியுள்ளதா, அப்பா?

அப்பா ஆமாம். புதுச்சேரி அரசு இவர்கள் இருவரின் நூற்றாண்டு விழாக்களையும் மிகச் சிறப்பாக நடத்தியது. மேலும், ஆண்டுதோறும் பிறந்தநாள் விழாக்களையும் நடத்தி வருகிறது. தமிழக அரசு, பாவேந்தர் விருதினை இவர்கள் இருவருக்கும் வழங்கிச் சிறப்பித்தது.



யாழினி அப்பா, தமிழ்ஒளியைப் பற்றிச் சொல்லுங்களேன்.

அப்பா ஓ! சொல்கிறேனே. "சீறி அடித்துச் சுழன்ற அலைகளில் சிக்கிய ஒரு படகாய் தடுமாறி இளைத்து மடிந்த மகாகவி தன்சரிதம் உரைப்பேன்" என்று பாரதியாரைப் பற்றிப் பாடியவர், கவிஞர் தமிழ்ஒளி.

யாழினி இவரின் இயற்பெயரே தமிழ்ஒளியா, அப்பா?

அப்பா இல்லையில்லை. இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர், விஜயரங்கம். இவரும் பாரதிதாசனின் மாணவர்தாம். தமிழ்ஒளி என்னும் பெயரில் இவர், தம்மைக் கவிஞராக அறிமுகப்படுத்திக் கொண்டார்.

யாழினி இவரது படைப்புகள் பற்றிச் சொல்லுங்கள், அப்பா.

அப்பா மாணவப் பருவத்திலேயே இவரது தமிழ்ப்பணி தொடங்கிற்று எனலாம். இவரது முற்போக்கான கருத்துகள், பாடலில் எதிரொலித்தன. கல்லூரிக் காலத்தில், 'சிற்பியின் கனவு' என்னும் மேடை நாடகத்தைப் படைத்துள்ளார். இந்த நாடகம்தான் பின்னாளில் 'வணங்காமுடி' என்னும் பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்டது. இதில் நடித்தவர், நடிகர் திலகம் சிவாஜிகணேசன்.

யாழினி வேறு என்னென்ன நூல்களை எழுதியுள்ளார், அப்பா?

அப்பா வீராயி, கவிஞனின் காதல், நிலைபெற்ற சிலை என்னும் குறுங்காவியங்களைப் படைத்துள்ளார். இந்நூல்களைப் பற்றிய திறனாய்வு, சென்னை வானொலியிலும் திருச்சி வானொலியிலும் ஒளிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமின்றிக் கவிதைத் தொகுப்புகள், குழந்தைப் பாடல்கள், ஆய்வு நூல்கள், கதைகள், குறுநாவல்கள் முதலியவற்றையும் படைத்துள்ளார். இவரது 'விதியோ, வீணையோ' என்னும் காவியம், சிலப்பதிகாரத்திற்குப் பின் தோன்றிய இசை நாடகமாகக் கூறப்படுகிறது.

பூங்குழலி இவரது பாடல்கள் பாடநூல்களில்கூட இடம்பெற்றுள்ளதாக என் தந்தை கூறியுள்ளார், மாமா.

அப்பா ஆமாம், பூங்குழலி. இவரது 'முன்னும் –பின்னும்', 'அணுவின் ஆற்றல்' ஆகிய இரண்டு பாடல்கள்தாம் அவை. அவை மட்டுமல்ல, இவரது 'மாதவி காவியம்' என்னும் நூல், கல்லூரிப் பாடநூலாகவும் வைக்கப்பட்டது இவருக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

பூங்குழலி மாமா, இலக்கியங்கள் படைத்தவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இலக்கண நூல்கள் எழுதிய சான்றோர்களும் புதுவையில் இருந்தார்களா?

அப்பா ஓ! இருந்தார்களே! தமிழில் பிழையின்றி எழுதுவது குறித்த நூல்களைப் படைத்தவர், இலக்கணச் சுடர் இரா. திருமுருகன். இவர், தனித்தமிழ்ப் பற்றால் சுப்பிரமணியன் என்ற தம் பெயரைத் 'திருமுருகன்' என்று மாற்றி அமைத்துக் கொண்டார்.

பூங்குழலி உடற்கொடை ஈந்தாரே அவரா மாமா?

அப்பா ஆமாம். அவர்தாம். நூறு சொல்வதெழுதுதல், 17 தமிழ்ப்பாடநூல்கள், ஆய்வு நூல்கள், வரலாற்று நூல்கள், பாவலர் பண்ணை, என் தமிழ் இயக்கம் போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். இவரும் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ம. லெனின் தங்கப்பாவும் இணைந்து நடத்திய 'தெளிதமிழ்' இதழ் இன்றும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

யாழினி அப்பா கேட்கவே மகிழ்வாக இருக்கிறது.

பூங்குழலி மாமா, அண்மையில் மறைந்த எழுத்தாளர் பிரபஞ்சனும் புதுவையில் தோன்றியவர் என்று கேள்விப்பட்டேன், உண்மையா?



அப்பா ஆமாம். இவரும் புதுவைக்காரர்தாம். இவர், தம் எழுத்தால் தாய்நாட்டைப் போற்றச் செய்தவர்; உலகம் போற்றும் உயர்ந்த எழுத்தாளர்; எண்ணற்ற சிறுகதைகள், நாவல்கள், வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். இவரது 'வானம் வசப்படும்' என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது உடல், புதுவை அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது என்பது தமிழுக்குக் கிடைத்த சிறப்பாகும்.

யாழினி அப்பப்பா! புதுவை படைப்பாளிகள் பலர் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனரே! இவர்கள், தமிழால் இமயம்போல் உயர்ந்து நிற்பவர்கள்.

பூங்குழலி ஆமாம், யாழினி. முத்தமிழ் போற்றும் நம் முன்னோர்களை வணங்குவதோடு அவர்களின் நூல்களையும் நாம் தேடித் தேடிப் படிப்போம்.

அப்பா உங்கள் எண்ணம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. உங்களின் ஆர்வம் எப்போதும் நல்ல வழிகாட்டியாக அமையும். மேலும், புதுவையில் தமிழ் வளர்த்த அறிஞர்கள் பலர் உள்ளனர். அவர்களைப் பற்றி வேறொரு நாளில் பேசுவோம்.

கற்பவை கற்றபின்

- நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்திச் சரியான ஒலிப்புடன் படித்துக்காட்டுக.
- தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய புதுவை படைப்பாளிகளைப் பற்றிய செய்திகளைத் திரட்டுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

JD8ACL

1. 'குயில்பாட்டு' நூலை எழுதியவர் யார் ________________

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) புதுவை சிவம்

2. 'தமிழுக்கும் அமுதென்று பேர்' எனப் பாடியவர் ____________

அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) பிரபஞ்சன்

3. "பாரதிநாள் இன்றடா, பாட்டிசைத்து ஆடடா" எனப் பாடியவர் ________________

அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) திருமுருகன்

4. பாட்டிசைத்து – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ) பாட்டு + இசைத்து ஆ) பாடல் + இசைத்து
இ) பா + இசைத்து ஈ) பாட + இசைத்து

5. மூன்று + தமிழ் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________________

அ) மூன்றுதமிழ் ஆ) முத்துத்தமிழ்
இ) முதுதமிழ் ஈ) முத்தமிழ்

ஆ. பொருத்துக

1. பாரதிதாசன் – கொடி முல்லை
2. தமிழ்ஒளி – பாஞ்சாலி சபதம்
3. பாரதியார் – பாவலர் பண்ணை
4. வாணிதாசன் – மாதவி காவியம்
5. திருமுருகன் – இருண்ட வீடு

இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாரதியார் படைத்த முப்பெருங் காவியங்கள் யாவை?
2. பாரதிதாசன் – பெயர்க் காரணம் தருக.
3. பிரபஞ்சனுக்குச் சிறப்பைச் சேர்த்த நூல் எது?
4. பாவேந்தர் விருதைப் பெற்றவர்கள் யாவர்?
5. தமிழ்ஒளியின் படைப்புகளை எழுதுக.

ஈ. சிந்தனை வினா

தமிழின் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் தொண்டாற்றியுள்ளனர்?

துணைப்பாடம்

இயல் ஒன்பது

நன்மையே நலம் தரும்

தமிழ்மணியின் வீட்டில் அழகிய தோட்டம் ஒன்று இருந்தது. வண்ண வண்ண மலர்களும் பயன் தரும் செடி, கொடிகளும் அங்கு நிறைந்திருந்தன. தோட்டத்தின் அருகிலேயே சில மரங்களும் இருந்தன. அதனால், அந்த இடத்தில் எப்போதும் குளிர்ச்சியும் தூய்மையான காற்றும் இருந்துகொண்டே இருக்கும்.

மாலைநேரத்தில், தமிழ்மணி அங்குள்ள மரக்கிளையில் ஊஞ்சல் கட்டி ஆடுவான். ஒருநாள், அங்கிருந்த ஒரு மரக்கிளையில் பறவையொன்றின் கூட்டைக் கண்டான். பெற்றோரிடம் இதுபற்றிக் கூறினான். அவன் தந்தை, "ஆமாம், தமிழ்மணி! நான் நேற்றே பார்த்துவிட்டேன். இரண்டோ மூன்றோ பறவைக் குஞ்சுகள் இருக்கின்றன. அவற்றின் கீச்…கீச்… ஒலியை நீயும்கூட கேட்கலாம்" என்றார்.

அப்பா, தாய்ப்பறவை இல்லாத நேரத்தில நான் அந்தப் பறவைக் குஞ்சுகளை எடுக்கட்டுமா" என்றான் தமிழ்மணி. உடனே அவன் அம்மா, நீ அப்படியெல்லாம் செய்யக்கூடாது. தாயிடமிருந்து பிரித்துவிட்டால், அவை மிகுந்த துன்பமடையும்" என்று

அறிவுறுத்தினாள். சரி, சரி என்று தலையாட்டிக்கொண்டே விளையாடச் சென்றான் அவன்.

தமிழ்மணிக்கு அன்று பிறந்தநாள். கொண்டாட்டத்துக்குச் சொல்லவா வேண்டும்? போன ஆண்டைவிட இந்த ஆண்டு, அவனுக்கு நண்பர் கூட்டம் அதிகரித்திருந்தது. தன் பெற்றோரிடம் தனக்கு என்னென்ன வேண்டும்? பிறந்த நாள் விழாவுக்கு எத்தனை நண்பர்கள் வருவார்கள்? என்றெல்லாம் அவன் முன்பே சொல்லி வைத்திருந்தான். அதனால், அவன் பெற்றோரும் விழாவுக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

மாலை மூன்று மணியிலிருந்தே நண்பர்கள் தமிழ்மணியின் வீட்டுக்கு வரத் தொடங்கினர். தோட்டத்தைப் பார்த்ததும் அவர்களுக்குக் கட்டுக்கடங்கா மகிழ்ச்சி ஏற்பட்டது. சிலர் அங்கிருந்த பூக்களைப் பறித்துக் கீழே போட்டனர். சிலர், இலைகளைச் சுருட்டி அடுத்தவர் காதில் ஊதினர். ஊஞ்சலில் ஏறியும் இறங்கியும் சிலர் விளையாடினர். சிலர், மரத்திற்கு மரம் ஓடிப்பிடித்து விளையாடினர். தமிழ்மணியும் அவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியாக ஆடிக்கொண்டிருந்தான்.

அச்சமயம், அவன் நண்பன் ரஷீத் மரத்தின் மேலிருந்த பறவைக்கூட்டைப் பார்த்தான். "எல்லாரும் இங்க பாருங்க, சின்னச் சின்னதாப் பறவைக்குஞ்சுகள் இருக்கும்போல, கீச்…கீச்னு சத்தம் கேட்குது" என்றான் ரஷீத். அங்கங்கே விளையாடிக் கொண்டிருந்த நண்பர்கள் எல்லாம் பறவைக்கூடு இருந்த மரத்தினருகே ஒன்றுகூடினார்கள்.

அப்போது, யாரும் எதிர்பாரா வகையில் மற்றொரு நண்பன், பீட்டர் திடீரென அந்தக் கூட்டின் மீது கல்லெறிந்தான். நல்லவேளை! அவன் எறிந்த கல், கிளையில் பட்டு, அருகிலிருந்த பூந்தொட்டியின் மீது விழுந்தது. இதைப் பார்த்ததும், தமிழ்மணிக்குச் சினம் பொங்கியது.

"பீட்டர், ஏன் இப்படி செய்தாய்? அந்தப் பறவைக் குஞ்சுகள் பாவம் இல்லையா? நீ எறிந்த கல் அந்தச் சின்னஞ்சிறிய பறவைக் குஞ்சுகளின்மேல் பட்டிருந்தால் என்னவாயிருக்கும்? உன் வீட்டை யாராவது இடித்துத் தள்ளினால், நீயும் உன் குடும்பத்தாரும் என்ன செய்வீர்கள்? அதுபோன்றுதானே அந்தப் பறவைகளின் நிலையும். இதை ஏன் நீ புரிந்து கொள்ளவில்லை" என்று படபடவெனப் பேசினான் தமிழ்மணி.

தன்னுடைய இழிவான செயலை நினைத்த பீட்டர், என்ன சொல்வதென்று தெரியாமல் தலைகுனிந்து நின்றான். "தமிழ், என்னை மன்னித்துவிடுடா, நான் அறியாமல் செய்த தவற்றை எண்ணி வருந்துகிறேன். இனி எப்போதும் இதுபோன்ற தவறுகளைச் செய்ய மாட்டேன்" என்று வருத்தத்துடன் கூறினான் பீட்டர். அவன் கூறியதைக் கேட்ட மற்ற நண்பர்கள், "அவன்தான் தவற்றை ஒப்புக்கொண்டானே, மன்னித்துவிடுடா, அவன் மட்டும் இல்லே நாங்களும் இதுபோன்று தவறு செய்யமாட்டோம்" என்று கூறினர்.

அப்போது அங்கு வந்த தமிழ்மணியின் பெற்றோர் நடந்ததை அறிந்துகொண்டனர். "நம்மைப்போலத்தான் இவ்வுலகில் எல்லா உயிர்களும் வாழ்கின்றன. அவற்றிடம் நாம் அன்புகாட்ட வேண்டும். மற்ற உயிர்களுக்குச் செய்யும் தீங்கு, நமக்கு நேர்ந்தது போன்று உணர வேண்டும். நமக்கு வலித்தால் அவற்றிற்கும் வலிக்கும் அல்லவா" என்றார் தமிழ்மணியின் தந்தை.

அவர் கூறியதைப் புரிந்துகொண்ட தமிழ்மணியும் நண்பர்களும் "இனி நாங்கள் யாரையும் துன்புறுத்த மாட்டோம்" என்று உறுதி கூறினர். தாங்கள் கூறியதை மெய்ப்பிப்பதுபோல், கொண்டு வந்த தின்பண்டங்களையும் சிறுதானியங்களையும் பறவைகளுக்குக் கொடுத்தனர்.

மேலும், தாம் பார்க்கும் இடங்களிலும் பள்ளியிலும் பறவைகளின் கூடுகளைக் கண்டால், அவற்றைக் கலைக்காமல் பாதுகாப்போம் என்று உறுதி பூண்டனர்.

பறவைகளுக்குத் தானியங்களும் தண்ணீரும் கொடுத்து உதவுவோம் என்று கூறி உறுதி அளித்தனர். **பிறர்க்கு உதவுவதே சிறந்த பிறந்த நாள் பரிசு** என்று கூறித் தமிழ்மணியை அனைவரும் வாழ்த்திச் சென்றனர்.

கற்பவை கற்றபின்

- இக்கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- நீங்கள் விலங்குகளிடம் அன்புகாட்டிய நிகழ்வொன்றை அனைவருக்கும் கூறுக.

மதிப்பீடு

MRWCJW

வினாக்களுக்கு விடையளிக்க.

1. பறவைக் குஞ்சுகளை எடுக்க நினைத்த தமிழ்மணிக்குத் தாய்கூறிய அறிவுரை யாது?
2. தமிழ்மணியின் பிறந்தநாள் விழாவில், பீட்டர் செய்த செயல் யாது?
3. பீட்டரின் செயலைக் கண்ட தமிழ்மணி என்ன கூறினான்?
4. உயிர்களிடத்து அன்பு காட்டுவது குறித்துத் தமிழ்மணியின் தந்தை என்ன கூறினார்?

சிந்தனை வினா

நீங்கள் செல்லும் வழியில் நாய்க்குட்டியொன்று நடக்கமுடியாமல் துன்பப்படுகிறது. அதற்கு நீங்கள் எப்படி உதவுவீர்கள்?

கற்கண்டு

மரபுத்தொடர்கள்

முருகன் அடடே, கபிலா, நீயா? என்னப்பா, இப்பத்தான் வழி தெரிந்ததா? இவ்வளவு நாளாக எங்கே இருந்தாய்?

கபிலன் அட, அதை ஏங்க கேட்கிறீங்க? உங்க பேச்சையெல்லாம் கேட்காம, கிடைத்த நல்ல வேலைய விட்டுவிட்டு வெளியூருக்குப் போனேன். அந்த வேலையத் **தலையில வைத்துக் கொண்டாடினேன்.** ஆனால், **கானல் நீரை** உண்மையென்று நம்பிவிட்டேன். நான் செய்த **இமாலயத் தவறு** இதுதான். **எப்பத்தான் கரையேறுவேனோ** தெரியல. நம்ம ஊர்லய வேலை கிடைக்குமான்னு இப்ப **பஞ்சாகப் பறந்துகிட்டிருக்கேன்.**

முருகன் என்னாச்சு? ஏன் இப்படிப் பேசுகிறாய்?

கபிலன் வேறென்ன? **அவசரக்குடுக்கையா** இருந்ததாலே **ஆகாயத்தாமரையை** உண்மைன்னு நினைச்சேன். இப்ப வருத்தப்படுகிறேன். நல்ல ஊதியம் கிடைக்கும்னு பார்த்தா ஒரே **பித்தலாட்டமா** இருக்கு.

முருகன் சரி, சரி, வருத்தப்படாதே. நீ எங்கேயும் போகவேண்டா. நானே உனக்கு வேலை வாங்கித் தருகிறேன்.

உரையாடலைப் படித்தீர்களா? கபிலன் என்ன பேசினான் என்று புரிந்து கொண்டீர்களா? அவன் தன் பேச்சில் மரபுத்தொடர்களைப் பயன்படுத்தியிருக்கிறான். அவை, உங்களுக்குப்புரியவில்லையெனில், அவற்றின் பொருளை முதலில் காண்போம். பின்னர், மீண்டும் அவன் பேசியதைப் படித்துப் பார்ப்போம்.

மரபுத்தொடர்	உணர்த்தும் பொருள்
தலையில் வைத்துக் கொண்டாடுதல்	பெரிதும் மதித்தல்
கானல் நீர்	கிடைக்காத ஒன்று
இமாலயத்தவறு	பெரிய தவறு
கரையேறுதல்	துன்பத்திலிருந்து மீளுதல்
பஞ்சாகப் பறத்தல்	அலைந்து திரிதல்
அவசரக்குடுக்கை	ஆராயாமல் செயல்படுதல்
ஆகாயத்தாமரை	இல்லாத ஒன்று
பித்தலாட்டம்	ஏமாற்று வேலை

இப்போது, மீண்டும் படித்துப் பார்த்தீர்களா? அவன் கூறியதன் பொருள் புரிந்துவிட்டதல்லவா! இவ்வாறு, நம் பேச்சில் இயல்பாகப் பயன்படுத்தும் சொற்கள் பலவற்றை முன்பே நாம் அறிந்துள்ளோம். இணைமொழிகள் போன்று கருத்தாழமும் நடையழகும் கொண்டவை மரபுத்தொடர்கள். இவை **மரபாகத் தொன்றுதொட்டு வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருவதால், மரபுத்தொடர்கள் என்கிறோம்.**

கற்பவை கற்றபின்

- மரபுத்தொடர்களின் பொருளை அறிந்துகொள்ள முயல்க.
- அன்றாட வாழ்வில் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பேச்சில் காணப்படும் மரபுத்தொடர்களைத் தொகுத்து வருக.
- மரபுத்தொடர்களைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுக.

மதிப்பீடு

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

அ. கீழ்க்காணும் தொடர்களில் ஏற்ற மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நாங்கள்---------------உழவுத்தொழில் செய்து வருகிறோம். (வாழையடி வாழையாக/ விடிவெள்ளியாக)

2. அவனுக்கு நடைமுறை அறிவு எதுவும்கிடையாது. அவன் ஒரு-------- (அவசரக்குடுக்கை/புத்தகப்பூச்சி)

3. பாரதிதாசன் கவிதை உலகில் __________ப் பறந்தார். (பற்றுக்கோடாக/ கொடி கட்டி)

ஆ. பொருத்துக.

1.	கயிறு திரித்தல்	–	பொய் அழுகை
2.	ஓலை கிழிந்தது	–	விடாப்பிடி
3.	முதலைக் கண்ணீர்	–	இல்லாததைச் சொல்லல்
4.	குரங்குப்பிடி	–	மறைந்து போதல்
5.	நீர் மேல் எழுத்து	–	வேலை போய்விட்டது

இ. 'காலை வாரிவிடுகிறது' – இம்மரபுத்தொடர், கீழ்க்காணும் எந்தத்தொடருக்குப் பொருத்தமாக அமையும்?

1. காலம் பொன் போன்றது. இருந்தாலும் நம்மைக்------------------------.
2. காலை எழுந்தவுடன் தூக்கம், நம்மைக்------------------------.
3. மறதி நம்மை அடிக்கடி ------------------------.
4. இளமைக்காலம் நம்மை அடிக்கடி------------------------.

ஈ. மலையேறி விட்டது – இம்மரபுத்தொடர் குறிக்கும் பொருளைத் தேர்ந்தெடுக்க.

1. மாயச்செயல்   2. கதை விடுதல்

3. மாற்றம் பெறுதல்   4. பயனில்லாது இருத்தல்

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. மரபுத்தொடர் என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு தருக.

2. பின்வரும் மரபுத்தொடர்களைக்கொண்டு தொடரமைத்து எழுதுக.

அ) தோலிருக்கச் சுளை விழுங்கி   ஆ) மதில் மேல் பூனை

மொழியை ஆள்வோம்

அ. கேட்டல்

- அன்புடைமை அதிகாரத்திலுள்ள குறட்பாக்களின் பொருளைக் கேட்டறிக.
- மனிதநேயத்தை உணர்த்தும் கதைகளைக் கேட்டு அறிக.

ஆ. பேசுதல்

- உனது வாழ்வின் உயர்வுக்கு எந்தெந்தப் பண்புகள் உதவியாக இருக்கும்? கலந்துரையாடுக.
- அன்னை தெரசாவின் தொண்டுகளைப் பற்றி 5 மணித்துளி பேசுக.

இ. படித்தல்

- அண்ணல் காந்தியடிகள், அன்னை தெரசா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்து அறிக.
- நீங்கள் செய்தித்தாளில் படித்த மனிதநேயச் செயலொன்றை வகுப்பில் கூறுக.

ஈ. எழுதுதல்

1. சொல்லக் கேட்டு எழுதுக.

1. பெண்ணின் பெருமையைப் பாடியவர் பாரதிதாசன்.
2. பாரதிதாசன் பெயரால் விருது வழங்கப்படுகிறது.
3. கவிஞர் வாணிதாசன் புதுச்சேரியைச் சேர்ந்தவர்.
4. வானம் வசப்படும் என்ற நூலை எழுதியவர், பிரபஞ்சன்.

2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. பொறுமை __________
2. நூல்கள் __________
3. தமிழ்மொழி __________
4. அன்பு __________
5. கவிஞர் __________

3. பொருத்துக

1. பாரதியார் – என் தமிழ் இயக்கம்
2. பாரதிதாசன் – கொடி முல்லை
3. வாணிதாசன் – குயில் பாட்டு
4. திருமுருகன் – வானம் வசப்படும்
5. பிரபஞ்சன் – தமிழியக்கம்

4. அண்ணல் காந்தியடிகளின் உள்ளம் கவர்ந்த குஜராத்திய பாடலின் தமிழாக்கம்

தீமை செய்தவர்க்கும் நன்மை செய், எல்லாரும் ஒன்று என்பதைக் கூறும் மனிதநேயப் பாடலைப் படித்து உணர்க.

உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாய்
விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப் படைத்திடுவாய்!
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீ தொழுவாய்!
செம்பான காசுக்குச் செம்பொன்னைத் தந்திடுவாய்!
உயிர்காத்தோன் துன்பத்தை உயிர்கொடுத்து நீ துடைப்பாய்!
செயலாலும் சொல்லாலும் சிந்தையினாலும் பெரியோர்
சின்னஞ்சிறு உதவி செய்தவர்க்கு எந்நாளும்
ஒன்றுக்குப் பத்தாய் உவந்து செய்வர் பேருதவி!
வையத்தார் எல்லாரும் ஒன்றெனவே மாண்புடையோர்
ஐயப்பாடின்றி அறிந்திருக்கும் காரணத்தால்
இன்னா செய்தாரை ஒறுக்க அவர் நாண
நன்னயம்செய்துவிடுவர் இந்த நானிலத்தே!

5. பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.

அழகன், பிரெண்ட்ஸோடு கிரவுண்டுக்குச் சென்றான். அங்கு அனைவருடனும் ஜாலியாகக் கிரிக்கெட் விளையாடினான். அதனால், அவன் மிகவும் டையர்டாக இருந்தான்.

6. பாடலை நிறைவு செய்க.

1) அம்மா இங்கே வந்தாங்க!
அன்பாய் இருக்கச் சொன்னாங்க!
நானும் அதைக் கேட்பேன்
அதன் படியே நடப்பேன்

2) __________ இங்கே வந்தாங்க!
__________ இருக்கச் சொன்னாங்க!
நானும் அதைக் கேட்பேன்
அதன்படியே நடப்பேன்

3) ________________________
____
____
____

4) ________________________
____
____
____

7. பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

கபடி விளையாட்டு மன்றம்

அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியருக்கும் ஒரு நற்செய்தி



இடம்: அண்ணா விளையாட்டு மைதானம், சென்னை.

காலம்: மாணவர் – காலை 9 மணிமுதல் 11 மணிவரை
மாணவியர் – காலை 11 மணிமுதல் 12 மணிவரை

வினாக்கள்

1. நீங்கள் மேலே படித்தது என்ன?
   அ) பாடல் ஆ) கதை இ) விளம்பரம்
2. பயிற்சி அளிக்கப்படும் விளையாட்டு எது?
   அ) மட்டைப்பந்து ஆ) கபடி இ) சதுரங்கம்
3. மாணவர்களுக்கு எத்தனை மணி நேரம் பயிற்சி வழங்கப்படுகிறது?
   அ) 1 மணி ஆ) 2 மணி இ) 3 மணி
4. மைதானம் – இந்தச்சொல்லுக்குரிய பொருள் எது?
   அ) பூங்கா ஆ) அரங்கம் இ) திடல்
5. விளம்பரத்திலிருந்து நீங்கள் புரிந்து கொண்டது என்ன?
   அ) கபடி விளையாட்டுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது.
   ஆ) கபடி விளையாட்டில் மாணவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
   இ) கபடி விளையாட்டு நடைபெறுமிடம் பெரியார் விளையாட்டு மைதானம்.

மொழியோடு விளையாடு

1. குறுக்கெழுத்துப் புதிர்

நா	பா	ர	தி	யா	ர்
வ	ட	மி	து	ரு	வி
அ	ல்	க	ன	வு	ழா
ன்	நூ	கு	ம்	ழி	மொ
பு	றா	லை	த	டு	வி

இடமிருந்து வலம்

1. இவர் எட்டயபுரத்துக் கவிஞர்
2. இது வெண்ணிறப் பறவை
3. தூக்கத்தில் வருவது

கீழிருந்து மேல்

1. புத்தகத்தைக் குறிக்கும் சொல்

வலமிருந்து இடம்

1. பாராட்டி வழங்கப்படுவது
2. மக்கள் பேசுவதற்கு உதவுவது
3. சுதந்திரத்தைக் குறிக்கும் தமிழ்ச்சொல்

குறுக்கும் நெடுக்குமாக

1. முத்தமிழுள் ஒன்று

2. குறிப்புகள் கொண்டு விடை எழுதுக

1. தலைகீழாய் என் வீடு ______________________
2. என் பார்வை கூர்நோக்கு ______________________
3. நானும் ஒரு தையல்காரி ______________________
4. வருமீன் வரும்வரை காத்திருப்பேன் ______________________
5. எனக்கு வீடு கட்டத் தெரியாது. ______________________

3. சொல்லிலிருந்து புதிய சொல்

பாரதியார் ________ ________ ________ ________

மணிக்கொடி ________ ________ ________ ________

பாவேந்தர் ________ ________ ________ ________

நாடகம் ________ ________ ________ ________

விடுதலை ________ ________ ________ ________

4. சொற்களைக் கொண்டு புதிய தொடர் உருவாக்குக.

(எ.கா.) உண்மை நாம் எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும்

1. பெருமை ______________________
2. பாடல் ______________________
3. நாடகம் ______________________
4. தோட்டம் ______________________
5. பரிசு ______________________

5. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடரமைக்க.

1. பெருமை தமிழுக்குப் பாரதிதாசன் சேர்த்துள்ளார்.

   பாரதிதாசன் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

2. பறவை அழகான புறா ______________________

3. தமிழ் உண்டாகிறது மேல் ஆர்வம்

____

4. போற்றும் உலகம் எழுத்தாளர் உயர்ந்த

____

அறிந்து கொள்வோம்

மனிதநேயம்

அன்பென்று கொட்டு முரசே – மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் – இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

நிற்க அதற்குத் தக

- உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவேன்.
- நல்ல நல்ல நூல்களைத் தேடிப் படிப்பேன்.
- மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.

செயல் திட்டம்

- தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய கவிஞர்களுள் ஐவரின் படத்தை ஒட்டி, ஒவ்வொருவரையும் பற்றி 5 வரிகள் எழுதி வருக.

அகரமுதலி

அம்மி	–	அரைக்கும் கல்
அலுப்பு	–	களைப்பு
அஞ்சா நெஞ்சம்	–	மனஉறுதி
அதிகரித்தல்	–	மிகுதியாதல்
அனுமதி	–	இசைவு
அநியாயம்	–	நேர்மையின்மை
ஆணை	–	கட்டளை
ஆயுதங்கள்	–	கருவிகள்
ஆல்	–	ஆலமரம்
ஆவல்	–	விருப்பம்
ஆவேசமாக	–	சினங்கொண்டு
ஆனந்தம்	–	மகிழ்ச்சி
இம்மை	–	இப்பிறப்பு
இரவல்	–	கடன்
இளகிய	–	இரக்கமுள்ள
இன்னல்	–	துன்பம்
உகந்த நிலம்	–	ஏற்ற நிலம்
ஊழ்வினைப் பயன்	–	விதிப்பயன்
எஞ்சியிருந்த	–	மீதியிருந்த
எழிலான	–	அழகான
கஞ்சத்தனம்	–	பிறர்க்குக் கொடுக்க மனமில்லாத
கட்டுக்கடங்கா	–	அளவில்லாத
கலகம்	–	சண்டை
களர்நிலம்	–	பயிர் செய்ய உதவாத நிலம்
களித்தாள்	–	மகிழ்ந்தாள்
களிறு	–	ஆண் யானை
கழை	–	கரும்பு
கனிவான பேச்சு	–	இனிமையான பேச்சு
கும்பிடு	–	வணங்கிடு
குயவன்	–	மண்பாண்டம் செய்பவர்
குளிரிள	–	குளிர்ச்சியான
குன்றாப் புகழ்	–	குறையாத புகழ்
கெட்டில்	–	நீர் கொதிக்க வைக்கும் கலம்
கொடைப்பண்பு	–	வள்ளல் தன்மை
கோழை	–	வீரமில்லாதவன்
கைம்மாறு	–	பதிலுதவி
சன்மானம்	–	வெகுமதி
சாதம்	–	சோறு
சாதனை	–	வெற்றி
சிந்தை	–	எண்ணம்
செருக்கு	–	தலைக்கனம்
செல்வந்தர்	–	பணக்காரர்

சேகரித்தல்	–	திரட்டுதல்
சோர்ந்து	–	களைத்து
தகனம்	–	எரியூட்டுதல்
தண்டித்தல்	–	ஒறுத்தல்
தண்டோரா	–	முரசறைந்து அறிவித்தல்
தரணி	–	உலகம்
தாழ்மை	–	தாழ்வு
தாளாண்மை	–	முயற்சி
திடமான	–	உறுதியான
துயர்	–	துன்பம்
நங்கை	–	பெண்
நல்குதல்	–	வழங்குதல்
நனிபசு	–	மிகுதியாகப் பால் தரும் பசு
நாணயம்	–	நேர்மை
நானிலம்	–	உலகம்
நீடுழி	–	நெடுநாள்
நெசவு	–	துணி நெய்தல்
பஞ்சம்	–	வறட்சி
பரிவு	–	அன்பு
பற்று	–	விருப்பம்
பாண்டம்	–	கலம்
பாதிப்பு	–	விளைவு
பார்	–	உலகம்
பிரதேசம்	–	நாடு
புரவி	–	குதிரை
பேழை	–	பெட்டி
பொலிவு	–	அழகு
மகரம்	–	மீன்
மரியாதை	–	மதிப்பு
மாண்பு	–	பெருமை
மாரி	–	மழை
மிளிர்தல்	–	ஒளிர்தல்
முற்றல்	–	தேவைக்கு அதிகமாக முற்றிய காய்
மேனி	–	உடல்
மைதானம்	–	திடல்
வன்மை	–	வலிமை
வாளாண்மை	–	முயற்சி
விண்ணமுதம்	–	மழைநீர்
விருது	–	பட்டம்
வியாபாரி	–	வணிகர்
விவசாயி	–	உழவர்
விவாதம்	–	சொற்போர்
வேளாண்மை	–	உழவு
வையத்தார்	–	உலகத்தார்

கற்றல் விளைவுகள்

கேட்டல்	பேசுதல்	படித்தல்	எழுதுதல்
• விழிப்புணர்வுப் பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டுப்புரிந்து கொள்வர். • சொற்போர், கலந்துரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப்புரிந்து கொள்வர். • எளிய செயல் திட்டங்களைக் கேட்டுப் புரிந்து செயல்படுவர். • பல்வேறு பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவர். • அறிந்த, எளிய தலைப்புகளில் இயல்பாகவும் சரளமாகவும் பேசுவர்.	• கேட்ட, படித்த பகுதியின் மையக்கருத்தினைக் கூறுவர். • கேட்ட, படித்த பல்வேறு இலக்கியங்கள்பற்றிப் பேசுதல், விவாதித்தல், பகுப்பாய்வு செய்வர். • தன்னைச்சுற்றி நிகழும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிவர். • சூழ்நிலைகளையும் நிகழ்வுகளையும் விவரிப்பர். • படித்த, கேட்ட கருத்துகள் பற்றிக் கருத்தாடல் செய்யவும் வினாக்கள் எழுப்பவும் தம் கருத்துக்கு/ நோக்கத்திற்கு ஆதரவாகவும் விளக்கமளிப்பர். • நாடகங்கள், சொற்போர் முதலான நிகழ்வுகளில் பங்கேற்றுப் பேசுவர். • மொழியின் நுட்பமான கூறுகளை மனத்திற்கொண்டு தங்களுக்கேயுரிய மொழிநடையைக் கட்டமைப்பர்.	• செய்தி, நிகழ்ச்சி அறிவிப்புகள், நிகழ்ச்சிநிரல், அழைப்பிதழ்கள், துண்டறிக்கை/ வெளியீடுகள் ஆகியவற்றைப் படித்துப் பொருளுணர்வர். • கதை, உரையாடல், நாடகம், கடிதம் ஆகியவற்றை உரிய உணர்ச்சியுடனும், குரல் ஏற்றஇறக்கத்துடனும் பொருள் விளங்குமாறு படிப்பர். • உரைப்பகுதிகளைப் படித்து அதிலிருந்து கேட்கப்படும் பல்வேறு வகையான வினாக்களுக்கு விடையளிப்பர். • எளிய பட விளக்கங்கள், எண் விவர அறிவிப்புகள், வரைபடங்கள் ஆகியவற்றைப் படித்து, பொருள் உணர்வர். • சொற்களின் பொருண்மையை அகரமுதலிகளில் கண்டறிவர். • செய்தித்தாள்கள், கதை நூல்கள் ஆகியவற்றைப் படிப்பர். • .பல்வேறு துறை சார்ந்த சொற்களைப் புரிந்துகொண்டு பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவர்.	• உரைநடை / துணைப்பாடங்களில் இடம்பெறும் இன்றியமையாச் சிக்கல்களை எழுத்துவடிவில் வெளிப்படுத்துவர். • உரை/ உரைப்பகுதியைச் / சொல்லக் கேட்டு உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுவர். • செய்யுள், பாடல்களை அடிபிறழாமல் எழுதுவர். • சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளை உற்று நோக்கி, அவைசார்ந்த தமது கருத்துகளை எழுத்தில் பதிவு செய்வர். • நாட்குறிப்பு எழுதுதல் • நிகழ்வுகளை விவரித்து எழுதுதல். • பல்வேறு சூழல்களுக்கேற்ப எழுதும்போது, மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு, பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி, கவனமாக எழுதுவர். • கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கவிதைகள், கடிதங்கள் எழுதுவர். • விண்ணப்பக் கடிதம் எழுதுவர். • குறிப்புச் சட்டகத்தைப் பயன்படுத்தி, கட்டுரை எழுதுவர்.

நடைமுறை இலக்கணமறிதல்	கற்கக் கற்றல்	சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும்
• சொற்றொடர் அமைப்புமுறை (எழுவாய், செயப்படுபொருள், பயனிலை) அறிவர். • மூவிடம் அறிதல் (தன்மை, முன்னிலை, படர்க்கை) • உரிய இணைப்புச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் சேர்த்து எழுதுவர். (ஏனெனில், அப்படியானால், அப்படியில்லாவிட்டால்)	• எளிய அகரமுதலியைப் பயன்படுத்துவர். • செய்தித்தாள்கள், கதை நூல்கள் படிப்பர். • கணினியைப் பயன்படுத்தி நாடகங்கள், சொற்போர், உரைகள், கேட்பர். • இணையத்தில் தேடிப் படிப்பர்.	• கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர் • பழமொழிகள், மரபுத் தொடர்கள் • நேரிணை (உயர்ந்தோங்கிய) எதிரிணைச் (ஏற்ற இறக்கம்) சொற்களைப் பயன்படுத்துதல் • பிற நாடுகள், உலகத் தலைவர்கள், இன்றியமையா இடங்களின் பெயர்கள் • ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் • பலதுறை சார்ந்த கலைச் சொற்கள் • அறிவியல் கலைச் சொற்கள் • சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படித்தல் • சிறுவர்களுக்கான இலக்கியங்கள்
படைப்புத் திறன்கள்	**விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுவர்**	**வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுத்துவர்**
• குறிப்புகளைக் கொண்டு கதைகளை உருவாக்குவர். • பாதிக்கதையைத் தொடர்ந்து மீதிக் கதையைக் கூறி முடிப்பர். • பாடல் அடிகளை நீட்டிக் கொண்டே செல்வர். • நிகழ்ச்சியைச் செய்தியாக்குவர். • தலைப்புச் செய்தியை விரித்து எழுதுவர். • விளம்பரங்கள், அறிவிப்புகள், முழக்கத் தொடர்கள் உருவாக்குவர். • குறிப்பிட்ட தலைப்பில் கதை, கவிதை, உரை எழுதித் தயாரித்தல்/ படித்துக்காட்டுவர்.	• காலம் தவிராமை • விதிகளைப் பின்பற்றுதல் • தூய்மை பேணுதல் • பொருள்களைப் பாதுகாத்தல் • பிறர்க்கு உதவுதல் • பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் • கூட்டுணர்வு • நட்புணர்வு • உண்மை பேசுதல் • சேமிப்பு உணர்வு • சிக்கனம் • நேர்மை • நன்றியுணர்வு • தன்னம்பிக்கை • ஒற்றுமை • விட்டுக் கொடுத்தல் • நாட்டுப்பற்று • விடாமுயற்சி • மொழிப்பற்று • உழைப்பு • அறிவியல் மனப்பான்மை • இயற்கையை நேசித்தல் • சகோதரத்துவம்	• தன்னை அறியும் திறன் • சிக்கல் தீர்க்கும் திறன் • முடிவெடுக்கும் திறன் • கூர்சிந்தனைத் திறன் • படைப்பாக்கச் சிந்தனைத் திறன் • சிறந்த தகவல் தொடர்புத் திறன் • இணக்கமான உறவுக்கான திறன்கள் • பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன் • உணர்வுகளைக் கையாளும் திறன் • மன அழுத்தத்தைக் கையாளும் திறன்

தமிழ் – ஐந்தாம் வகுப்பு
தமிழ் ஆக்கம்

கல்வி ஆலோசகர்

முனைவர். பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

மேலாய்வாளர்கள்

திருமதி ஆ.சே.பத்மாவதி,எழுத்தாளர்,
சென்னை.

திருமதி பா. மலர்விழி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

திரு சி. பன்னீர்செல்வம்,
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை மாவட்டம்.

திரு இல. சீனிவாசன், முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். கா.சா. மொழியரசி, முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

திரு ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

தே.விமலா தேவி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

வரைபடம்

கா. தனஸ் தீபக் ராஜன்
கா. நலன் நான்சி ராஜன்
வை.மை.பிராங்க் டஃப்
மதன் கங்காதரன்
ரா. ஷாலினி

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்

கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ் ப

காமாட்சிபாலன் ஆறுமுகம்

வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்
ரமேஷ் முனிசாமி

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி அர. அனுசுயா தேவி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையாம்பாளையம்,
கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

திருமதி பெ. முருகராணி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர்,
வேப்பூர் ஒன்றியம், பெரம்பலூர் மாவட்டம்.

திருமதி க. மல்லிகா, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

திரு. பா.ச. குப்பன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திரு. ஆ. மாணிக்கம், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி,
அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

திருமதி. ந. பரிமளா, தலைமைஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

திரு. வெ. ராஜா, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம், சேலம்.

திரு. கு. மனத்துணைநாதன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

திரு. பெ. கார்த்திகேயன், இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை,
நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

திரு. ப. சக்திவேல், இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, பூங்குளம்பட்டி,
கொல்லிமலை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.

திரு. மு. ராஜா, வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்
திருவாலங்காடு ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

இரா. ஜெகநாதன், இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

ஆ.தேவி ஜெஸிந்தா, ப.ஆ, அ.உ.நி.பள்ளி,
என்.எம்.கோவில், வேலூர்

வ. பத்மாவதி, ப.ஆ, அ.உ.நி. பள்ளி,
வெற்றியூர், திருமானூர், அரியலூர்.

அட்டை வடிவமைப்பு
கதிர் ஆறுமுகம்

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் அழகிய மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: